
திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஜனவரி 2020, விலை ரூ.5/-



மூவுலகுக்கும் நாதனே! பரமா!
தண்வேங்கடம் மேகின்றாய்!
- நம்மாழ்வார்

ஜனவரி 06
வைகுண்ட ஏகாதசி





23-11-2019 முதல்
01-12-2019 வரை
நடைபெற்ற திருச்சானூர்

**ஸ்ரீபத்மாவதி தாயார்**
**வருடாந்திர பிரம்மோத்ஸவ**

திருக்காட்சிகள்















யுத$_4$ாமந்யுச்ச விக்ராந்த
உத்தமௌஜாச்ச வீர்யவாந் |
ஸௌப$_4$த்$_3$ரோ த்$_3$ ரௌபதே$_2$யாச்ச
ஸர்வ ஏவ மஹாரத$_2$ா: ||

பராக்கிரமம் மிகுந்த யுதாமன்யுவும்,
பலசாலியான உத்தமௌஜாவும்,
சுபத்திரையின் குமாரன் அபிமன்யுவும்,
அவ்வாறே திரௌபதியின் ஐந்து
புதல்வர்களும் அவர்கள் எல்லோரும்
மகாரதிகளாக இருக்கிறார்கள்.

– ஸ்ரீமத் பகவத் கீதை 1–6



புரிந்துமலரிட்டுப் புண்டரீகப்பாதம்
பரிந்துபடுகாடுநிற்ப - தெரிந்தெங்கும்
தானோங்கிநிற்கின்றான் தண்ணருவிவேங்கடமே
வானோர்க்கும்மண்ணோர்க்கும் வைப்பு

திருவடித் தாமரைகளில் அன்பு பூண்டு,
புஷ்பங்களைப் பணிமாறி மங்களாசாஸநம்
பண்ணி, வெட்டி வீழ்த்த மரங்கள் போலே
கால்பேராமல் நிற்கும்படியாக சகல
பிரதேசங்களிலும் விளங்கி, குணங்களால்
பெருமை பெற்று எழுந்தருளியிருக்கும்
எம்பெருமானுடையதாய், குளிர்ந்த
அருவிகளை உடைத்தான திருமலையே நித்ய
ஸூரிகளுக்கும், நிலத்தேவரான
ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் நிதியாயிருக்கும்.

- நான்முகன் திருவந்தாதி - 45



# ஸ்வஸ்தி ஸ்ரீ விகாரி வருஷம் மார்கழி/தை மாதம் தக்ஷிணா/உத்தராயணம்
## ஹேமந்த்ருது சகவருஷம் 1941 கலியுகாதி 5120 ஜனவரி 2020

| ஆங் | தமிழ் | கிழமை | திதி | நட்ச. | விசேஷம் |
|---|---|---|---|---|---|
| 1 | 16 | புதன் | சஷ் | பூரட் | வ்யசிரா, சஷ்டி விரதம். |
| 2 | 17 | வியா | சப் | உத்ரட் | சுபநாள். இயற்கைச் சீற்றம் த்ரிதினஸ்ப்ருக். |
| 3 | 18 | வெள்ளி | அஷ் | உத்ரட் | மாததுர்காஷ்டமி. |
| 4 | 19 | சனி | நவ | ரேவ | ... |
| 5 | 20 | ஞாயிறு | தச | அஸ் | சுபநாள், திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி சன்னதியில் தெப்போத்ஸவம் ஆரம்பம், திருமலையப்ப ஸ்வாமி சன்னதியில் சிறிய சாத்துமுறை, திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி இராமச்சந்திரத் தீர்த்தக்கரை மண்டபத்தில் எழுந்தருளுதல். |
| 6 | 21 | திங்கள் | ஏகா | பர | புத்ரத-வைகுண்ட ஏகாதசி, முக்கோட்டி ஏகாதசி, திருமலையப்ப ஸ்வாமி சன்னதியில் இராப்பத்து தொடக்கம், வேத பாராயணம் தொடக்கம், கிருத்திகை. |
| 7 | 22 | செவ் | துவா | கார் | கூர்மத்வாதசி, ஸ்வாமி புஷ்கரணி தீர்த்த முக்கோட்டி, ஆண்டாள் நீராட்டோத்ஸவம் ஆரம்பம். |
| 8 | 23 | புதன் | திர | ரோகி | பிரதோஷம், சுக்ரன்-கும்பம். |
| 9 | 24 | வியா | சசி | மிரு | ஆருத்ரா அபிஷேகம், திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம் நிறைவு. |
| 10 | 25 | வெள்ளி | பௌ | திரு | ஆருத்ரா தரிசனம். குரு.கி.உதயம், திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆருத்ரா மஹோத்ஸவம் |
| 11 | 26 | சனி | பிர | புன | புஷ்ய பஹுள, சந்திர கிரஹணம், வைத்-சிரா தனியநாள். குரு.கி.உதயம், திருமலையப்ப ஸ்வாமி பிரணய கலக மஹோத்ஸவம். |
| 12 | 27 | ஞாயிறு | துவி | பூச | கூடாரைவல்லி, சுபநாள். |
| 13 | 28 | திங்கள் | திரு | ஆயி | சங்கடஹர சதுர்த்தி, புதன்-மகரம், ஆண்டாள் நீராட்டோத்ஸவம் நிறைவு. |
| 14 | 29 | செவ் | சது | மக/பூர | போகி, சூரியன் மகரப் பிரவேசம், |
| 15 | 1 | புதன் | பஞ் | உத் | தைப் பொங்கல் கரிநாள். சஷ்டி தியாகராஜ சுவாமிகள் ஆராதனை, திருமலையப்ப ஸ்வாமி சன்னதியில் பெரிய சாத்துமுறை. |
| 16 | 2 | வியா | சஷ் | ஹஸ் | மாட்டுப் பொங்கல், கரிநாள். திஸ்ரோஷ்டகா, ஆண்டாள் பரிணயோத்ஸவம், திருமலையப்ப ஸ்வாமி பார்வேட்டி மண்டபத்திற்கு எழுந்தருளுதல், கூரத்தாழ்வான் திருநட்சத்திரம். |
| 17 | 3 | வெள்ளி | சப்/அஷ் | சித் | அஷ்டகா, காலாஷ்டமி, க்ஷய திதி, கரிநாள். காணும் பொங்கல். |
| 18 | 4 | சனி | நவ | சுவா | அன்வாஷ்டகா. |
| 19 | 5 | ஞாயிறு | தச | விசா | திருமலையப்ப ஸ்வாமி சன்னதியில் அத்யயனோத்ஸவம் நிறைவு. |
| 20 | 6 | திங்கள் | ஏகா | அனு | ஷதிலா ஏகாதசி சுபநாள். |
| 21 | 7 | செவ் | துவா | கேட் | பிரதோஷம், தனியநாள். |
| 22 | 8 | புதன் | திர | மூல | ........ |
| 23 | 9 | வியா | சசி | பூரா | மாத சிவராத்ரி, உரம், பூச்சி கொல்லிகள் தயாரிக்க. |
| 24 | 10 | வெள்ளி | அமா | உத்ரா | அமாவாசை, சனி மகரப் பிரவேசம். கா.9ம.57நி.மௌனி அமாவாசை, புரந்தரதாஸர் ஆராதனை. |
| 25 | 11 | சனி | பிர | திவோ | மாகசுத்த, கரிநாள், திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி சன்னதியில் அத்யயனோத்ஸவம் ஆரம்பம், தேவுனிகடபா ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 26 | 12 | ஞாயிறு | துவி | அவி | சந்திர தரிசனம், வ்ய-சிரா வாஸ்து கா.10.06-10.42. த்ரிதினஸ்ப்ருக், இந்தியக்குடியரசு தினம், தேவுனிகடபா ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம். |
| 27 | 13 | திங்கள் | திரு | அவி | விருத்தி திதி. |
| 28 | 14 | செவ் | திரு | சத | திலசதுர்த்தி அங்காரக சதுர்த்தி, நீர்வாழ தாவரங்கள், உயிரினங்கள் தொடர்பான பணிகள் மேற்கொள்ள. |
| 29 | 15 | புதன் | சது | பூரட் | தனியநாள், வஸந்த பஞ்சமி. |
| 30 | 16 | வியா | பஞ் | உத்ரட் | சுபநாள். |
| 31 | 17 | வெள்ளி | சஷ் | ரேவ | கரிநாள், புதன். மே.உதயம். சனி கி.உதயம். |





*சிறப்பு ஆசிரியர் :*
**திரு. அனில்குமார் சிங்ஹால்,** *ஐ.ஏ.எஸ்.,*
*செயலாட்சித் தலைவர், தி.தி.தே.*
*பிரதான ஆசிரியர் :*
Dr. K.**ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,**எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு.** R.V. **விஜயகுமார்,** பி.ஏ. பி.எட்.,,
*துணை செயலாட்சித் தலைவர்*
*(பதிப்பகம் மற்றும் அச்சகம்), தி.தி.தே.,*
*தேவஸ்தான அச்சகம், திருப்பதி.*
டி.டி.பி.
*பிரதான ஆசிரியர் அலுவலகம்,*
*தி.தி.தே. திருப்பதி.*
*புகைப்படங்கள் :*
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**



***பிரதிகளுக்கு:***
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
**0877- 2264543, 2264359**
**ஆசிரியர் : 2264360**


நீங்கள் ஸப்தகிரி இதழை **www.tirumala.org**யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri_helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர். -பிரதான ஆசிரியர்



மலர் 50 இதழ் 04


# உள்ளுறை

பக்கம்


**தைப்பொங்கலும் தமிழர் திருநாளும்** 7
*- முனைவர். ச. செந்திலாண்டவன், அரும்பாக்கம்.*
**திருமங்கையாழ்வார் போற்றும் திருமலை** 10
*- கலைமாமணி, முனைவர் இரா.வ. கமலக்கண்ணன், காஞ்சிபுரம்.*
**வைகுண்ட ஏகாதசி** *- திருமதி. பிரேமாநந்தகுமார், ஸ்ரீரங்கம்.* 14
**ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், தேவுனி கடபா** 17
*- திருமதி. ஏ. அருணா, திருப்பதி.*
**திவ்ய திருத்தலம்–திருமலை** 19
*- திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி.*
**அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்** 21
*- உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.*
**108 திவ்யதேச வைபவம் – திருக்கோஷ்டியூர்** 24
*- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.*
**ஆண்டாள் போற்றும் கோவிந்தன்** 31
*- டாக்டர் கலியன் சம்பத்து, சென்னை.*
**ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்–அஜாமிளன் வரலாறு** 35
*- டாக்டர். சி.கோவிந்தசாமி, புத்தூர்.*
**ஸ்ரீபுரந்தர தாஸர்** *- திரு. ஆர். கண்ணன், பெங்களுரு.* 37
**பகவத் கீதை–இளைய சமுதாயம் – தலைமையின் குணங்கள்** 39
*- திரு. வ.ஒ. சுரேஷ், சத்திரவாடா.*
**சிறார் வாக்கு : கூரத்தாழ்வானின் ஆசார்ய பக்தி** 41
*- செல்வன். பி. முரளிபிரசன்ன, சேத்துபட்டு.*
**ஸம்ஸ்க்ருதம் அறிவோம்** 42
*- ஸ்ரீ.உ.வே. பி.டி. சேஷாத்ரி ஸ்வாமி, சென்னை.*
**ஆயுர்வேதம் – வீண் பொருட்களில் சிறந்த மருத்துவம்** 45
*- திருமதி. வி.உஷா, திருப்பதி.*
**2020, ஜனவரி மாத ராசி பலன்** 48
*- திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர்.*
**திருப்பதியில் கீதா ஜெயந்தி உற்சவம்** 50
*- திரு. வ.ஒ. சுரேஷ், சத்திரவாடா.*


## அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : **ஆனந்த நிலைய ஸ்ரீமஹாவிஷ்ணு**
பின்னட்டை : **திருவுக்கும் திருவான திருமாமகள்**

# உத்தராயண புண்ணியகாலம்

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது சான்றோர் வாக்கு. தை பிறந்தாலே அனைவரின் மனதிலும் ஒரு புத்துணர்ச்சி உண்டாகிறது. இத்தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் தை முதல் நாளில் உலகமெங்கும் உள்ள தமிழர்களால் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இதனை கலித்தொகையும் "தையில் நீராடி தவம் தலைப் படுவாயோ" எனக்குறிப்பிடுகிறது. பொங்கல் என்றாலே எங்கும் புது மணம் கமழ்கிறது. இந்நந்நாளில் தமிழர்கள் தங்கள் இல்லந் தோறும் வண்ணமயமான கோலங்களை இட்டும், புத்தாடைகள் அணிந்து, சிறியோர் பெரியோர் என அனைவரும் மகிழ்ச்சிப் பொங்க, தங்கள் இல்லங்களில் புதுப்பானையில் பொங்கலிட்டு சூரிய பகவானை வழிபட்டு மகிழ்வது வழக்கம்.

சூரியன் சகல தேவதைகளின் வடிவமாவார். கண் கண்ட தெய்வமும் சூரியனே ஆவார். அசையும் பொருட்கள் அனைத்திற்கும் சூரியனே உயிர் என்றும், பல நோய்களை சூரியனே குணப்படுத்துவதாக வும் வேதங்கள் கூறுகின்றன. அந்த சூரிய பகவான் தனுசு இராசியிலிருந்து மகர இராசிக்கு பிரவேசிக்கும் நாளே மகர சங்கராந்தி நாளாகும். அதாவது சூரியன் தென் திசையிலிருந்து வடதிசை நோக்கி பயணிக்கும் நாளாகும். இந்நாளையே உத்தராயண புண்ணிய காலம் என்று கூறுவர். அதுமட்டுமின்றி சங்கராந்தி நாள் துவக்கத்திலிருந்து தான் சூரியன் வடதிசையில் உள்ள ஊர்த்துவ லோகத்தில் வசிப்பவர்களுக்கு இருளைப் (அக்ஞானம்) போக்கி, வெளிச்சத்தை (ஞானம்) அளித்து சஞ்சரிக்கின்றார். எனவே தான் உத்தராயண புண்ணிய காலம் புனிதமானது என்பர். ஆதலால்தான் பீஷ்மாசாரியாரும், உத்தராயண புண்ணியகாலம் வரும் வரை உயிர் துறக்காமல் காத்து இருந்ததாக மகாபாரதம் கூறுகின்றது. இந்தப் பொங்கல் திருநாளின் மகிமை என்னவெனில் அனைவரின் மனதிலும் மகிழ்ச்சி பொங்கும் காலம்! உழவனும் ஆண்டு முழுவதும் தான் பாடுபட்டதற்கான பலனைப்பெற்று அதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்தி ஆனந்தமடையும் காலம்! ஆரோக்கியம் பெருகி ஆனந்தம் கொள்ளும் காலம்!

பொங்கலுக்கு அடுத்து சிறப்பாகக் கொண்டாடப்படுவது மனிதனுக்காக பல விதங்களில் உழைக்கும் மாடுகளுக்கான மாட்டுப் பொங்கலாகும். படைப்பிற்கு முதற் காரணமே பசுக்களாகும். பசுக்கள் மிகவும் பவித்திர மானவைகளாகும். பசுக்களின் உடலில் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு தேவதை வசிப்பதாக புராணங்கள் கூறுகின்றன. பசுக்களை தொட்டு வணங்கினாலே போதும் அனைத்து தீர்த்தங்களிலும் நீராடியதற்கும், அனைத்து தேவதைகளையும் வணங்கியதிற்கான பலனை அளிக்கின்றது. பசுக்களை பராமரிப்பதற் காகவும், பாதுகாப்பதற்காகவும் என தி.தி.தேவஸ்தானம் பல திட்டங்களை வகுத்தும், செயல்படுத்தியும் பசுக்களை பாதுகாத்து வருகின்றது. நாமும் நம் இந்திய கலாச்சாரத்தின் ஒரு பகுதியாகத் திகழும் பசுக்களை காப்போம். அதன் வாயிலாக நம்மை நாம் மேன்மைப்படுத்திக் கொள்வோம்.

ஸப்தகிரி இதழ் தோன்றி 50 அகவை 2020 ஆம் ஆண்டு மே மாதம் நிறைவடைவதை முன்னிட்டு 2020 ஜனவரி இதழ் முதல் ஸப்தகிரி மாத இதழில் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட உள்ளன. குழந்தைகளுக்காக தனிப்பட்ட முறையில் 'பாலஸப்தகிரி' எனும் இருபது பக்க இலவச இணைப்பினைக்கூட ஒவ்வொரு மாதமும் அளிக்க திருமலை திருப்பதி தேவஸ்தானம் நிர்ணயித்துள்ளது. இன்று இடப்படும் விதைகளே நாளை மரங்களாகின்றன. நம் நாட்டின் எதிர்காலம் சிறந்து விளங்க குழந்தைகள் மனித நேயத்தோடு வளருதல் எவ்வளவோ அவசியம். திருமலை திருப்பதி தேவஸ்தானம் இப்பாதையில் அடி எடுத்து வைக்க எண்ணுகிறது. தமிழகம் ஈந்த ஆழ்வார்களென்ன, கன்னட தாசர்களென்ன, இந்து மதக் கடவுள்களென்ன, சிறார் நீதி, சித்திரக்கதை என, அனைத்தும் எளிய நடையில் அவ்விணைப்பில் இனி வரவுள்ளன. குழந்தைகளுக்கு நம்முடைய பண்பாடு, தர்மம், புராணம், இதிகாசங்களைக் குறித்த சிந்தனை உருவாக பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு இதிகாச புராண ஞானத்தை புகட்ட ஸப்தகிரி மாத இதழில் வருகின்ற சிறார் பகுதியினைப் படித்து ஊக்கப்படுத்துங்கள். நீங்களும் படித்து குழந்தைகளிடையே ஆன்மீகச் சிந்தை னையைத் தூண்டுங்கள்.

சுற்றுப்புறச் சூழலை கருத்தில் கொண்டு பிளாஸ்டிக் உறைகளை தவிர்த்து, அதற்கு பதில் காகிதத்தால் ஆன உறையில் ஸப்தகிரி இதழினை பக்தர்களுக்கு அளிக்கப்பட உள்ளது. வாசகர்கள் மாற்றத்தை வரவேற்பர் என நம்புகிறோம்.





# தைப் பொங்கலும் தமிழர் திருநாளும்

முனைவர் ச. செந்திலாண்டவன்,
அரும்பாக்கம், 94445 82856



''ஞாயிறுபோற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!
காவிரிநாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேருவலம் திரிதலான்!

–சிலப்பதிகாரம்

என்று சிலப்பதிகாரம் சூரிய வழிபாட்டை முன்னிறுத்துகின்றது. சங்ககாலம் முதற்கொண்டே ஞாயிறு வழிபாடு தமிழர் பண்பாட்டில் இழைந்திருக்கின்றது!

மழை வேண்டி இந்திரவிழா எடுத்தது போன்றே, உலகம் இயங்குவதற்குக் காரணமான சூரியனை வழிபட்டு, சூரிய ஆற்றலால் விளைந்த பயிர்பச்சைகளை, அறுவடை செய்து, சூரியனுக்கே படைக்கும் அறுவடைத் திருவிழாதான் பொங்கல் விழா! தமிழர், தைத்திங்களுக்கு முன்னதாகவே அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர்களைப் பக்குவமாக்கிப் புத்தரிசி செய்து வைப்பர். தை மாத முதல் நாளில், வீட்டு வாசலில் முற்றத்தில் பசுஞ்சாண நீர் தெளித்துக் கோலமிட்டு, மாவிலை தோரணம் கட்டிப் புதிதாகச் செய்யப்பட்ட மண்ணடுப்பில் புதுப்பானை வைத்து, அப்பானை நிறையப் பால் வார்த்தும், பால் பொங்கி வருகையில், புத்தரிசியைப் பெய்து, சர்க்கரை சேர்த்து, இனிப்பான பொங்கல் பொங்கிச் சூரியனுக்குப் படையல் போட்டு வழிபடுவதும், பின்னர் சுற்றம் சூழ இனிதிருந்து உண்டு மகிழ்ந்து நெகிழ்வது தான் பொங்கல் விழா! இது சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் விழா எனில் மிகையில்லை! வேளாண் மக்களும், ஏனையோரும் வேளாண்மைக்கு உதவியாக இருக்கும் மாடுகளைச் செல்வமாகவே போற்றுவர்!

தைப்பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கல் என அழைக்கப் பெறும்! இந்நாளில் மாடுகளைக் குளிப்பாட்டி, கொம்பு சீவி, வண்ணம் பூசி, தொப்பிகள் அணிவித்து, குஞ்சமும் சலங்கையும் நெட்டி, மாலைகளும் கட்டி, மஞ்சள் குங்குமத்திலகம் தீட்டி, அலங்காரம் செய்து, தொழுவங்களின் வெளிப்புறத்துக் கவணைகளில் வரிசையாகக் கட்டி, அவற்றிற்கு நேரே நிலம் பெருக்கி, நீர் தெளித்துக் கோலமிட்டு, புத்தடுப்புகளில் புதுப்பொங்கல் பொங்கிக் காய்கனிகளுடன் மாடுகளுக்குப் படையல் செய்து, கற்பூரம் காட்டி, மூன்று முறை மணி, தாளங்களுடன் சுற்றி வந்து, கீழே விழுந்து வணங்கிப் படையல் செய்த பொங்கலை வாழை இலைகளில் இட்டு மாடுகளுக்கு வயிறாரத் தருவர்! பெரும்பாலும் மாட்டுப் பொங்கல் காலையில் மாடுகளைக் குளிப்பாட்டுவதில் ஆரம்பித்து மாலை வரை நீண்டு

ஓம் புஷ்ட்யை நம:

விடும்! இம்மாட்டு பொங்கலைப் "பட்டிப் பொங்கல்" என்றும் அழைப்பார்கள். *"பட்டி பெருக வேணும் தம்பிரானே! பால் பானை பொங்க வேண்டும் தம்பிரானே!"* என்ற நாட்டார் பாடல் வரிகள் இதற்குச் சான்றாகும்!

**போகிப் பண்டிகை :**

போகிப்பண்டிகை நாளில், *"பழையன கழிதலும் புதியனப் புகுதலும் வழுவல கால வகையினானே"* என்று இலக்கண நூல் பேசுவதுபோல, வீட்டிலுள்ள தேவையில்லாத பழம் பொருட்களையெல்லாம் அப்புறப்படுத்திப் பிறகு புதுப்பொருட்கள் கொண்டு வந்து வீட்டில் நிரப்பிப் பொலிவு காண்பது, காப்புக் கட்டுவது என்பன இடம் பெறுகின்ற நிகழ்வுகள்!

காப்புக் கட்டுவது என்பது வீட்டுத் தலைவாசலில், வேப்பிலை, பூளைப்பூ ஆவாரம் பூ, அருகம்புல் ஆகிய வற்றையும், மாவிலை தோரணங் களையும், வரிசை திரலாகக் கட்டித் தீய சக்திகள் எல்லாம் வீட்டில் அண்டாமல், அணுகாமல் காப்பதைக் குறிப்பதாகும்! போகிப் பண்டிகை நாளில் புதுத் தானியங்களைப் புதுப்பானைகளிலும், குதிர்களிலும் பத்தாயங்களிலும் நிரப்பி வைப்பதும் வேளாண் குடும்பங்களில் நிகழ்வனவாம்! போகி என்பது பழையனவற்றைப் போக்குவது – காலப் போக்கில் போக்கி – போகி என்றாயிற்று என்போரும் உள்ளனர். இவ்விழாக் களுக்கெல்லாம் முன்பாகவே – மார்கழி மாதத் திலேயே – வீடுகளை வெள்ளையடித்துக் (தற் காலத்தில் வண்ணங்களாக) கோலமிட்டுப் புதுக்கி வைப்பர்!











**மகர சங்கராந்தி :**


சூரிய ஒளியால் பயிர்களை விளைவித்த இறைவனை வணங்கிப் பொங்கலிட்டு படைக்கும் விழாவே "சங்கராந்தி" எனப்படும் பொங்கல் விழாவாகும்! தைமாதம் முதல் நாள் என்பது சூரியன் மாதமாய் அமைந்த தமிழ் வருடத்தின் (சூரியனை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப் படுவது) முதல் நாள் ஆகும்! சூரியன் தனுர் இராசியிலிருந்து, மகர இராசிக்குச் செல்லத் தொடங்கும் நாளே தை முதல் நாள் என்று ஜோதிடம் கூறும்! இவ்வகையில்தான் நம் பாரத தேசமெங்கும் அந்நாளை "மகர சங்கராந்தி" என்ற பெயரில் கொண்டாடுகிறார்கள்! மேலும் இருநாட்கள் பொங்கலை ஒட்டிய பண்டிகையாகத் தமிழர்கள் கொண்டாடுகின்றனர். முதலாவது, சூரியப் பொங்கலுக்கு முதல் நாள் கொண்டாடும் போகிப் பண்டிகை!

**காணும் பண்டிகை :**

மாட்டுப்பொங்கல் நாள், தமிழகத்தில் திருவள்ளுவர் தினமாகக் கொண்டாடப்படுகின்றது! மாட்டுப் பொங்கலின் மறுநாள் கரிநாள் என்றும், காணும்பொங்கல் என்றும், கன்னிப் பொங்கல் என்றும் அழைக்கப்படுகின்றது! இந்த நாளில் தான் புகழ்பெற்ற "ஜல்லிக்கட்டு" என்னும் வீரவிளையாட்டு நாடெங்கும் நிகழ்த்தப்படுகின்றது!



பண்டைக் காலத்தில் "ஏறு தழுவுதல்" என்று குறிப்பிடப்பட்ட வீர விளையாட்டின் மாற்று வடிவமே ஜல்லிக்கட்டாகும்!



சங்க காலத்தில், முல்லைத் திணை சார்ந்த மக்களிடையே "கொல்லேறு தழுவுதல்" மூலமாக ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளும் தகுதியை ஓர் ஆடவன் பெறுகின்றான்!

தற்காலத்தில், ஜல்லிக்கட்டுக் காளையின் கொம்பில் கட்டி வைக்கப்படும் பொன் முடிப்பைப் பெறுவதும், தம் வீரத்தை வெளிப்படுத்துவதும் ஜல்லிக்கட்டில் பங்குபெறும் ஆடவரின் நோக்கமாக உள்ளன! கரிநாளான காணும் பொங்கலன்று ஒவ்வொரு ஊரிலும் உள்ள கன்னிப் பெண்கள் எல்லாம் கூட்டமாகக் கூடிக் கும்பியடித்துப் பாடிக் கொண்டே, ஒவ்வொரு வீடாகச் சென்று பணமும் பொருள்களும் பெற்றுக் கூட் டாஞ்சோறு ஆக்கித்தாமும் உண்டு, பிறர்க்குக் கொடுத்தும் மகிழும் வழக்கமும் தமிழகத்தில் உண்டு! "தை மாதம் முதல் நாள் வரும் பொங்கல் விழா தமிழகத்தில் நான்கு நாட் கள் சிறப்பாகக் கொண்டாடப்பட் டாலும், உலகெங்கும் உள்ள தமிழர்கள் தைப்பொங்கலை முதல் நாளில் மட்டும் கொண் டாடிச் சூரியனை வழி படுகிறார்கள்! சூரியன் மூலமே உலக இயக்கம் நிலை பெறுகின்றது! சூரியனாலேயே மழை பொழிகிறது!

ஒளி கிடைக்கின்றது! வெப்பமும் தட்பமும் (குளிர்ச்சி) சூரியனே கொடுக்கின்றான்! பயிர் செழிக்கின்றது! பண்டைய உலகச் சமுதாயத்தில் சூரியன் வழிபாட்டிற்கு உரிய தேவனாகவே போற்றப்பட்டான்!

ஆய்வாளர்கள், பண்டைய சூரிய வழிபாட்டின் வளர்ச்சியே பொங்கல் விழாவாகக் கருதப்படுகின்றது என்றும், ஆதிகாலத்தில் தமிழ்ச் சமுதாயத்தில் கொண்டாடப் பெற்றப் பாவை நோன்பின் வளர்ச்சிதான் பிற்காலத்தில் பொங்கல் விழாவாக வளர்ந்தது என்றும் கருதுவர்!

எவ்வாறாயினும் பொங்கல் விழா பஞ்சபூதங்களின் தொடர்போடு, வேளாண்மையோடு, அறுவடையோடு தொடர்புடைய விழா என்பது மறுக்க முடியாத உண்மை!

அவ்வகையில், தமிழ்ப்பண்பாட்டின் தலைசிறந்த நன்னாளாகத் "தைப்பொங்கல்" விழா கொண்டாடப் படுகின்றது என்பதை உணர்ந்து தமிழ் மக்கள் எங்கெல்லாம் கிளைத்துச் செழித்து வளர்ந்துள்ளார்களோ அங்கெல்லாம் இப்பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட வேண்டும்; கொண்டாடுகிறார்கள்!



உலகமெல்லாம் பரவிய தமிழ்ச் சமுதாயம் அவரவர் பாணியிலே இப்பொங்கல் விழாவைக் கொண்டாடுகிறார்கள். தாய் லாந்து, ஜப்பான் முதலிய நாடுகளிலும் "பொங்கலோ பொங்கல்'' "ஹொங்கரோ ஹோங்கல்'' என்று மகிழ் வாகக் கொண்டாடப்படுவதை இன்று நாம் அறிகின்றோம்!



*''வாழிய செந்தமிழ்!*
*வாழ்க நற்றமிழர்!*
*வாழிய பாரத மணித்திருநாடு!!''*




வைணவ அடியார்

# திருமங்கையாழ்வார் போற்றும் திருமலை



கலைமாமணி, முனைவர்
இரா.வ. கமலக்கண்ணன்,
காஞ்சிபுரம், 9976366781



*முதற்பத்து – 10 ஆம் திருமொழி :*

இவர் தம்முடைய வெறுமையைச் சொல்லிக் கைங்கரியம் செய்யும் இலாபத்துக் காகத் தஞ்சம் புகுந்தார். பிரம்ம சூத்திரத்திற்குப் பேருரை (ஸ்ரீபாஷ்யம்) வகுத்த ஸ்ரீராமாநுசர், பெருமானிடம் சரணமடைந்த பின்னர், “நுண்ணுடல் பருவுடல்களைக் கழித்துத் தர வேண்டும்; யான் எனது என்னும் செருக்குகளைக் கழித்துத் தர வேண்டும்; பகையைப் போக்கிப் பரபக்தியைப் பிறப்பிக்க வேண்டும்” – என்று வேண்டியது போல இவரது வேண்டுகோளும் அமைந்துள்ளது. பெருமான், “உம்முடைய எல்லா விருப்பங் களையும் செய்வதற்காக அன்றோ நாம் இங்கு வந்து நிற்கிறது” – என்று திருமலையில் தன் நிலையைக் காட்டினான். அத்துடன் இவர் திருவுள்ளத்திலே வந்து “இவருக்குப் பரபக்தி முதலியவற்றைப் பிறப்பித்தான்” என்கிறது இத்திருமொழி. “அமரர்கள் வந்து வணங்கும் திருமலையில் எழுந்தருளியுள்ள பெருமானே! என்னுடைய துன்பங் களைப் போக்கி அருள்வாயாக”.

*“விண்ணோர் தொழும் வேங்கட மாமலைமேய*
*அண்ணா! அடியேன் இடரைக் களையாயே!* –1:10:1

அடியேன் இடரைக் களையாய் – இவ்வுலகில் வாழ்வது துன்பம் என்று என் நெஞ்சில் பட்ட பின்பு, என் திருத்தொண்டிற்குப் பகையாய் இருப்பதைப் போக்கி அருள வேண்டும்.

“திருமலையில் உறைகின்ற திருத்துழாய் மாலையால் அழகு செய்யப்பட்ட முடியை உடையாய்! அருள்புரிவாயாக”

*"விலங்கல் குடுமித் திருவேங்கடம் மேய*
*அலங்கல் துளப முடியாய்! அருளாயே"* –1:10:2

தன்மேல் உலவுகின்ற சந்திரனும் சூரியனும் நேராகப் போக முடியாமல் விலகிப் போக வேண்டும்படி ஓங்கிய முகடுகளை உடைய திருமலை,

செல்வம் நிறைந்த திருமலையில் பொருந்தி உறைபவனாகிய அமுதம் போல இனிமையானவனே! அடியவனான எனக்கு அருள் செய்ய வேண்டும்.

*"சீரார் திருவேங்கட மாமலை மேய*
*ஆராவமுதே! அடியேற்கு அருளாயே"* –1:10:3

ஆராஅமுதே! இவ்வமுதம் தேவர் உலகில் இருப்பது அன்று. எப்போதும் அனுபவித்தாலும் மனநிறைவடையாதபடி நிரதிசய போக்கியமானவனே! சீரார் திருவேங்கடம் – வைகுந்தத்தைக் காட்டிலும் செல்வம் மிக்கது காணும் திருமலை.

"வானைத் தொடும் உச்சியை உடைய திருமலையிலே பொருந்தி இருக்கும் தேவர் தலைவனே! நீ உறிமேல் வைத்த நல்ல வெண்ணெயை அமுதமாகக் கொண்டு உண்டாய்; வாமனனாகி மண்ணை ஈரடியால் அளந்தாய்; அடியவனாகிய எனக்கு அருள் செய்ய வேண்டும். (கோபாலரைப் போலவோ, மாவலியைப் போலவோ நினைத்து நீ எனக்கு அருள் செய்ய வேண்டும் என்கிறார்).

*"உண்டாய் உறிமேல் நறு நெய் அமுதாக*
*கொண்டாய் குறளாய் நிலம் ஈரடியாலே*
*விண்தோய் சிகரத் திருவேங்கடம் மேய*
*அண்டா! அடியேனுக்கு அருள் புரிவாயே"* –1:10:4

(அண்டன் – தேவன்; இடையன்)

"நரசிங்கமாக வந்து இரணியன் உடலைக் கிழித்துப் போட்டவனே! மிக உயர்ந்த திருமலையின் திருஅனந்தாழ்வானைப் படுக்கையாக உடையவனே! அடியேனுக்கு அருள்புரிக!

*"... அவுணன் உடலம் பிளந்திட்டாய்!*
*சேணார் திருவேங்கட மாமலை மேய*
*கோணாகணையாய்! குறிக்கொள் எனை நீயே"*

–1:10:5

"என்னையும் பிரகலாதனைப் போல நினைத்து நீ அருள்புரிய வேண்டும் என்கிறார்.

"நிலையற்ற இம்மனிதப் பிறவியை நீக்கி, தனக்கு நிகராகச் செய்து, தன்னுடைய அருளைப் புரியும் தலைமையை உடையவன்; மேகங்கள் சேர்ந்திருக்கும் திருமலையில் உறையும் எனது ஆனை போன்றவனும், எனக்குத் தந்தை போன்றவனுமான பெருமான் என் நெஞ்சில் எழுந்தருளியுள்ளான்.

*"மன்னா இம்மனிசப் பிறவியை நீக்கி*
*தன்னாக்கித் தன் இன்னருள் செய்யும் தலைவன்*



*மின்னார் முகில்சேர் திருவேங்கடம் மேய*
*என்னானை என்னப்பன் என் நெஞ்சிலுளானே"*

–1:10:6

"முழுமுதற் பொருளைக் கண்ட பின்பு ஞானி ஆனவன் நல்வினை தீவினைகளை விட்டு நீங்கி, உலகின் தொடர்பற்றவனாய் முழு முதற் பொருளோடு மேலான ஒப்புமை அடைகிறான்" – என்கிறது முண்டக உபநிடதம் (3:1:3). இதனால் உயிர் இறைவனோடு ஒத்த நிலையை அடைவது தெளிவு.

"தேன் போலும் இனியவனே! திருமலையாகிய பெருமை பொருந்திய மலையில் வசிக்கும் தலைவனே! நீ என் நெஞ்சை இருப்பிடமாகக் கொண்டு நிலைபெற்று இருந்தாய்! என்கிறார். *"தேனே! திருவேங்கட மாமலை மேய கோனே! என் மனம் குடி கொண்டிருந்தாயே"* –1:10:7.

திருமலையில் மூங்கில்கள் பிளவுபட்டு வெள்ளிய முத்துக்களையும், ஒளியுள்ள மணிகளையும் சிந்துகின்றன. அக்கண்ணனுடைய திருவடிகளைத் தவிர வேறொன்றையும் அறியமாட்டேன்.

*"வேய் விண்டு உதிர் வேங்கடமாமலைமேய*
*ஆயனடி யல்லது மற்றறியேனே"* –1:10:8

*"வந்தாய் என் மனம் புகுந்தாய் மன்னி நின்றாய்!*
*நந்தாத கொழுஞ்சுடரே! எங்கள் நம்பீ!*
*சிந்தாமணியே! திருவேங்கடம் மேய*
*எந்தாய்! இனியான் உன்னை என்றும் விடேனே"*

–1:10:9

"அணையாத ஒளியை உடையவனே! எங்களுடைய குறைகளைத் தீர்க்கவல்ல நம்பியே! நினைத்த பொழுதே எல்லாவற்றையும் கொடுத்தருள வல்லவனே!

திருமலையில் பொருந்தி இருக்கும் பெருமானே! என்னிடம் வந்தாய். என் நெஞ்சினுள்ளே நுழைந்தாய்! உள்ளேயே பொருந்தி நின்றாய்! இனிமேல் அடியேன் எப்போதும் உன்னை விடமாட்டேன். திருவேங்கடம் மேய எந்தாய்! திருமலையிலே வந்து புகுந்து உனது உடையவனாம் தன்மையைக் காட்டி என்னைப் பிறருக்கு இன்றித் தனக்கேயாக எழுதிக் கொண்டவன்.

*"வில்லார் மலிவேங்கடமாமலை மேய*
*மல்லார் திரள் தோள் மணிவண்ணன் அம்மான்"*

–1:10:10

வேடுவர் நிறைந்த திருமலையில் கோயில் கொண்டுள்ள திரண்ட தோள்களையும் நீலமணி போன்ற நிறத்தையும் உடைய பெருமானைக் குறித்துத் திருமங்கை மன்னன் பாடிய இச்சொல்மாலையை ஓதவல்லவர் அமரராவர்.

இரண்டாம் பத்து – முதல் திருமொழி :

"மனிதர்களின் உலக வாழ்க்கைக்கும் வீடு பேற்றிற்கும் மனமே காரணம். புலன் இன்பங்களில் ஈடுபட்ட மனம் உலக வாழ்வுக்கும் காரணமாகிறது. புலன் இன்பங்களில் பற்றற்ற மனம் வீடு பேற்றிற்குக் காரணமாகிறது" (விஷ்ணு புராணம் 6:7:28) என்பதற் கேற்ப நமக்குப் பெருமான் திருவடிகளில் கைங்கரியம் செய்யும் பேறு கிடைத்ததற்குக் காரணம் நெஞ்சமே என்று கண்டார். அதனால் தம் திருவுள்ளத்தைக் குறித்து, "உன்னாலேயே இந்த நன்மைகளெல்லாம் உண்டாயின" என்று திருஉள்ளத்தோடே கூட்டி இனியராகிறார்.

*"கானவர் இடு காரகில் புகை ஓங்கு வேங்கடம் மேவி மாண் குறள்*
*ஆன அந்தணற்கு இன்று அடிமைத் தொழில் பூண்டாயே"* –2:1:1

வேடுவர் நெருப்பிலிடும் கறுத்த அகிலின் புகை சூழ்ந்துள்ள உயர்ந்த திருமலையில் பொருந்தி இருக்கிற, வாமன வடிவம் கொண்ட அந்தணனுமாகிய பெருமானுக்கு, மகிழ்ந்து இப்போது தொண்டு புரிவதை ஏற்றுக் கொண்டாய். வேடுவர் பெருமாளுக்குத் திருவாராதனம் செய்ய அதிகாரம் இல்லையாயினும், அகில் மரங்களை வெட்டித் தீ வைத்துத் தூபம் பரவச் செய்து அதனால் ஆராதிக்கின்றனர்.


தொடரும்...

## ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு அளிக்கும் சம்பாவணையை தங்கள் வங்கிக் கணக்கில் செலுத்த தி.தி.தே. முடிவு எடுத்துள்ளது.ஸப்தகிரி எழுத்தாளர்கள் தங்களுடைய கட்டுரையுடன் வங்கி புத்தகத்தின் முதல் பக்கம் மற்றும் வங்கியின் விவரங்களை (Your Bank A/c No., Bank Name with IFSC Code No.) இணைத்து அனுப்புதல் வேண்டும். தவறினால் உங்கள் கட்டுரை அச்சிட இயலாது.

– பிராதன ஆசிரியர்

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 41



## இடமிருந்து வலம்

1. திருமலையப்பனுக்கு சங்கீர்த்தனம் பாடியவர்.....(9)
4. கோதை.....(4)
5. ஸ்ரீகிருஷ்ண கர்ணாமிர்தம் பாடியவர்.....(5)
8. சாரங்கபாணியை எழ வைத்த ஆழ்வார் (பெயரில் ஊர்).....(9)
9. பாணர்குடியில் பிறந்து ரங்கநாதரிடம் கலந்தவர்.....(8)
11. உடுப்பியில் தோன்றிய ஆசாரியார்....(8)
13. வடக்கில் பிறந்த ஆண்டாள்....(4)
15. அயோத்தியில் அமர்ந்து ராமாயணம் படைத்தவர் ....(6)
19. இந்த ஆழ்வார் பிசாசு அல்ல....(5)
22. மாற்று மதத்தில் ஜனித்த ராம பக்தர்....(6)

## வலமிருந்து இடம்

3. இவரது பணியாளாய் கண்ணன் இருந்தான்.....(5)
6. புளிய மரத்தில் இருந்து புகழ் கொண்ட ஆழ்வார்.....(6)
12. எத்திராஜர்....(5) துறவிகளின் அரசர்.
14. பாண்டுரங்கனுக்கு சேவை செய்த பக்தை....(4)
18. புவனகிரியில் பிறந்த புனிதர்.....(7)
20. பண்டரீபுர நாதனுக்கு பாமாலை சூட்டியவர்....(5)
22. ராம காவியத்தை தமிழில் தந்தவர்....(4)

## மேலிருந்து கீழ்

2. கலகக்கார நாராயண பக்தர்.....(4)
7. பல்லாண்டு பாடிய ஆழ்வார்.....(6)
8. அரசனாக வாழ்ந்து பெருமாளிடமே வழிபறி செய்த ஆழ்வார்....(9)

**தொகுப்பு : திரு. பட்டுக்கோட்டை டி.ஆர். மனோகர், தஞ்சாவூர்**
8124930259

**விடைக்கு 34 ஆம் பக்கம் பார்க்கவும்.**

## கீழிருந்து மேல்

10. நரசிம்ம அவதாரத்திற்குக் காரணமான பக்தன்....(6)
16. சத்ரபதி சிவாஜியின் குரு....(5)
17. ராமாயணத்தை முதலில் படைத்த முனிவர்...(4)
20. குருவாயூரப்பனைப் பாடிப் பரவசமானவர்....(8)
21. மகாபாரத காவியத்தைத் தந்தவர்....(4)

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

**ஸப்தகிரி வாசகர்களுக்கு விண்ணப்பம்**

உங்கள் வாழ்க்கையில் நடந்த திருவேங்கடவன் லீலைகள், துணுக்குகள், சிறார் எழுதும் கதைகள், கட்டுரைகள், குறுக்கெழுத்துப் புதிர்கள் வரவேற்கப்படுகின்றன. சந்தேகங்கள் தெளிதல் பகுதிக்கான ஆன்மீக சந்தேகங்கள் வரவேற்கப்படுகின்றன.

–பிரதான ஆசிரியர்

பருவ தினம்

# வைகுண்ட ஏகாதசி

– திருமதி. பிரேமா நந்தகுமார்,
ஸ்ரீரங்கம், 0431-2432959

இந்து மதம் ஒரு ஆனந்த மயமான மதம். சிறுவர்களும், பெரியவர்களும் இணைந்து மகிழவும், இறைவனைப் போற்றவும் பல்வேறு திருநாட்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆயிரமாயிரமாண்டுகளாக வளர்ந்து வந்துள்ள இந்த திருநாட்களில் தலையாயது வைகுண்ட ஏகாதசி. இது முக்கோடி ஏகாதசி என்றும் அழைக்கப்படுகிறது.

பகவான் விஷ்ணுவிற்கு முக்கியமானதாகக் கருதப்படும் ஏகாதசி விரதத்தில் உபாவசம், பூஜை முதலியன மிகவும் அவசியமானவையாகக் கருதப்படுகின்றன. பெரியர்வர்கள் வகுத்த இவ்விரதம் கடைப்பிடித்தால் அனைத்து நலன்களும் நம்மைச் சேரும் என்றும் நம்பப்படுகிறது. இதற்குச் சான்றாக பல சரித்திரங்கள், ருகாங்கதன் (நாரத புராணம்), அம்பரீஷன் (ஸ்ரீமத் பாகவதம்) முதலியோர் எவ்வளவு எதிர்ப்பு வந்தாலும் ஏகாதசியைக் கடைப்பிடித்து, பகவான் நாராயணனை பூஜித்து மகிழ்ந்து, துவாதசியன்று பாரணை செய்து நமக்கு வழிகாட்டியாக விளங்குகின்றனர். ஏகாதசி விரதம் என்பது மிகவும் முக்கியம் என்றாலும், ஒரு வருடத்தில் வருகின்ற 24 ஏகாதசியில் வைகுண்ட ஏகாதசியே முதன்மையான இடம் பெறுகிறது. அன்றைய தினம் நாராயணனே பரமபதத்திற்கான கதவுகளைத் திறந்து, நம்மை வரவேற்கிறான் என்ற நம்பிக்கை இருப்பதால், வைகுண்ட ஏகாதசியைக் கடைப்பிடித்து, அன்று விஷ்ணு கோயில்களில் உள்ள வைகுண்ட துவாரம் எனப்படும் கதவு திறந்தவுடன், உத்சவ மூர்த்தி பின்னே சென்று அப்படியைத் தாண்டுவது மிகவும் முக்கியமாகக் கருதப்படுகிறது. அந்த நேரத்தில் பக்த கோடிகளின் முகங்கள் பெரும் பேறு பெற்ற மலர்ச்சியுடனும், மன நிறைவுடனும் இருப்பது கண்கூடு.

**திருவரங்கம் :**

ஸ்ரீவைஷ்ணவ தலங்களில் முதன்மையானத் தலமாகப் போற்றப்படும் திருவரங்கத்தில், வைகுண்ட ஏகாதசியை திருவத்யயன உத்சவம் என்றும், தமிழர் திருநாள் என்றும் போற்றுகிறார்கள். அரங்கனுக்கு "நித்ய கல்யாணம், பச்சைத் தோரணம்" என்று எல்லோரும் மகிழ்வது உண்மையே. ஆயினும் வைகுண்ட ஏகாதசியை நம் பெரியோர் நாலாயிர திவ்வியப் பிரபந்த பாசுரங்களை பிரத்தியேகமாக அரையர் சேவை மூலம் கேட்டு மகிழும் திருவிழா என்பதால் அதற்கு ஏற்றம். மார்கழி மாதத்தில் இவ்விழா தொடரும். இதன் உச்சக்கட்டம், இருபது நாட்கள் விழாவில், பதினொன்றாம் நாள், ஏகாதசியன்று நம்பெருமாள், ரத்னங்கி அணிந்து, தனது நான்கு வித நடைபோடும் கதிகளை – சிம்ம கதி, கஜ கதி, வியாகர கதி, விருஷப கதி – கண்டு மோகித்து, அரங்கன் நடையழகு என்ற சொல் ஏற்பட்டதாம்.

விடியற்காலையில், ஆண்டாள் கூறிய *''மாரி மலை முழஞ்சில் மன்னிக்கிடந்துறங்கும் சீரிய சிங்கம்''* கண் விழித்து கம்பீரமாக வெளியே வருவதுபோல், அழகிய மணவாளன் கருவறையிலிருந்து வெளியே வருவார். துள்ளலான நடை. ஆண்டாளின் மார்கழி மாதம் அல்லவா? மேற்குப் பிரகாரத்தில் ஒய்யார நடை. தோளுக்கினியானில் எம்பெருமான் வரும்போது வாரைகளின் இரு குமிழ்களைப் பிடித்துக் கொண்டு ஸ்தானிகர், நடுவில் திருவாராதனம் செய்யும் பட்டர் வர, ஸ்ரீபாதம் தாங்கிகள் ஒய்யார நடையை நடத்துவார்கள். இந்த நாளிலிருந்து இருபதாம் நாள் வரை திருமங்கை யாழ்வார் தொடங்கி வைத்த திருவாய்மொழித் திருநாள் நடைபெறுகிறது.

நம்பெருமாள் மேற்குப்புறம் படிக்கட்டிகளில் இறங்கி, வடமேற்கு மூலையில் யாகசாலை, வடக்கு மூலையில் அவரது படைத்தளபதியான சேனையாழ்வார் சன்னதிகளைக் கடைக்கண்ணால் பார்த்தவாறு, கண்ணன் கோயில் எதிரே உள்ள கண்ணாடி முன்பாக சேவை தருவார். பக்தர்களுக்குப் பரம பாக்யமாக இருக்கும்.
அரங்கனையும் தங்களையும்
ஒன்று சேர நிற்கும்





நிலையில் பார்க்க முடிகிறதே! அடுத்து பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் அரங்கனை வேங்கடவனைக் கண்ட இடம். வண்ணச்சித்திரத்தில் ஸ்ரீநிவாசனை வணங்கி அரங்கனைத் தொடர்ந்து, நாழி கேட்டான் வாசலைத் தாண்டி குலசேகரன் திருச்சுற்றினை அடைகிறோம். எதிரே காணும் மிகப் பெரிய கொடிமரம், பலி பீடம், கம்பத்தின் உச்சியில் தரிசனம் தரும் கருடனை சேவித்து அணியரங்கன் திருமுற்றம் தாண்டி, துரைபிரதட்சிணம் வழியே செல்கிறோம். இராப்பத்து எனப்படும் திருவாய் மொழித் திருநாள் பத்து தினங்களும், இங்கே, மண்டபத்தில் இருந்தவாறு எம்பெருமான் வேதவிண்ணப்பம் கேட்பார்.

இம்மண்டபத்தின் கீழே விரஜா நதி ஓடுகிறது. கல்லால் ஆன தூணெல்லாம் சொல்கிறது அற்புதமான கவி. தசாவதாரம், விபீஷணன் ரங்க விமானத்தை எடுத்துக்கொண்டு வருவது போன்ற காட்சிகள். வேதவிண்ணப்பத்திற்குப் பிறகு அடியார்களுக்கு தீர்த்தம், வடைபருப்பு வழங்குவது நடந்த பின், பரமபதவாசல் திறந்திட ஆணை பிறக்கிறது. திருவாசல் திறந்தவுடன், பெருமாள் வெளியே எழுந்தருளுகிறார். பக்த கோடிகள் புடைசூழ, ரத்னங்கி சல்லாப்போர்வை வழியே பளீரிட, கிளி மாலை மெல்ல அசைய, அழகிய மணவாளன், கம்பீரமாக ஆயிரங்கால் மண்டபம் சேர்ந்து, அங்கே திருமாமணி மண்டபத்தில் எழுந்தருளி சேவை தருகிறார். நேர் எதிரே காணும், கலை வண்ணம் மிகுந்த செஷராயர் மண்டபத்தில் உள்ள தன்னை அயோத்தியில் பூஜித்த சூரிய வம்சத்தோன்றலான ஸ்ரீராமனுக்கு சேவை தந்தவாறு, இரவு வெகுநேரம் வரை இருந்து, அரையர் சேவை ஏற்று, பிறகு கருவறைக்குத் திரும்புவார். இராப்பத்து எனப்படும் இந்நாட்களில் திருக்கைத்தல சேவை பராங்குச நாயகியான திருக்கோலத்தில் உள்ள நம்மாழ்வாருக்கு அளிக்கும் சேவை, திருமங்கை மன்னன் வேடுபறி, நம்மாழ்வார் மோக்ஷம் போன்ற தெய்வீகக் காட்சிகள் கண்டு பக்தர்கள் பரவசமடைகின்றனர். அப்பொழுது நம் அனைவருக்கும் நிச்சயமாக ஒரு எண்ணம் தோன்றி, நெஞ்சுடன் இணைந்து விடுகிறது. இதுவே பூலோக வைகுண்டம்.

வைகுண்ட ஏகாதசிக்கு முன்னராக வரும் “பகல் பத்து” எனப்படும் பத்து நாட்களும் அரங்கன் அர்ஜுன மண்டபத்தில் வீற்றிருந்து அரையர் சேவை கேட்கும் போது கம்ஸவதம், வாமனாவதாரம், அம்ருதமதனம், முத்துக்குறி, இராவண வதம் முதலிய சரித்திரங்களை அரையர் சுவாமிகள் பாட்டாகவும், அபிநயமாகவும் தருவதை காணவும், கேட்கவும் ஒரு பிறவி போதாதே!

விஷ்ணு கோயில்கள் அனைத்திலுமே வைகுண்ட ஏகாதசி கொண்டாடப் படுகிறது.



அது தாமிரவருணிக் கரையில் உள்ள சின்னஞ் சிறிய பிஹன்மாதவன் கோயிலானாலும், கும்பகோணம் ஆராவமுதன் சன்னிதி போன்ற பென்னம் பெரிய கோயிலானாலும் வைகுண்ட ஏகாதசி தவறாமல் கொண்டாடப் படுகிறது. திருவரங்கத்திற்கு அடுத்த திவ்ய தேசங்கள் வரிசையில் வரும் திருமலை மற்றும் பெருமாள் கோயில் எனப்படும் காஞ்சிபுரம் தவிர, இராமாநுஜர் மீட்டெடுத்த திருநாராயணபுரம் சம்பத் குமாரன் சன்னதி பற்றியும் ஒரு சில துளிகள் அனுபவிப்போம்.

### திருமலை :

திருமலையில் வைகுண்ட ஏகாதசி என்றால் எண்ண முடியாத அளவு பக்தர்கள் வருகிறார்கள். ஆண்டு முழுவதும் மூடியிருந்த வைகுண்ட துவாரம் எனும் பரமபத வாசல் இன்று திறக்கப்படுகிறதல்லவா? இந்த நாளை புத்ரட ஏகாதசி, சுத்த ஏகாதசி என்றும் திருப்பதியைச் சேர்ந்த இடங்களில் குறிப்பிடுவதுண்டு. சிறப்பு அனுமதி சலுகைகள் இருப்பதில்லை. அதனால் அனைவருமே முயன்று வைகுண்ட துவாரத்தைத் தாண்ட வேண்டியதே. திருமலையில் இந்த முக்கியமான நாளில் ஒரு லட்சத்திற்கும் மேல் பக்தர்கள் கூடுவார்கள் எனப்படுகிறது. இராமாநுஜருடைய தாய்மாமன் திருமலை நம்பி முதலியோர் இங்கு இருந்து திவ்வியப் பிரபந்தத்தை ஓதினார்கள். இன்றும் இங்கே இத்தமிழ் வேதம் வைகுண்ட ஏகாதசி சமயத்தில் ஏற்றம் பெறுகிறது. இந்நாளில் திருமலையப்ப ஸ்வாமி தங்கத் திருத்தேரில் திருமாட வீதிகளில் எழுந்தருள்கிறார்.

### பெருமாள் கோயில் எனப்படும் காஞ்சிபுரம் :

மற்ற விஷ்ணு கோயில்கள் போலவே இங்கும் ஆழ்வார்களது பாசுரங்கள் ஓதப்படுகின்றன. பகல் பத்தின் போது, திவ்யப்பிரபந்தப் பாசுரங்கள், வரதராஜ ஸ்வாமியின் கருவறை எதிரில், பெருமாள் கண்டு, கேட்டு களிக்குமாறு ஓதப்படுகின்றன. வைகுண்ட ஏகாதசி அன்று, பெருமாள் ரத்னங்கி அணிந்து, கம்பீரமாக அத்திகிரி மலைமேலிருந்து கீழே இறங்கி வருகிறார். கண்ணாடி அறை மண்டபத்தில் ஏகாதசி திருமஞ்சனம் கண்டருளுகிறார். மாலையில் மாட வீதிகளில் வலம் வந்து, பக்த கோடிகளுக்கு அருளைப் பொழிகிறார்.

### திருநாராயணபுரம் எனப்படும் மேல்கோட்டை :

பொதுவாக மேல்கோட்டையின் முக்கிய உத்ஸவம் "வைரமுடி சேவை" என்பார்கள். ஆயினும், இங்கும் வைகுண்ட ஏகாதசி மிகவும் முக்கியமான திருவிழா. இதற்குக் காரணம் இராமாநுஜர் எனலாம். இங்கே செலுவ நாராயணப் பெருமாளை வெளிக் கொணர்ந்து, ஹொய்சள ராஜா விஷ்ணுவர்தனன் (பிட்டி தேவன்) மூலம் ஆசாரியர் கோயில் கட்டுவித்தார். அரிராமாநுஜரே ஸ்ரீவைகுண்ட கத்யத்தை அருளியவர் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

வைகுண்ட ஏகாதசி மார்கழி மாதம் வருவதால், இங்கும் ஆண்டாள் பாசுரங்களுக்கு விசேஷ ஏற்றம் இருக்கும். இங்கு நம்மாழ்வாரின் திருவாய்மொழி அனுசந்தானம் செய்வதை கோடரோத்ஸவம் என்று அழைக்கிறார்கள். இங்கே ஆழ்வார்கள், ஆசார்யர்கள் மரியாதை நடப்பது கண்டால் இனிமையாக இருக்கும். இவை யாவுமே திவ்ய பிரபந்த பாசுரங்களில் மனம் ஆழ்ந்த இராமாநுஜாசாரியர் காலத்திலிருந்தே நடைபெற்று வருகின்றன. இப்படி மகாவிஷ்ணுவின் கோயில்கள் எங்கு இருந்தாலும் அங்கே எம்பெருமானிடம், பக்தி யோகத்தின் நிலையமான நாலாயிர திவ்ய பிரபந்தத்தை, வைகுண்ட ஏகாதசி நாட்களில் வளர்த்து வருவது தமிழர் பெற்ற பெரும் பேறு.



நமது திருக்கோயில்

# ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், தேவுனி கடபா


தெலுங்கு மூலம் : திரு. பி. நாகாஞ்சநேயுலு

தமிழாக்கம் : திருமதி. ஏ. அருணா, 97037 34848


**தலப்புராணம் :**

இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மப் பெருமானை சாக்ஷாத் ஜனமேஜயன் என்ற அரசன் பிரதிஷ்டை செய்தார் என புராணம் கூறுகின்றது. புண்ணிய தலங்களை யெல்லாம் தரிசனம் செய்து கொண்டு வந்த ஜனமே ஜயன் திருமலையை தரிசனம் செய்து, அன்றிரவு அங்கேயே தங்கினா ராம். இரவு ஸ்வாமி அவர் கனவில் தோன்றி, திருமலையில் உள்ள ஏரிக்கரையின் மீது தோண்டினால் "விக்ரகம்" கிடைக்கும். அதை ஒரு இடத்தில் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்று கூறினாராம்.

காலையில் அவர் ஏரிக்கரையின் மீது தோண்டும் போது ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி விக்ரகம் கிடைக்க, அதனை பிரதிஷ்டை செய்வதற்கு சரியான இடத்தைத் தேடிக்கொண்டிருந் தார். திருமலைக்கு வாயு திசையில் 100 மைல் தூரத்தில் புஷ்கரணி சகிதமாக வாயு புத்திரன் ஆஞ்சநேயர் திருத்தலம் இருந்ததை அறிந்து கொண்டு, அங்கு விக்ரகத்தை பிரதிஷ்டை செய்தார்.

இக்கோயிலில் அற்புதமான சிற்பக்கலைகளுடன் கூடிய இரங்கமண்டபத்தில் இத்திருத்தல க்ஷேத்திர பாலகனான ஆஞ்ச நேயர், தசாவதாரங்கள், மகரிஷிகளின் சிற்பங்களும் மண்டபத் தூண்களில் காணலாம். வடக்குப் பகுதியில் மதில் சுவற்றிற்கு அருகே நாகர் சிலைகள், அருகில் விஷ்வக்சேனர், கணபதி கோயில்களும் உள்ளன. வடக்குத் திசையில் ஆண்டாளின் சன்னதி உள்ளது.

தேவுனி கடபா ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி கோயிலில் கல்வெட்டுகளும் உள்ளன. கோயில் வரலாற்றில் அன்றைய அரசர்களின் பக்தி, கோயில் பராமரிப்பு குறித்தும், கோயிலின் சிறப்பைப் பற்றியும் கல்வெட்டுகள் தெரிவிக் கின்றன.

**கலியுக வைகுந்தம் :**

கலியுக வைகுந்தமாக சிறப்புப் பெற்ற ஸ்ரீநிவாசனின் பிரதி வடிவம் கடபாராயன் ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி. இக் கோயில் வளாகம் வைகுந்தத்தை நினைவூட்டு கிறது. திருமலைக்கு முதல்படியாகத் திகழும் இப்புனிதமான தலத்தில் உள்ள மூர்த்தியை பூஜித்தால் சாக்ஷாத் திருமலையப்பனை பூஜித் தது போன்று ஆகும் என்று கூறுகின்றனர். இப் பகுதியை சுற்றியுள்ள மக்கள் திருமலைக்குச் செல்லும் முன் இங்குள்ள பெருமாளை சேவித்து செல்வது வழக்கம். ஏதேனும் சில கார ணங்களால் திருமலைக்குச் செல்ல இயலாத வர்கள் இங்கேயே தங்களுடைய பிரார்த்த னையை செலுத்துகின்றனர்.

**பல்லி தரிசனம் :**

காஞ்சியில் ஸ்ரீவரதராஜப் பெருமாள் சன்னதியில் மட்டுமே தோஷங்களை போக்கும் தங்க, வெள்ளி பல்லிகள் உள்ளன. அதைத் தொடர்ந்து இங்கு பித்தளைத் தகடுகள் வேயப்பட்ட பல்லிகள் உள்ளன. காஞ்சிபுரம் செல்ல இயலாதவர்கள் இந்தக் கோயிலில் உள்ள பல்லிகளை தரிசிக்கலாம். தாயாரின் தரிசனத்திற்குப் பிறகு இந்த பல்லிகளை தரிசனம் செய்கின்றனர்.

ஓம் பிரீதி புஷ்கரிண்யை நம:



### புஷ்கரணி (தெப்பக்குளம்) :

கோயில் எதிரில் தெப்பக்குளம் உள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள புஷ்கரணி அனைத்திலும் இது பெரியது. ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி கோயிலுக்கு எதிரே உள்ள ஸ்ரீசோமேஸ்வர ஸ்வாமி கோயிலுக்கும் சேர்ந்ததே இப்புஷ்கரணி. இரு கோயில்களும் இதில் உள்ள நீரை அபிஷேகத்திற்கு உபயோகப்படுத்தலாம் என அர்ச்சகர்கள் கூறியுள்ளனர். தெப்ப உற்சவம், பிரம்ம உற்சவம் நடைபெறும்போது சக்கர ஸ்நானம் இங்கே நிர்வகிக்கின்றனர்.

### வாயில்கள் :

இப்பகுதியில் முதலில் தேவுனி கடபா மட்டுமே இருந்தது. கோயில் – பென்னா நதி இரண்டுக்கும் இடையே விவசாயிகள் குடியிருந்தனர். அது “காபு கடப்பா” என்றானது. நவாபுகள் தற்பொழுது கடப்பா நகரம் உள்ள பகுதியை கடப்ப ஷஹாராக நிர்மானித்தனர்.

இப்பகுதியில் தம் படை வீரர்கள் தவிர வேறு யாரும் இல்லாததால் நவாபும் தேவுனி கடபாவில் இருந்த அர்ச்சகர்களை கடப்பா நகரில் வந்து குடியிருக்குமாறு கூறினார். சம்பிரதாயங்களைக் காரணம் கூறி அர்ச்சகர்கள் அந்தப் பகுதிக்கு வர மறுத்ததால் கோட்டைச் சுவர் அருகிலேயே ஆஞ்சநேயர் கோவிலை அமைத்து அவர்களுக்குத் தனியாக வீடுகளை ஏற்பாடு செய்தாராம். பிரம்மோத்ஸவ நாட்களில் ஒரு நாள் தேவுனி கடபாவிலும், ஒரு நாள் கடப்பா நகரிலும் கிராம உற்சவத்தை நடத்துகின்றனர்.

### உத்ஸவங்கள் :

வைகுண்ட ஏகாதசியன்று ஸ்வாமி, தாயார் உத்ஸவர்களை வடக்கு வாசல் வழியாக சென்று சேவிக்கும் விதமாக ஏற்பாடு செய்வர். ஆங்கில வருடப் பிறப்பு அன்று இது போன்ற சிறப்பு ஏற்பாடு செய்வர். தெலுங்கு வருடப் பிறப்பான யுகாதி பண்டிகையன்று ஆஸ்தானம், பஞ்சாங்கம் வாசித்தல் நிர்வகிப்பார்கள். 2007–ம் ஆண்டு முதல் இத்தலம் திருமலை திருப்பதி தேவஸ்தானம் தலைமைமலையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. வருடந்தோறும் மாக(தை) மாதம் சுத்த பிரதமை முதல் நவமி வரை கடபா ராயரின் பிரம்மோத்ஸவத்தை நிகழ்த்துவர். இவ்வருடத்திற்கான பிரம்மோத்ஸவம் ஜனவரி 25ஆம் தேதி முதல் நடைபெற உள்ளது.

## தேவுனிகடபா ஸ்ரீலக்ஷ்மிவேங்கடேஸ்வரஸ்வாமி பிரம்மோத்ஸவம்

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 25–1–2020 | சனி | தீக்ஷா திருமஞ்ஜனம் | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 26–1–2020 | ஞாயிறு | திருச்சி உத்ஸவம், துவஜாரோஹணம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 27–1–2020 | திங்கள் | சூரியப்பிரபை வாகனம் | பெரியசேஷ வாகனம் |
| 28–1–2020 | செவ்வாய் | சிறிய சேஷ வாகனம் | சிம்ம வாகனம் |
| 29–1–2020 | புதன் | கல்ப விருக்ஷ வாகனம் | ஹனுமத்வாகனம் |
| 30–1–2020 | வியாழன் | முத்துப்பந்தல் வாகனம் | கருட வாகனம் |
| 31–1–2020 | வெள்ளி | கல்யாணோத்ஸவம் | யானை வாகனம் |
| 01–2–2020 | சனி | திருத்தேர் | தூளி உத்ஸவம் |
| 02–2–2020 | ஞாயிறு | சர்வபூபால வாகனம் | குதிரை வாகனம் |
| 03–2–2020 | திங்கள் | வஸந்தோத்ஸவம், சக்கர ஸ்நானம் | துவஜாவரோஹணம், ஹம்ஸ வாகனம் |
| 04–2–2020 | செவ்வாய் | –– | புஷ்ப யாகம் |



# திவ்ய திருத்தலம் – திருமலை

**ஸ்ரீநிவாச கல்யாணம் :**

ஸ்ரீநிவாசர் கூறிய வரலாற்றினை கேட்ட வகுள மாதா ஆனந்தத்துடன் ஆகாசராஜா விடம் சென்று பத்மாவதி ஸ்ரீநிவாசருடைய திருமணத்தைப் பற்றி பேசினார்.

வைகாசி மாதம் சுக்லபக்ஷ தசமி வெள்ளிக் கிழமை அன்று உத்திராடம் நட்சத்திரத்தில் ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாசர் திருமணம் நாராயண வனத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. கொல்ஹாபுரத்தில் இருந்து ஸ்ரீமஹாலக்ஷ்மி, பிரம்மாதி தேவதைகள், அஷ்டதிக் பாலகர்கள் அனைவரும் இத்திருமணத்தைக் காண வந்தி ருந்தனர். திருமணம் முடிவடைந்ததும் ஸ்ரீமஹாலக்ஷ்மி கொல்ஹாபுரத்திற்குச் சென்று விட்டார். புதுமணத்தம்பதியினரான பத்மாவதி ஸ்ரீநிவாசர் வேங்கடாசல திருத்தலத்திற்குச் செல்லும் முன் ஆறு மாதங்கள் ஸ்வர்ணமுகி ஆற்றங்கரையில் இருந்த அகத்தியர் ஆசிரமத்தில் தங்கினர். பின்னர் வராஹ க்ஷேத்திரத்தை அடைந்து, பின் தொண்டைமான் சக்ரவர்த்தி நிர்மாணித்த ஆனந்த நிலையத் திற்குள் பிரவேசித்தனர்.

ஆதிவராஹ க்ஷேத்திரத்தை அடைந்த ஸ்ரீநிவாசர் லக்ஷ்மி தேவி இல்லையே என்று வருந்தி, அவரை அழைத்து வர கொல்ஹாபுரம் சென்றார். அங்கே அந்த லக்ஷ்மி தேவியின் அனுக்கிரகத்திற்காக பத்து வருடங்கள் தீவிரமாக தவம் புரிந்தார். அங்கே அந்த ஜகன்மாதாவின் தரிசனம் கிடைக்கவில்லை. அப்பொழுது அசரீரி "ஸ்ரீநிவாசா! இந்த அவதாரத்தில் லக்ஷ்மி

தெலுங்கு மூலம் : திரு. ஜெ. பாலசுப்பிரமண்யம்
தமிழாக்கம் : திரு. வி. வேங்கடரமணா, 9885701696

தேவி உன்னை அடைய மாட்டார். நீ வேங்கடாசல க்ஷேத்திரத்திற்கு திரும்பிச் செல். அந்த வேங்கடாசலத் தின் தென் பகுதியில் ஸ்வர்ணமுகி நதிக்கரையில் சுக மஹரிஷி ஆசிரமத்தின் அருகே ஒரு பத்மசரோவரம் தாமரைக் குளம் ஏற்பாடு செய்து, லக்ஷ்மி தேவிக்காக தவம் புரிந்தால் அந்த தாமரைக் குளத்தில் லக்ஷ்மி தேவி அவதரிப்பார்" என்று கூறியது.

அதன்படி ஸ்ரீநிவாசர் சுகமஹரிஷி ஆசிரமத்தின் அருகே ஒரு பத்ம சரோவரத்தை நிர்மாணித்து, அக் குளத் தில் தாமரை மலர்கள் நன்கு மலர சூரிய பகவானை குளக் கரையில் பிரதிஷ்டை செய்தார். பிறகு பனி ரெண்டு வருடங்கள் மஹாலக்ஷ்மிக்காக தவம் புரிந்தார்.

ஒரு நாள் கார்த்திகை மாதம் வளர்பிறையின் பஞ்சமி நாளன்று உத்திரட்டாதி நட்சத்திரத்தில், அபிஜித் லக்னத்தில் சாட்சாத் ஸ்ரீமஹாலக்ஷ்மி பத்மசரோவரத்தில் தங்கத் தாமரையில் அவதரித்தார். பத்மம் என்றால் தாமரை. பத்மத்தில் அவதரித்ததால் "பத்மாவதி" என்றும், "அலர்மேல் மங்கை" என்றும் பக்தர்களால் அழைக் கப்படுகின்றார்.

ஸ்ரீநிவாசன் பத்மாவதியின் கழுத்தில், தன் கழுத்தில் இருந்த ஹாரத்தை எடுத்து அணிவித்தார். பின் ஸ்வாமியின் வக்ஷஸ்தலத்தில் மஹாலக்ஷ்மி எழுந் தருள, ஸ்வாமியும் திருமலை செல்ல முற்பட்டார். அச் சமயத்தில் தேவதைகள் மஹா லக்ஷ்மியை இந்த பத்ம சரோவரக்கரை யில் எழுந்தருளுமாறு வேண்டினர். மகா ராணியாக, வீர லக்ஷ்மியாக பத்மாவதி என்ற பெயரில் பூஜைகளைப் பெற்று வரக்கூடிய தேவியே ஸ்ரீலக்ஷ்மி தேவி.

திருமலையை அடைந்த ஸ்ரீநிவாசர் ஆகாச ராஜாவின் மகள் பத்மாவதி தேவி யையும், தன் இருதயத்தில் வக்ஷ ஸ்தலத் தில் லக்ஷ்மி தேவியையும் எழுந்தருளச் செய்து காட்சியளிக்கிறார்.

தேவர்களின் கோரிக்கையின்படி, கலியுகம் முடியும் வரை திருமலை திருத் தலத்தில் எழுந்தருளியிருப்பேன் என்று கூறிய ஸ்ரீநிவாசருக்கு பிரம்ம தேவர் பிரம்மோத்ஸவத்தை நிகழ்த்தினார்.



**சிலையாக மாறிய ஸ்ரீநிவாசர் :**

ஒருநாள் பரமபக்தனான தொண்டைமான் இரகசிய வழியின் மூலம் ஆனந்த நிலையத்திற்குச் சென்று திருவேங்கடமுடையானிடம் தன்னை காப்பாற்றுமாறுக் கேட்டுக் கொண்டார். ஆனந்த நிலையனான திருவேங் கடமுடையான் என்ன நடந்தது? என்று கேட்டார்.

இரண்டு வருடங்களுக்கு முன் விப்ரவன் என்பவர் அவனுடைய மனைவி, மக்களை என்னிடம் ஒப்படைத்து. தான் யாத்திரை செல்வதாகவும், திரும்பி வரும்வரை இவர்களை பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். ஆனால் நான் அவர்களை காக்க மறந்து விட்டேன்.

ஆதலால் அவர்கள் இறந்து விட்டனர். இப்பொ முது அந்த விப்ரவன் திரும்பி வந்து தன் மனைவி மக்களை கேட்ட பிறகு தான் அவர்களின் நினைவு வந்தது. அவர்கள் ஸ்ரீநிவாசரின் தரிசனத்திற்காகச் சென்றிருக்கின்றனர் என்று அவனிடம் பொய் கூறினேன். இந்த ஆபத்திலிருந்து என்னை காப்பாற்றுங்கள் என்று முறையிட்டார்.

சரி, உமக்காக அந்த பாவத்தை நானே ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இனி மேல் யாருக்கும் தரிசனம் தர மட்டேன். பேசமாட்டேன் என்று கூறி விப்ரவன் குடும்ப த்தைக் காப்பாற்றினார். அன்று முதல் வக்ஷஸ்தலத்தில் வியூக லக்ஷ்மியுடன் ஸ்ரீநிவாசர் "கலௌ வேங்கட நாயக:" எனும் சிறப்புடன் கலி யுகத்தில் அழைத்தவுடன் தோன்றி, "வேண்டும் வரங்களை வழங்கும் வேங் கடவனாக" அர்ச்சையாக எழுந்தருளி தரிசனமளித்து பக்தர்களின் கோரிக்கை களை நிறைவேற்றி வருகின்றார்.

அவர் அர்ச்சையாக எழுந்தருளிய திவ்விய திருத்தலமே பூலோக வைகுண் டமாக விளங்குகின்ற திருமலை ஆகும். அர்ச்சாமூர்த்தியாக திகழ்கின்ற திருவேங்கடமுடையானுக்கு எத்த னையோ உத்ஸவங்கள், சேவைகள் நடைபெறுகின்றன. அவற்றைப் பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.

திருமலை வைபவம் தொடரும்...

ஓம் ச்ரீயை நம:

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972

## திருமங்கையாழ்வார் வாழித்திருநாமம்...

திருமங்கையாழ்வார் கார்த்திகை மாதம், கார்த்திகை நட்சத்திரத்தில், திருக்குறையலூரில் அவதரித்தார். எம்பெருமானுடைய ஸ்ரீசாரங்கத்தின் அம்சம். இவர் அருளிய பிரபந்தம் பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருவெழுக்கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல், திருநெடுந்தாண்டகம் ஆகிய ஆறு பிரபந்தங்களாகும்.

*கலந்த திருக்கார்த்திகையில் கார்த்திகை வந்தோன் வாழியே*
*காசினியில் குறையலூர்க் காவலோன் வாழியே*
*நலந்திகழ் ஆயிரத்து எண்பத்து நாலுரைத்தான் வாழியே*
*நாலைந்தும் ஆறைந்தும் நமக்கு உரைத்தான் வாழியே*
*இலங்கெழு கூற்றிருக்கை இருமடல் ஈந்தான் வாழியே*
*இம்மூன்றில் இருநூற்றிருபத்தேழீந்தான் வாழியே*
*வலந்திகழும் குமுதவல்லி மணவாளன் வாழியே*
*வாட்கலியன் பரகாலன் மங்கையர்கோன் வாழியே*

பதவுரை – திருக்கார்த்திகையில் – மேன்மையுடைய கார்த்திகை மாதத்தில், கலந்த – சேர்ந்த, கார்த்திகை – கிருத்திகை நட்சத்திரத்தில், வந்தோன் – அவதரித்தவர், வாழியே – வாழ வேண்டும். காசினியில் –பூமியில், குறையலூர் – பொருந்திய திருக்குறையலூர் என்னும் ஊருக்கு, காவலோன் – தலைவன். நலம் – நன்மை, திகழ் – விளங்குகின்ற, ஆயிரத்து எண்பத்து நாலு – 1084 பாடல்கள் கொண்ட பெரிய திருமொழி என்னும் பிரபந்தத்தை, ஈந்தான் – அருளினன். நாலைந்தும் – 20 பாசுரங்கள் கொண்ட திருக்குறுந்தாண்டகம் என்னும் பிரபந்தத்தையும், ஆறைந்தும் – 30 பாசுரங்கள் கொண்ட திருநெடுந்தாண்டகம் என்னும் பிரபந்தத்தையும், நமக்கு – அடியவர்களான நமக்கு. உரைத்தான் – அருளினன். இலங்கு – பிரகாசிக்கின்ற, எழு கூற்றிருக்கை – திருஎழுகூற்றிருக்கை என்னும் பிரபந்தத்தையும், இருமடல் – சிறிய திரு மடல், பெரிய திருமடல் ஆகிய இரு பிரபந்தத்தையும், ஈந்தான் – அருளினன். இம்மூன்றில் – இந்த மூன்று பிரபந்தங்களில், இருநூற்றிருபத்தேழீந்தான் – 227 பாட்டுக்களை அருளினன். வலந்திகழும் – வெற்றியோடு விளங்கும், குமுதவல்லி – குமுதவல்லி என்கிற மங்கையின், மணவாளன் – திருமங்கையாழ்வார், வாட்கலியன் – வாளை கையில் உடையவராய்



கலி தோஷத்தைப் போக்கினவர், பரகாலன் – பகைவர்களுக்குக் காலனானவர், மங்கை யர்கோன் – திருமங்கையிலுள்ளார்க்கு தலைவரானவர், வாழியே – வாழ வேண் டும்.

சிறப்புரை : (கலந்த திருக்கார்த் திகையில் கார்த்திகை வந்தோன்) – கலந்த – கலந்தை என்பதில் 'ஐ' விகுதி கெட்டு கலந்த என்றாயிற்று. பெருமை என்று பொருள். பெருமை பொருந்திய திருக் கார்த்திகை. திருக்கார்த்திகை – திரு – மேன்மை. கார்த்திகைக்கு மேன்மையாவது இம்மாதத்தில் விஷ்ணு கோவில்களில் விளக்கு ஏற்றுவது, விளக்கைத்தானமாகக் கொடுப்பது என்பது மேன்மையுடையது என்று விஷ்ணு தர்மம் கூறுகையாலே வந்த ஏற்றம்.

அத்தகைய பெருமைக்கு ஈடான பெருமை பொருந்திய கார்த்திகை நட்சத்திரமும் கூடின நாளிலே நான்காம் வருணத்திலே கள்ளக் குடியில் சோழ ராஜனுக்கு சேனைத் தலைவனாக உள்ள ஒருவனது திருக்குமாரராய் நள வருடம் கார்த்திகை மாதம் பௌர்ணமி பொருந்திய வியாழக்கிழமை, கார்த்திகை நட்சத்திரத் தில் அவதரித்தவர் திருமங்கையாழ் வாராவார். *"மங்கையர்கோன் மாநிலத்தில் வந்துதித்த கார்த்திகையில் கார்த்திகை நாள்"* என்றும், வேதம், வேதத்தில் அங்கங்கள் ஆகிய தத்துவத்தை அறிந்தவரான இவ் வாழ்வார் அவதரிக்கையாலே அல்லாத திருநட்சத்ரங்களைக் காட்டிலும் பிரி தொன்றுக்கில்லாச் சிறப்புடைய தாயிற்று. கார்த்திகையில் கார்த்திகை நாள் இருப்பது என்பதற்குச் சேர *"வீறுடைய கார்த்திகையில் கார்த்திகை நாள்"* என்றும் மாமுனிகள் உபதேச ரத்ன மாலையில் அருளியது காண்க.

(காசினியில் குறையலூர்க் காவ லோன்) காசினி – *"காசதே இதி காசிநீ"* வெளிப்படையாகப் பிரகாசிக்கிற தாகையாலே "காசிநீ" என்று பூமிக்குப் பெயர். காசிநீ என்ற வட சொல் தமிழில் காசினி என்று வந்து வெளிப்படையாகத் தோன்றும் பூமியைக் குறிக்கும். *"மண்ணியில் நீர் தேங்கும் குறையலூர்"* என்று மாமுனிகள் அருளிய படியே ஆழ்வார் அவதரித்த ஊரானது மண்ணி யாற்றங்கரையில் திருவாலி திருநகரியோடே சேர்ந்து அதில் ஒரு கூறு என்னலாம்படி இருக்கும் திருக்குறையலூராகும். மேலும் இவ்வூரா னது தேங்கும் பொருநல் ஆழ்வார் திருநகரி போலே *"பொங்கு புனல் மண்ணி"* என்னும்படியான மண்ணியாற்றின் நீர் வளப்பத்தையுடைத் தாகும். அந்த நீர் வளப்பத்தாலே ஆரவாரம் மிகுந்த செந்நெல் வயலையும் உடையதாய் இருக்கும். இதுவும் நாற்று நடுவது உழுவது அறுப்பதாய் உள்ள வயலையுடையதாகும் என்பர். இது பற்றியே *"கலிமிக்க செந்நெல் கழனிக்குறையல்"* என்று அமுதனாரும் அருளியது காண்க. மேலும் திருக்குறையலூர்க்கு "திரு" என்று மேன்மையைக் குறிக்கும் அடைமொழி சேர்த்துச் சொல்லும்போது, சோழ மண்டலத் தில் உள்ள திருவாலி என்ற நகரத்தின் அருகில் கருணை தங்கிய லக்ஷ்மிபதியின் திருக்கண்களின் விலாசத்தால் பரிபூர்ணமான வைபவத்தையுடையது திருக்குறையலூர் என்று திவ்யசூரி சரிதம் கூறும். அத்தகைய குறையலூர்க்குக் காவலோன் – தலைவன், வேந் தன் என்றபடி. இதுபற்றியே இவ்வாழ்வாரே *"மங்கையர்கோன் குறையலாளி"* என்கிறார். அதாவது திருமங்கைக்கு ராஜாவானவர். காவலோன் – பாதுகாப்போன். ராமாநுஜரும் பெரிய திருமொழி தனிய னில் *"குறையலூர் வாழ் வேந்தன்"* என்பர். அதாவது திருக்குறைய லூரை அவதார தலமாகக் கொண்டவராய், அது வாழும்படிக்கு


**திருமலை திருப்பதி தேவஸ்தானம்**

## வாசகர்களுக்கு அறிவிப்பு!!

**"ஸப்தகிரி பொன்விழா மலர்" கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன**

தி.தி.தே. சமய மாத இதழான ஸப்தகிரி கலியுக கண் கண்ட தெய்வ மான திருவேங்கடமுடையானின் வைபவத்தையும், திருமலை குறித்தும் பிரதி மாதம் தவறாமல் வாசகர்களுக்கு வழங்குகிறது. ஆறு மொழிகளிலும் வெளிவருகின்ற ஆன்மீக, அறநெறி பத்திரிக்கைகளில் முன்னிலையில் உள்ளது.

ஸப்தகிரி "சிறப்பு பொன்விழா இதழை" வெளியிட கருதுகிறது. ஆதலால் வாசகர்கள் ஸப்தகிரி குறித்து தங்கள் அனுபவங்களை எழுதி எங்கள் அலுவலகத்திற்கு அனுப்புங்கள். அவற்றை பரிசீலித்து ஸப்தகிரியில் பிரசுரிக்கப்படும்.

கட்டுரைகளை அனுப்ப வேண்டிய முகவரி : பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், தி.தி.தே. அச்சக வளாகம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி–517 507. கட்டுரைகளை தட்டச்சு செய்து tamilsapthagiri50years@gmail.com என்ற இ–மெயிலிற்கு அனுப்பவும்.


– பிரதான ஆசிரியர்




ஓம் பில்வநிலயாயை நம:



## ஆதிசங்கரர் அருளிய பஜ கோவிந்தம்



*மா குரு தன ஜன யௌவன கர்வம்*
*ஹரதி நிமேஷாத் கால: ஸர்வம்।*
*மாயாமயம் இதம் அகிலம் ஹித்வா*
*ப்ரஹ்ம பதம் த்வம் பிரவிச விதித்வா।*

**பணம், செல்வம், சுற்றம், யௌவனப் பருவம் (இளமைப் பருவம்) இவை அனைத்தும் உன்னுடன் இருப்பதால் "கர்வத் தினை" அடையாதே.... "காலம்" என்பது ஒரு நிமிஷத்தில் அனைத்தையும் அள்ளிச் சென்று விடும். இவை அனைத்தும் மாயங்களாக மறையும் விஷயங்களே... என்று உணர்ந்து இவற்றினை விட்டு விட்டு, பிரம்ம நிலையை உணர்ந்து அறிந்து அடைவாயாக.**

**– திரு. சீதாராமன், சென்னை.**

அத்தைக் காக்கிற ராஜா என்னுதல் என்று உரைப்பர் பிள்ளை லோகம் சீயர். *"வண் குறையலூர் வாழி"* என்பர் பிள்ளை உறங்கா வில்லி தாஸர்.

(நலந்திகழ் ஆயிரத்து எண்பத்து நாலுரைத்தான்) திருமங்கையாழ்வார் அருளிய பதினோரு பத்துக்கள் கொண்ட பெரிய திருமொழி என்னும் பிரபந்தம் ஆயிரத்து எண்பத்து நாலு பாடல்களைக் கொண்டது. நலம் திகழ் – நன்மை விளங்குவது. நன்மையாவது இப்பிரபந்தங்களை இன்னப்பாடல் என்கிறபடியே அநுஸந்திப்பவர்களுக்கு பொருட்சுவையாலும் இனிமையாலும் ஆனந்தம் மிகுதியாய் கரை புரண்டிருக்கையாலே திமிர்த்து கலியன் ஒலிமாலை என்னும்படி பெருமிடறு செய்து சொல்ல வேண்டுகையாலே மிக்க ஒலியுடைய பிரபந்தங்கள் என்பர்.

இப்பிரபந்தங்களே தாரகமாகவும் போஷகமாகவும் இனிமையாகவும் நினைத்துக் கொண்டு முற்றூற்றாக அநுபவிப்பதே நலம் திகழ்வதாகும். இப்பிரபந்தத்தில் பாரததேசத்திலுள்ள திருப்பதிகள் பலவும் பாட எண்ணி முதலில் வடநாட்டு (12) திருப்பதிகளை மங்களாசாசனம் செய்து, பின்னர் தெற்கே தொண்டை நாடு (23), சோழ நாடு (39), பாண்டிய நாடு (8), மலையாள நாடு (3), நடு நாடு (2) ஆகியவற்றிலுள்ள திருப்பதிகளை – முழுவதுமாக எண்பத்து ஏழு திவ்ய தேசங்களை மங்களாசாசனம் செய்தது நலம் திகழ்வதாகும். எம்பாரும் பெரிய திருமொழிக்கு அமைத்த தனியனில் *"பொங்கு புகழ்.... மறை ஆயிரம்"* என்பர்.

அதாவது மிகவும் வளர்ச்சி பெற்றதான புகழையுடைய திருமங்கைக்குத் தலைவரான ஆழ்வாருடைய வேத ரூபமாய் ஆயிரம் பாட்டாயிருக்கிற பெரிய திருமொழி பிரபந்தம் என்றபடி. மேலும் இப்பிரபந்தம் மனத்துக்கு இருளைப் போக்கும் விளக்கு என்றும், பிறவியாகிற விஷத்தை முறிப்பதற்கு சிறந்த அமுதம் என்றும், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கணங்களுக்கு நிறைவு தரும் இலக்கியம் என்றும், வேதத்தின் ஸாரம் என்றும், பிற மதங்களாகிற பஞ்சுக் குவியலுக்கு நெருப்புப் பொறி என்றும் ஐந்து நன்மைகளை உடையதாகும். வேதாந்த தேசிகரும் *"அறிவு தரும் பெரிய திருமொழி"* என்பர்.

வாழித்திருநாமம் வளரும்...

**திருமலை திருப்பதி தேவஸ்தானம்**

**பிரதி மாதம் முதல் வெள்ளிக்கிழமை போனில் மட்டுமே!**
**செயலாட்சித் தலைவருடன் பேசுங்கள்!**

**டயல் யுவர் ஈ.வோ.**

**பக்தர்களுக்கு அறிய வாய்ப்பு!**

**எந்த மாநிலத்திலிருந்தும்,**
**எம்மொழியிலும்**
**நீங்கள் நேராக**
**செயலாட்சித் தலைவருடன் பேசலாம்!**
**திருமலையான் ஆர்ஜித சேவைகள்,**
**வசதி வாய்ப்புகள் குறித்த**
**உங்களிடையே எழும் சந்தேகங்கள்,**
**கருத்துகள், ஆலோசனைகளை செயலாட்சித்**
**தலைவருடன் பகிர்ந்து கொள்ளலாம்.**

**டோல் நெம்பர் : 0877-2263261**

**நேரம் : காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை.**

*இந்த வாய்ப்பினை அனைவரும்*
*பயன்படுத்திக் கொள்ளவும்.*

# 108 திவ்விய தேசவைபவம்



# திருக்கோஷ்டியூர்

– திரு. உருபட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**புராண வரலாறு :**

பிரம்மாண்ட புராணம், பிரம்மவைவர்த்த புராணம் – இத்தலத்தின் பெருமையைக் கூறுகின்றன. சிங்கர் பிரான் அவதாரத்துக்கு – இந்தத் தலத்தில்தான் திட்டமிடப் பட்டது. நாரதர், சத்யலோகத்தில் இருந்தபோது, அங்கு வந்த கண்வ முனிவர் திருக்கோட்டியூரின் பெருமையைச் சொல்லி நைமிசாரண்யத்தில் தவம் செய்யும் பயனும், கங்கைக்கரையில் மரணம் அடையும் பயனும், குரு க்ஷேத்திரத்தில் தானம் செய்தால் வரும் பயனும் இவ்வூரில் வசித்தாலே கிடைக்கும் என்கிறார்.

தேவர்களுக்கு சொல்லொணாக் கஷ்டங்களைக் கொடுத்த இரணியனை வதைக்க, அவனது ஆட்சி செல் லாத இடமான இவ்வூரில் தேவர்களும், மும்மூர்த்தி களும் கோஷ்டியாகக் கூடி ஆலோசித்ததால் இது திருக் கோஷ்டியூர் ஆயிற்று. பகவான் நரசிம்மனாக அவதாரம் எடுத்து, இரணியனை அழித்தார். இது கதம்ப முனிவரின் ஆசிரமம். அவர் வேண்டுகோளின்படி, தேவதச்சர், அசுரத் தச்சர் இருவரும் பிரம்மாவின் கட்டளைப்படி அஷ்டாங்க விமானத்தை இங்கு அமைத்தனர். மூன்று நிலை விமா னம். இந்திரன், தேர் உத்ஸவத்தை நடத்தினான். தான் ஆராதிக்கும் ஸௌம்ய நாராயணனை இங்கு பிர திஷ்டை செய்தான். புரூருவஸ் என்கிற அரசன், கதம்ப முனிவரின் கட்டளைப்படி கங்கைக் கரையிலிருந்து 1500 சான்றோர்களை அழைத்து வந்து இங்கு குடி அமர்த்திப் பணி செய்தான்.

சான்றோர் கூட்டம் வந்ததால் கோட்டியூர் ஆயிற்று. இந்த அஷ்டாங்க விமானம் 3 நிலைகளை உடையது. முதல் நிலை : வைகுண்டம், திருப்பாற்கடலுக்கு ஒப்ப பக வான் உரக மெல்லணையான் என்கிற திருநாமத்துடன் கிடந்த கோலம், திருவடி அருகே ஸ்ரீதேவி பூதேவி, தலைப் பக்கம் கதம்ப முனிவர். 2ம் நிலை: நின்ற திருக்கோலம் ஸ்ரீதேவி பூதேவி சகிதம். 3ம் நிலை: பரமபதத்துக்கு ஒப்பாக பரவாசுதேவன் அமர்ந்த திருக்கோலம். பூமி மட்டத்துக்குக் கீழாக நடனமாடும் கிருஷ்ணன்.

**சிறப்புகள் :**

ஸ்ரீ உடையவரின், ஐந்து ஆசார்யர்களில் ஒருவரான திருக்கோஷ்டியூர் நம்பி அவதரித்த தலம், ஸ்ரீராமாநுஜர் திருவரங்கத்திலிருந்து 18 முறை இங்கு நடந்து வந்து அஷ்டாக்ஷர மந்திர அர்த்த உபேதசம் பெற்று, ஆசார்யன் இம்மந்திரத்தை ஒருவருக்கும் சொல்லாதே என்கிற கட்டளையையும் மீறி, ஆசையுடன் விண்ணப்பித்த எல்லோருக்கும் அஷ்டாக்ஷர மந்திர அர்த்தத்தை உபேத சித்த க்ஷேத்திரம்.

திருக்கோட்டியூர் நம்பி, கருணையுடன் ஸ்ரீராமாநு ஜரை நீர் எம்பெருமானாரோ என்று அழைத்த க்ஷேத்ரம். வைணவத்துக்கு எம்பெருமானார் தரிசனம் என்கிற பெயர் உண்டாகக் காரணமான க்ஷேத்ரம்.

எம்பெருமானாரின் திருவுருவத்தை கோபுரத்து உச்சியில் இப்போதும் தரிசிக்கலாம்.

பெரியாழ்வாருக்கு இதுவே ஆயர்பாடி ஆயிற்று. கண்ணனின் அவதாரப் பெருமையை வண்ண மாடங்கள் சூழ் திருக்கோட்டியூர், கண்ணன், கேசவன், நம்பி பிறந்தனில் என்று கொண்டாடுகிறார். அஷ்டாங்க விமானத்தின் நிழல், தரையில் படுவதில்லை.

| | |
|---|---|
| பெருமாள் | – மூலவர் உரகமெல்லணையான் கிழக்கு நோக்கிய கிடந்த திருக்கோலம். |
| உத்ஸவத்திருமேனி | – ஸௌம்ய நாராயணன். (கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலம்) |
| தாயார் | – திருமாமகள் நாச்சியார். |
| புஷ்கரணி | – தேவபுஷ்கரணி க்ஷீராப்தி. |
| விமானம் | – அஷ்டாங்க விமானம். |
| தீர்த்தம் | – ..... |
| ஸ்தல விருக்ஷம் | – பலா மரம். |
| ப்ரத்யக்ஷம் | – கதம்ப மகரிஷி, இந்திரன். |
| ஆகமம் | – வைகானஸம். |
| மங்களாசாஸனம் | – பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார், பெரியாழ்வார், திருமங்கை ஆழ்வார். |

### த்யான சுலோகம்

*க்யாதே கோஷ்டிபுரே ப்ரஸித்த விபவ: ஶ்ரீஸௌம்ய நாராயண:*
*தீர்த்தம் திவ்யஸரோ விமாநம் அமலந் த் வஷ்டாங்க நாமாத்புதம் |*
*தஸ்யஶ்ரீர் தயிதா கதம்பமுநயே ப்ரத்யக்ஷ ரூபப் புரா,*
*கோஷ்டீ பூத ஸமஸ்த தேவநிகரோ, தேவ: புரஸ்தாந் முக: ||*

–ஶ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

### பாசுரம்

*"இன்றா அறிகின்றேன் அல்லேன்; இரு நிலத்தைச்*
*சென்று ஆங்கு அளந்த திருவடியை, அன்று*
*கருக்கோட்டியுள் கிடந்து கைதொழுதேன், கண்டேன்*
*திருக்கோட்டி எந்தை திறம்."*

– பூதத்தாழ்வார்

*"குறிப்பு எனக்குக் கோட்டியூர் மேயானை ஏத்த*
*குறிப்பு எனக்கு நன்மை பயக்க - வெறுப்பனோ?*
*வேங்கடத்து மேயானை மெய்வினை நோய் எய்தாமல்*
*தான் கடத்தும் தன்மையான்தாள்."*

– திருமழிசையாழ்வார்

*"வண்ணமாடங்கள் சூழ் திருக்கோட்டியூர்*
*கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்*
*எண்ணெய் சுண்ணம் எதிர் எதிர் தூவிடக்*
*கண்ணன் முற்றம் கலந்து அளறாயிற்றே."*

– பெரியாழ்வார்

*"தாரேன் பிறர்க்கு உன் அருள் என்னிடைவைத்தாய்*
*ஆரேன் அதுவே பருகிக் களிக்கின்றேன்*
*காரேய் கடலே மலையே திருக்கோட்டி*
*ஊரே, உகந்தா யையுகந் தடியேனே."*

– திருமங்கை ஆழ்வார்

*"வான் பார்க்கும் பைங்கூழ்போல் வாளா உனது அருளே*
*யான் பார்க்க நீ பார்த்து இரங்கினாய் - தேன் பார்ப்பின்*
*ஓசைத் திருக்கோட்டியூரானே! இன்னமும் என்*
*ஆசைத் திருக்கு ஓட்டி ஆள்."*

(பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாசுரம்)

### நாமாக்கள்

391. *ஓம் பரமஸ்பஷ்ட: நம:*
(எல்லாரும் காணும்படி அவதரிப்பவனே)
*ஓம் ப்ராணசக்த்யை நம:*
(உயிர்கள் வாழ சக்தி அளிப்பவளே)

392. *ஓம் துஷ்ட: நம:*
(அவதாரங்களில் மகிழ்ச்சி அடைபவனே)
*ஓம் விபீஷண்யை நம:*
(அடியார்களின் பயத்தைப் போக்குபவளே)

393. *ஓம் புஷ்ட: நம:*
(மஹாகுணங்கள் நிரம்பியவனே)
*ஓம் அஸூதாரிண்யை நம:*
(ப்ராணனைக் காப்பவளே)

394. *ஓம் ஸுபேக்ஷண நம:*
(மங்கள கடாக்ஷ வீக்ஷிண்ய ஸ்வரூபியே)
*ஓம் பத்ராயை நம:*
(மங்களமானவளே)

395. *ஓம் ராம: நம:*
(வடிவழகும், குணங்களும் நிரம்பி மயக்கி, மகிழச் செய்பவனே)
*ஓம் ஜயாவஹாயை நம:*
(வெற்றி அளிப்பவளே)

396. **ஓம் விராம: நம:**
(எல்லாருடைய பெருமைகளையும் பெற்று, அவைகள் இருக்குமிடமாக இருப்பவனே)
**ஓம் சந்த்ரவதனாயை நம:**
(மகிழ்ச்சி ததும்பும் திருமுகம் உடையவளே)

397. **ஓம் விரத: நம:**
(ஆசையற்றவனே)
**ஓம் குடிலாலகாயை நம:**
(சுருண்ட முன்நெற்றி கேசத்தை உடையவளே)

398. **ஓம் மார்க்க: நம:**
(முனிவர்களால் தேடப்படுபவனே)
**ஓம் சித்ராம்பராயை நம:**
(பல நிறங்களில் பரிவட்டம் அணிந்தவளே)

399. **ஓம் நேய: நம:**
(முனிவர்களின் ஆக்ஞைக்கு உட்பட்டவனே)
**ஓம் சித்ர கந்தாயை நம:**
(ஆச்சர்யமான சாந்தை அணிபவளே)

400. **ஓம் நய: நம:**
(எல்லாவற்றையும் செயற்படுத்துபவனே)
**ஓம் ரத்னமௌலி ஸமுஜ்பலாயை நம:**
(ரத்னக்கிரீடத்தை அணிந்து பிரகாசிப்பவளே)

**ஸ்ரீமஹாலக்ஷ்மி திருமாமகள் நாச்சியார் சமேத**
**ஸ்ரீஉரகம்ருது சயனாய பரப்ரஹ்மணே நம:**
**ஸ்ரீஉபேந்த்ர நாராயண ஸ்திதபூர்ணாய பரப்ரஹ்மணே நம:**
**ஸ்ரீபூஸமேத ஸ்ரீபரவாஸுதேவ பரமபதநாத பரப்ரஹ்மணே நம:**
**ஸ்ரீந்ருஸிம்ஹ பரப் ப்ரம்மணே நம:**
**ஸ்ரீகிருஷ்ண பரப்ரஹ்மணே நம:**

திருப்பத்தூர் சிவகங்கை சாலையில் சுமார் 10 கி.மீ. தேவகோட்டை ரயில் நிலையம் அருகே இத்திவ்விய தேசம் அமைந்துள்ளது.

**திவ்ய தேச வைபவம் வளரும்...**

## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# சிறார் வாக்கு

***குழந்தைகளே ... நீங்கள் எழுதுங்கள் ! பெரியோர்களே ... நீங்கள் ஊக்குவியுங்கள் !!***

**சிறுவர் சிறுமிகளிடையே நம்முடைய பண்பாட்டின் மீதும், தர்மத்தின் மீதும், புராணத்தின் மீதும், பகவானின் மீதும், பெரியோர்களின் மீதும் ஒரு நல்ல எண்ணம் ஏற்படுவதற்கும், ஆன்மீகச் சிந்தனையை வளர்ப்பதற்கும் சிறார் வாக்கு எனும் தொடர் பிரதி மாதம் ஸப்தகிரி இதழில் மலர்கிறது.**

***யாரெல்லாம் எழுதலாம்? என்ன எழுத வேண்டும்?***

பத்தாம் வகுப்பு அல்லது அதைவிடக் குறைந்த வகுப்பில் படிக்கும் மாணவ மாணவிகள் அனைவரும் எழுதலாம். நீங்கள் படித்த கடிதங்கள், நீங்கள் கேட்ட தர்ம நீதிக்கதைகள், ஹரிகதைகள், புராணங்கள், இதிஹாசங்கள், நீதிசதகங்கள் முதலானவற்றில் உள்ள ஆன்மீகக் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு நீங்கள் கதையாகவோ, கவிதையாகவோ, கட்டுரையாகவோ அல்லது பகவான் மீது உங்களுக்கு எழும் சிந்தனையினையோ எழுதலாம்.

***பெரியோர்கள் செய்ய வேண்டியன...***

குழந்தைகளிடம் நம்முடைய புராண, இதிஹாஸங்கள் மீது நல்அறிவினை வளர்ப்பதற்கு அவர்களுக்குத் தகுந்த அறிவுரைகளை வழங்கி, சிறிய சிறிய ஆன்மீக நூல்களை படிக்குமாறு அவர்களை ஊக்குவித்து எழுத வையுங்கள்.

***நிபந்தனைகள் :***

**படைப்பு இரண்டு பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். ஒரு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும். முழு விலாசம், பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன், படைப்பு உங்கள் சொந்தமானது என்னும் உறுதிப்பத்திரத்தில் நீங்கள் பயிலும் பள்ளித் தலைமையாசிரியர் கையொப்பமிட்டு அனுப்ப வேண்டும். நீங்கள் படைப்பினை அனுப்பின பிறகு இறுதி முடிவு பிரதான ஆசிரியருடையதே. படைப்பின் மீது எத்தகைய கடிதப் போக்குவரத்துக்கும் இடமில்லை.**

*படைப்பினை அனுப்ப வேண்டிய முகவரி :*
பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், கே.டி. சாலை, தி.தி. தேவஸ்தானம், திருப்பதி–517 507.



**குழந்தைகளே எழுதுங்கள்! கோவிந்தன் திருவருளை பெறுங்கள்!!**



**ஓம் உதாராங்காயை நம:**



**ஜனவரி 2020** ஸ்ரீவேங்கடநிவாசாய ஸ்ரீநிவாசாய மங்களம்!!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

**பிப்ரவரி 2020** ஸ்ரீவேங்கடநிவாசாய ஸ்ரீநிவாசாய மங்களம்!!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

**மார்ச் 2020** ஸ்ரீவேங்கடநிவாசாய ஸ்ரீநிவாசாய மங்களம்!!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

## ஜனவரி 2020


01 ஆங்கில வருட பிறப்பு
06 வைகுண்ட ஏகாதசி
7–13 ஆண்டாள் நீராட்டோத்ஸவம்
14 போகி, போகித்தேர்
15 மகர சங்கராந்தி–பொங்கல்
16 மாட்டுப்பொங்கல்,
ஆண்டாள் பரிணயோத்ஸவம்
24 புரந்தரதாசர் ஆராதனை
26 இந்தியக் குடியரசு தினம்

## பிப்ரவரி 2020

01 இரத சப்தமி
05 பீஷ்ம ஏகாதசி
09 ஸ்ரீராமகிருஷ்ண தீர்த்த முக்கோட்டி
14–22 ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண
வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
14–23 திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி
பிரம்மோத்ஸவம்
21 மஹாசிவராத்திரி

## மார்ச் 2020

2–10 தரிகொண்ட ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி
பிரம்மோத்ஸவம்
5–9 திருமலையப்ப ஸ்வாமி தெப்போத்ஸவம்
09 குமாரதார தீர்த்த முக்கோட்டி
10 ஸ்ரீலக்ஷ்மி ஜெயந்தி
23–31 திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
23–27 நாகுலாபுரம் ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி
தெப்போத்ஸவம்
25 தெலுங்கு வருட பிறப்பு (ஸ்ரீஸார்வரி நாமம்)



**ஏப்ரல் 2020** ஸ்ரீவேங்கடநிவாசாய ஸ்ரீநிவாசாய மங்களம்!!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

**மே 2020** ஸ்ரீவேங்கடநிவாசாய ஸ்ரீநிவாசாய மங்களம்!!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

**ஜூன் 2020** ஸ்ரீவேங்கடநிவாசாய ஸ்ரீநிவாசாய மங்களம்!!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

## ஏப்ரல் 2020

02 ஸ்ரீராமநவமி

2-10 ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

3 திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி கல்யாணோத்ஸவம்

5-7 திருமலையப்ப ஸ்வாமி வஸந்தோத்ஸவம்

7 தும்புரு தீர்த்த முக்கோட்டி

14 தமிழ் வருட பிறப்பு

25 பரசுராம ஜெயந்தி, 26 அக்ஷய திருதியை

27 சங்கர ஜெயந்தி 28 இராமாநுஜ ஜெயந்தி

## மே 2020

1-3 திருமலை ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச பரிணய மஹோத்ஸவம்

5-8 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் வஸந்தோத்ஸவம்

5-13 நாகுலாபுரம் ஸ்ரீவேதநாராயணஸ்வாமி பிரம்மோத்ஸவம்

06 நரசிம்ம ஜெயந்தி, தரிகொண்ட வெங்கமாம்ப ஜெயந்தி

07 கூர்ம ஜெயந்தி, 08 அன்னமாசார்யர் ஜெயந்தி

12 திருப்பதி ஸ்ரீகங்கை அம்மன் சித்திரைத் திருவிழா

15-23 கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி பிரம்மோத்ஸவம், 17 ஹனுமத் ஜெயந்தி

28-ஜூன்5 திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

## ஜூன் 2020


1-5 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் தெப்போத்ஸவம்

2-10 ரிஷிகேஷ்/நாராயணவனம் ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

2-10 அப்பளாயகுண்ட்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

4-6 திருமலையப்ப ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்

25-27 ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி சாக்ஷாத்கார வைபவோத்ஸவம்



**ஜூலை 2020** ஸ்ரீவேங்கடநிவாசாய ஸ்ரீநிவாசாய மங்களம்!!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

**ஆகஸ்ட் 2020** ஸ்ரீவேங்கடநிவாசாய ஸ்ரீநிவாசாய மங்களம்!!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

**செப்டம்பர் 2020** ஸ்ரீவேங்கடநிவாசாய ஸ்ரீநிவாசாய மங்களம்!!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | | | |

## ஜூலை 2020

1-3 திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்
1-4 திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம்
5 ஆஷாட பௌர்ணமி, வியாச ஜெயந்தி, குருபௌர்ணமி
15-18 திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பவித்ரோத்ஸவம்
16 திருமலையப்ப ஸ்வாமி ஆனிவர ஆஸ்தானம்
24 நாகசதுர்த்தி, ஆண்டாள் திருநட்சத்திரம்-திருவாடிப்பூரம்
25 கருட பஞ்சமி
29-ஆக.1 திருமலையப்ப ஸ்வாமி பவித்ரோத்ஸவம்
31 வரலக்ஷ்மி விரதம்

## ஆகஸ்ட் 2020

03 ஸ்ரீஹயக்ரீவ ஜெயந்தி, விகனச ஜெயந்தி
04 காயத்ரி ஜபம்
12 கோகுலாஷ்டமி
15 இந்திய சுதந்திர தினம்
20 பலராம ஜெயந்தி
21 வராஹ ஜெயந்தி
22 விநாயகர் சதுர்த்தி
30-செப்.02 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பவித்ரோத்ஸவம்

## செப்டம்பர் 2020

01 அனந்த பத்மநாப விரதம்
05 ஆசிரியர் தினம்

19-27 திருமலையப்ப ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவம்
23 திருமலையப்ப ஸ்வாமி கருட சேவை
26 திருமலையப்ப ஸ்வாமி திருத்தேர்



**அக்டோபர் 2020** ஸ்ரீவேங்கடநிவாசாய ஸ்ரீநிவாசாய மங்களம்!!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

**நவம்பர் 2020** ஸ்ரீவேங்கடநிவாசாய ஸ்ரீநிவாசாய மங்களம்!!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

**டிசம்பர் 2020** ஸ்ரீவேங்கடநிவாசாய ஸ்ரீநிவாசாய மங்களம்!!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## அக்டோபர் 2020

02 காந்தி ஜெயந்தி
16–24 திருமலையப்ப ஸ்வாமி நவராத்ரி பிரம்மோத்ஸவம்
20 திருமலையப்ப ஸ்வாமி கருட சேவை
21 திருமலையப்ப ஸ்வாமி புஷ்பக விமானம்
23 திருமலையப்ப ஸ்வாமி தங்கத்திருத்தேர்
24 துர்காஷ்டமி, மஹாநவமி, 25 விஜயதசமி

## நவம்பர் 2020

11–19 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பிரம்மோத்ஸவம்
14 நரக சதுர்தசி, தீபாவளி அமாவாசை
15 ஸ்ரீகேதார கௌரி விரதம்
20 துங்கபத்ரா நதி புஷ்கரணி ஆரம்பம்
21 திருமலையப்ப ஸ்வாமி புஷ்பயாகம்
25–29 நாராயணவனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம்
27 கைசிக துவாதசி ஆஸ்தானம்

## டிசம்பர் 2020

03 திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி லக்ஷ வில்வார்ச்சனை
12 தன்வந்தரி ஜெயந்தி
16 மார்கழி மாதம் ஆரம்பம்
25 வைகுண்ட ஏகாதசி, கீதா ஜெயந்தி
25–29 திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம்
29 தத்த ஜெயந்தி



# ஆண்டாள் போற்றும் கோவிந்தன்

டாக்டர் கலியன் சம்பத்து,
சென்னை.

அகிலம் காக்கும் கோவிந்தன், மயற்வற மதிநலம் அருளிய ஆழ்வார்களின் அருளிச் செயல் பாசுரங்களில் போற்றப்படுகிறான். ஆழ்வார்கள் ரிஷிகளை விட மேன்மையானவர்கள் என்றும், ஆண்டாள் ஆழ்வார்களில் மிகவும் மேன்மையானவள் என்றும் கருதி, ஆண்டாளின் பாசுரங்களைப் போற்றுவர். ஆண்டாள் இறைவனிடம் கொண்ட பக்திக்காதல் பள்ளத்தை நோக்கிச் செல்லும் நீரின் இயல்பு போன்றது. இயற்கையானது. பிஞ்சு காயாகிப் பின் பழமாவது போல, இறைவனிடம் நாம் செலுத்தும் பக்தியும் பரபக்தி, பரஞானம், பரமபக்தி என்று படிப்படியாக உயரும். ஆண்டாளைப் ''பிஞ்சாய்ப் பழுத்தாளை'' என்று பெரியோர் கூறுவர். ஆண்டாளும் சூடிக்கொடுத்த பூமாலையுடன், திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகிய பாமாலையும் தந்தாள். அந்தப் பாமாலைகளில் கோவிந்தன் புகழ் பாடும் சில பாசுரங்களை இங்கு சுவைக்கலாம்.

*''மாயனை மன்னு வடமதுரை மைந்தனை*
*தூயபெரு நீர் யமுனைத் துறைவனை*
*ஆயர் குலத்தினில் தோன்று மணிவிளக்கை*
*தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை*
*தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது*
*வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க*
*போய பிழையும் புகுதருவான் நின்றனவும்*
*தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்''* – திருப்பாவை–5

ஆண்டாள் இப்பாசுரத்தில் ஐந்து அடைமொழிகள் கொடுத்து, கோவிந்தனைப் புகழ்கிறாள்.

### திருப்பாவையில்

மாயனை : பகவத் கீதையில் கண்ணனே, ***''எனது மாயை வெல்ல இயலாதது''*** என்கிறான். இளங்கோ வடிகள், தம் சிலப்பதிகாரத்தில் ***''பெரியவனை மாயவனை''*** என்று திருமாலைப் போற்றுகின்றார். ***''மாயவன் பின் வழி சென்று''*** என்று பெரியாழ்வார் கூறியுள்ளார் (பெரியாழ்வார் திருமொழி 3–8–10). எப்படிப்பட்ட மாயன் இவனென்றால், மாவலிச் சக்கரவர்த்தியிடம், வாமன வடிவில் வந்து மூன்றடி மண் கேட்டவன், பின் அவனே உலகளக்க திருவிக்ரமன் ஆனவன். கண்ணனாகச் சிறையில் பிறந்து கோகுலத்தில் வளர்ந்தவன். ***''கோவிந்தா, கோவிந்தா''*** என்று பாஞ்சாலி சரணம் அடைந்தபோது, அவள் மானத்தையும் – தாலிச்சரட்டையும் காப்பாற்றியவன். இப்படிப் பல மாயங்கள் செய்தவன்.

***வடமதுரை மைந்தனை:*** மாயனாக இருந்தவன், பின்னர் மைந்தனாக – சிறுவனாகவும், தோழனாகவும் – வடமதுரையில் வளர்கிறான். மன்னுதல் என்றால் "நிலைபெறுதல்" என்று பொருள். வடமதுரை இன்றும் நிலைபெற்றிருக்கிறது; கோவிந்தனுடன் நீங்காத பெருமையுடைய நகரமாகவும் இன்று விளங்குகிறது.

***''மன்னு வடமதுரை மைந்தன்''*** என்பதால், கலியுக அர்ச்சாவதாரம் உருவ வழிபாடு போற்றப்படுகிறது.

***துய பெருநீர் யமுனைத் துறைவன்:*** கண்ணனின் நீர் விளையாட்டு நிகழ்ந்த இடமாதலால் யமுனைநதி தூய்மையாகிறது; எப்பொழுதும் பெருகியோடும் நீரையும் உடையது. எம்பெருமான் கண்ணனுடன் விளையாடிய அடியார்களாகிய – கோபியர்களாலும், அவனாலும் தூய்மை பெற்ற யமுனைநதி.

இராவணனால் கவர்ந்து செல்லப்பட்ட சீதை, வழியில் கோதாவரியைப் பார்த்து, தன் துன்பத்தை இராமனிடம் தெரிவிக்க வேண்டியும், கோதாவரி ஆறு, இராவணனுக்குப் பயந்து தெரிவிக்கவில்லையாம்; ஆனால், யமுனா நதியோ, கண்ணன் பிறந்த அன்றே வசுதேவர் அவனைக் கோகுலத்திற்குக் கூடையில் வைத்துச் சென்றபோது – பெருமழையும் வெள்ள மும் பெருகிய நிலையிலும், கம்சனிடம் சிறிதும் பயமின்றி – வழிவிட்டது. அதற்கு மகிழ்ந்த ஆண்டாள் *''தூய பெருநீர் யமுனை''* என்று பாராட்டுகிறாள்.



***ஆயர்குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை:*** "மாயனை" என்று விளித்தவள், ஆயனையும் போற்றுகிறாள். எதனால் என்றால், "மன்னனாகப் பிறந்தவன், மாடு மேய்க்கும் ஆயனாகத் தன்னைத் தாழ்த்திக் கொண்டு – யாதவ குலத்திற்கே பெருமை சேர்த்ததுடன் – குன்றம் ஏந்திக்குளிர்மழை காத்தவன்" என்பதாலும் இவ்வாறு கூறுகிறாள். இளங்கோவடிகளும், சிலப் பதிகாரத்தில், *''ஆ காத்து ஓம்பி ஆப்பயன் அளிக்கும் கோவலர் வாழ்க்கையோர் கொடும் பாடு இல்லை''* என்று கூறுகிறார். *''அணிவிளக்கு''* என்றால், அழகான விளக்கு – அலங் காரம் மிக்க விளக்கு – பெருமை உடைய விளக்கு – அருகில் உள்ள விளக்கு – என்று பல பொருள் கொள்ளலாம். இவையனைத்தும் ஸ்ரீகிருஷ்ணனுக்குப் பொருந்தும்; கண்ணன் அழகன்; அலங்கரம் மிக்க பட்டுப் பீதாம்பரதாரி. கம்சனை வதம் செய்ததாலும், மற்ற அரக்கர் களை அழித்ததாலும், பஞ்சபாண்டவர்க்காகத் தூது சென்றும், தேரோட்டியும், பணி செய்த மையாலும், பெருமையுடைய விளக்கு. கண்ணன், *''பத்துடை அடியவர்க்கு எளியவன், பிறர்களுக்கு அரிய வித்தகன்''* என்றார் நம்மாழ்வார் (திருவாய்மொழி 1–3–1). *''வெங்கதிரோன் குலத்துக்கு ஓர் விளக்காய்த் தோன்றி''* என்றார் குலசேகர ஆழ்வார் (பெருமாள் திருமொழி 10–1). இங்கு குலசேகர ஆழ்வார் பாராட்டுவது ஸ்ரீராமனை. இராமன் "பகல் விளக்கு" என்றால், கண்ணன் "இரவில் விளக்கு" என்று விளக்கவுரை கூறிப் பெரியோர் மகிழ்வர். இராமனின் தந்தை, உடன் பிறந்தார் அனைவரும் வில் வித்தையில் சிறந்தவர்கள். இராஜா ராமனாகப் பிறந்தவன், சீதா ராமனாகப் பட்டாபிஷேகம் செய்து கொண்டவன்; கண்ணன் எளிய குலத்தில் வளர்ந்து, "கோவிந்த பட்டாபிஷேகம்" செய்து கொண்டவன். ஆயர் களைப் பெருமைப்படுத்திய கிருஷ்ணாவதாரமே உயர்வுடையது எனப் பெரியவர்கள் அனுபவிப்பர். எனவே *''ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கு'* என்று ஆண்டாள் கூறியது சாலவும் பொருந்தும்.




***தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை*** : பெற்ற தாய்க்கும், வளர்த்த தாய்க்கும் ஒரு சேரப் பெருமை சேர்த்தான் கண்ணன். ஏழுக்குப் பிறகு எட்டாவதாகப் பிறந்து – வளர்ந்து – "கம்சனை மாமன் என்றும் பாராது அழித்தது – பஞ்ச பாண்டவர்க்காக, கழுத் திலே ஓலை கட்டிக் கொண்டு தூது சென்றது – தேரோட்டியும், பணி பல செய்தது கீதையை அருளிச் செய்தது'', ஆகியவற்றால் தாய்மார்கள் இருவரின் வயிற்றைப் பிரகாசிக்கச் செய்தான். கண்ணன் பெற்ற வயிற்றுக்குப் பட்டம் கட்டியவன் என்றும், *''என்ன நோன்பு நோற்றாள் கொல்லோ இவனைப் பெற்ற வயிறுடையாள்''* என்றும் கொண்டாடப்பட்டவன்.



"தாமம்'' என்றால் "கயிறு" என்றும், "உதரம்'' என்றால் "வயிறு" என்றும் பொருள் கொண்டு, "தாமோதரன்" என்பர் பெரியோர். கண்ணனைக் கட்டிப் போட்டவர் இருவர். பாசத்தால் கட்டினாள் யசோதை. *''நேராகக் கைப்பிடித்து நின்னையும் கட்டுவனேல்''* என்று தன் நேசத்தால் சகாதேவன் கட்டினான். ஊரார்க்குக் கட்டுப்படாதவன்,

தாயாருக்குக் கட்டுப்பட்டான். *''கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப் பண்ணிய பெரு மாயன்''* என்று கூறிய மதுரகவியாழ்வார் பாசுரம் இங்கு நினைவு கொள்ளத்தக்கது.


*தூயோமாய் வந்து* : நாங்கள் உடல் தூய்மையுடன், உள்ளத்தூய்மையும் உடையவர் களாக்கும் என்கிறாள் ஆண்டாள்.



*தூமலர்த் தூவித்தொழுது:* கண்ணனை எந்த மலராலும் தூவி வழிபடலாம் என்று கூறிய ஆசாரியரிடம், சீடன், "அறநூல்களில் கண்ட காரிகாவின் (சப் பாத்தி முள்) பூவை இடக்கூடாது" என்று உள்ளதே எனக்கேட்க, அதற்கு ஆசாரியர், "மலர் பறிக்கும் பக்தன் கையில் முள் குத்தக் கூடாது" என்ற கருணையே அதற்குக் காரணம் என்றார். எனவே, பக்தன், தான் துன்பப்படாது பறிக்கும் பூவே, "தூமலர்" ஆயிற்று எனலாம்.

*வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க:* வாய் மட்டும் "கோவிந்தா" என்று கூறி மனம் சர்க்கரைப் பொங்கலை எண்ணக்கூடாது. எனவே, "மனத்தினால் சிந்தித்து வாயி னால் பாட வேண்டும்; இதுதான் முறை. ஆனால், ஆண்டாள் முறை மாற்றிக் கூறியதற்குக் காரணம், கண்ணனைப் பார்க்கும் பேரானந்தத்தில் மனமும், வாயும், நான் – நீ எனப் போட்டி போடுவதாகப் பெரியோர் நயமாகக் கூறுவர்.

*போயபிழையும் புகு தருவான் நின்றனவும்:* பிராராப்தம், சஞ்சிதம், ஆகாமியம் என்ற நம் பாவமூட்டையை, அவன் நாமம் கூறி நீக்கிக் கொள்ளலாம். அவனை அகத்தில் நிறுத்தினால் புறத்தில் தீமைகள் ஏற்படாது.



*தீயினால் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய்:* நமது பாவங்கள் மேற்சொன்ன முறைகளில் கோவிந்தனை வழிபட்டால் – தீயில் சிக்கிய பஞ்சுபோல, ஒன்றுமில்லாது போகும். ஆண்டாளுக்கு மிகவும் பிடித்த பெயர்களில் "கோவிந்தன்" மிக முக்கியமானதாகும். திருப்பாவையில் 27,28,29 ஆகிய மூன்று பாசுரங்களிலும், நாச்சியார் திருமொழியில் எட்டுப் பாசு ரங்களிலும் (1–3,2–9,6–2,8–3,10–7,12–4,12–9 (இருமுறை), (13–9) கோவிந்தன் நாமத்தைக் கூறுகிறார்.

இதில், திருப்பாவை, 27,28,29 ஆம் பாசுரங்களில் முறையே, *''கூடாரை வெல்லும் சீர்க்கோவிந்தா''* என்றும், *''குறைவொன்றுமில்லாத கோவிந்தா''* என்றும், *''இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா''* என்றும் ஆண்டாள் கூறியதின் நயத்தைப் பார்க்கலாம்.



*கூடாரை வெல்லும் சீர்க்கோவிந்தன்:* கண்ணனுக்குத் தன் திருநாமங்களில் மிகவும் பிடித்த பெயர் "கோவிந்தன்" என்பர் பெரியோர். கோவிந்தன் என்றால் அதிகம் பாவம் செய்தவனையும் ஈடேற்றும் என்றும், நரகமும் சொர்க்கமாகும் என்றும் கூறுவர். இன்றும் திருப்பதி மலைக்குச் செல்வோர் பக்திப் பெருக்குடன் அதிகம் உச்சரிப்பது, "கோவிந்தன்" நாமமே.

கோவிந்தனோடு ஒத்துப் போகாமல், எதிரியாக இருப்பவனையும், தன் வீரத்தாலும், தன் ஆயுதங்களாலும் வெல்லக் கூடியவன். அவனோடு கூடினால், அவன் மிக்க விருப்பத்துடன் தோற்பான். அத்தோல்வி அவனுக்கு இன்பமே தரும். எனவே, கூடைரை வெல்லும் வீரமும், கூடியவர்களுடன் தோற்பது போல் வெல்வது, தன் அருளால் என்றும் பெரியோர் கூறுவர். *''வையத்து வாழ்வீர்காள்''*

பாசுரத்தில் கூறப்பட்ட விரதங்களை முடித்துக் கொண்டு, சன்மானம் (வெகுமதி) பெறும் பொருள்களைக் கூறுவது இப்பாசுரம்.

**குறையொன்றுமில்லாத கோவிந்தா:** திருப்பாவையின் உயிர்ப் பாசுரமாகக் கருதப்படும் இப்பாசுரத்தின் வைரவரியாகும் இது. ஜீவாத்மா ஆகிய எங்களிடம் குறைகள் இருக்கும். பரமாத்மாவாகிய உன்னிடம் குறையேதுமில்லை.

“மனத்திலே தூய்மை இல்லை, வாயிலோர் இன்சொல் இல்லை” – என்ற தொண்டரடிப்பொடியாழ்வார் (திருமாலை–30) பாசுரப்படிதானே பெரும்பாலோர், இன்றும் இருக்கிறார்கள். எங்களிடம் அஞ்ஞானம் உள்ளது. உன்னிடம் “ஞானம்” உள்ளது. நாங்கள் சிறு துளி, நீயோ கருணைக்கடல், நாங்கள் பள்ளம், நீ மேடு, நாங்கள் பக்தி என்ற மண்ணால் வளர்ந்து, மேடாகிய உன்னிடம் வர முயல்கின்றோம்.

வாலறிவனான இறைவன் முன்னிலையில் தம் தாழ்ந்த நிலையை இவ்வடி விளக்குகிறது.

**இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா:** கோவிந்தா! நீ எங்களை வேலையாட்களாக எண்ணிக் கொள். “பறை” என்பது கொட்டுகின்ற பறையன்று; பல பிறவிகளிலும், நாங்கள் உன்னடியார்கள். உன்னோடு ஒன்றியவர்கள்.

எங்கள் மனத்தில் உன்னைப் பற்றிய பக்தியும், செயலில் அடிமைப்பணியுமே (கைங்கரியப் பணி) இருக்க அருள்புரிவாயாக! ஆண்டாளின் எட்டாம் நூற்றாண்டுத் தமிழ் நம்மைக் கட்டிப் போடுகிறது. காலத்தை வெல்லும் ஆற்றல் ஆண்டாள் பாசுரங்களுக்கு உண்டு; தவிர, நமக்கு நல்நெறி காட்டும் கருத்துப் பெட்டகமாகவும் விளங்குகிறது என்பர் பெரியோர்.

### திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி
## 2020, பிப்ரவரி மாத விழாக்களும், பண்டிகைகளும்

| | |
|---|---|
| 1 | இரத சப்தமி. |
| 2-8 | திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி தெப்போத்ஸவம். |
| 5 | பீஷ்ம ஏகாதசி. |
| 9 | ஸ்ரீராமகிருஷ்ண தீர்த்த முக்கோட்டி. |
| 10 | திருமழிசையாழ்வார் திருநட்சத்திரம். |
| 13-22 | ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம். |
| 13-23 | திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம். |
| 21 | மகாசிவராத்திரி. |

*“பாதகங்கள் தீர்க்கும், பரமனடி காட்டும்*
*வேதம் அனைத்துக்கும் வித்தாகும் - கோதைத்தமிழ்*
*ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை*
*வையம் சுமப்பதும் வம்பு”*

என்ற பெரியோர் பாடலின் கருத்தை மனத்தில் தினமும் நினைப்பவனே வைணவன்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.


## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 41க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | ன் | ன | மா | ச் | சா | ரி | யா | ர் | | | 2 நா |
| ர் | த | நா | க | 3 ஏ | | | 4 ஆ | ண் | டா | ள் | ர |
| 5 லீ | லா | சு | க | ர் | வா | ழ் | மா | ம் | 6 ந | | த |
| 7 பெ | க | | 8 தி | ரு | ம | ழி | சை | யா | ழ் | வா | ர் |
| ரி | ர | 9 தி | ரு | ப் | பா | ணா | ழ் | வா | ர் | | ட |
| யா | 10 பி | ம் | 11 ம | த் | வா | ச் | சா | ரி | யா | ர் | ட் |
| ழ் | | ரா | ங் | கி | | ர் | ஜ | நு | மா | 12 ரா | ப |
| வா | | கா | கை | 13 மீ | ரா | பா | ய் | பா | னா | 14 ஜ | ண |
| ர் | ர் | க் | யா | ல் | 15 து | ள | சி | தா | ச | ர் | ய |
| | ச | 16 து | ழ் | 17 வா | ர் | த | ந் | ந | வா | க | 18 ரா |
| 19 பே | யா | ழ் | வா | ர் | | | ர் | வ | தே | ம | 20 நா |
| | 21 வி | | ர் | ப | ம் | 22 க | பீ | ர் | தா | ச | ர் |

ஹரே ராமா! ஹரே கிருஷ்ணா!!

# ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்

## அஜாமிளன் வரலாறு



தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : டாக்டர். சி. கோவிந்தசாமி-9676695443

ஸ்ரீமந் நாராயணனின் திருநாமங்களை உச்சரிப்பதால் உண்டாகும் நன்மையை எல்லோருடைய உள்ளத்திலும் நன்றாகப் பதியும்படியாக விவரித்துக் கூறுவது அஜாமிளன் வரலாறு ஆகும். ஸ்ரீமத்பாகவதத்தில் ஆறாம் ஸ்கந்தத்தில் அஜாமிளன் வரலாறு கூறப்பட்டுள்ளது. பரிசித் மகாராஜா கொடுமையான நரக லோகத்தைப் பற்றி அறிந்ததும் மிகவும் கவலையுற்றவனானார். எனவே, அந்த நரகத்திலிருந்து விடுபடுவதற்கு தான் என்ன செய்ய வேண்டும் என்றும், அதற்கான வழியைத் தனக்கு எடுத்துக்கூறும் படியாகவும் ஸ்ரீசுகமகரிஷியிடம் வேண்டினார். அதற்கு பதில் கூறும் விதமாக ஸ்ரீசுகமகரிஷி அஜாமிளன் என்பவனுடைய வரலாற்றினைக் கூறத் தொடங்கினார்.

கன்யாகுப்தம் என்ற நாட்டில் அஜாமிளன் என்ற பெயருடைய அந்தணன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் சிறந்த வேதாந்தியாகவும், தர்ம சீலனாகவும், நல்லொழுக்கம் உடையவனாகவும், பேசுவதில் மிகவும் கட்டுப்பாடுடையவனாகவும் இருந்தான். ஒரு நாள் தந்தையின் கட்டளைக்கு இணங்க பழம், புஷ்பம், சமித்து முதலானவற்றைச் சேகரித்து வருவதற்காக வனத்திற் குச் சென்றான். அவ்வாறு சென்று திரும்பி வருகையில், காமுகன் ஒருவன் தனக்கு விருப்பமான தாசியுடன் கூடி சல்லாபம் செய்து கொண்டிருப் பதைக் கண்டான். அதைக் கண்டதும், தன் நிலை மறந்தவனாகி, மனவலிமையற்றவனானான்; ஒழுக்கத்திலிருந்து வழுவினான். காமத்தீ அவன் உள்ளத்தில் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. அவன் உள்ளம் முழுவதும் அந்த தாசியின் நினைவே நிறைந்திருந்தது. அவன் தாசியின் தாசனானான். சில காலம் கழித்து அந்த தாசியையே தன் வீட்டிற்கு அழைத்து வந்து வாழ்க்கை நடத்தத் தொடங்கினான். அவளுடைய ஆலிங்கனத்திலேயே ஆனந்தத்தை அனுபவித்தான். அவனிடமிருந்து நல்லொழுக்கம் யாவும் அவனை விட்டு மறைந்தது. தாசியின் மீது கொண்ட மோகத்தால் மனைவியையும், செல்வத்தையும் தான் கடைபிடித்த அனுஷ்டானங்களையும் விட்டொழிந்தான்.தாசியின் தொடர்பினாள் அவனுக்குப் பத்துப் பிள்ளைகள் பிறந் தனர். அவர்களில் பத்தாவது குழந்தைக்கு நாராயணன் என்று பெய ரிட்டு வளர்த்து வந்தான். முதுமைக் காலத்தில் பிறந்த அந்த சிறுவன் மீது அஜாமிளன் மிகவும் அன்புடையவனாக இருந்தான். எந்த நேரத்திலேயும் அவனை நாராயாணா நாராயணா என்று அழைப்பதும் “நாராயணா இதை சாப்பிடு, நாராயணா இந்த பாலைக் குடி, நாராயணா இப்படி வா” என்று தன்னையும் அறியாமல் நாராயணன் நாமத்தை உச்சரித்து வந்தான்.

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. அஜாமிளனின் இறுதி காலம் நெருங்கியது. மூன்று எமதூதர்கள் பாசக்கயிற்றுடன் அவன் கண் முன் தோன்றினர். அஜாமிளன் மனம் மொழி மெய்களால் பல பாவங்கள் செய்திருந்த காரணத்தினால் மூன்று எமதூதர்கள் அவனை நெருங்கி வந்தனர். உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த

அஜாமிளன், அந்த நேரத்திலும் தன் கடைசி மகனைக் காண வேண்டும் என்ற ஆசையால் நாராயணா! நாராயணா! என்று கூவி அழைத்தான். "நாராயணா என்ற நாமம் அஜாமிளன் வாயிலிருந்து வெளிப்ப்பட்ட உடனே விஷ்ணு தூதர்கள் நால்வர் அங்கே காட்சியளித்தனர். அஜாமிளனின் உயிரை எடுக்க எமதூதர்கள் முயற்சித்தபோது, "நிறுத்துங்கள், நிறுத்துங் கள்" என்ற குரல் இடி முழக்கமாகக் கேட்டது. தங்கள் காரியத்தைச் செய்ய விடாமல் தடை செய்த அந்த குரலுக்குரிய விஷ்ணு தூதர்கள் நால்வரையும் பார்த்து எமதூதர்கள் வியந்து போனார்கள். "தர்மராஜனுடைய உத்தரவைத் தடை செய்ய நீங்கள் யார்? நீங்கள் யாருடைய சேவகர்கள். எங்கிருந்து வருகிறீர்கள்? இந்த அஜாமிளன் உடலை தொடாதவாறு ஏன் எங்களை தடுத்தீர்கள். நீங்கள் தேவர்களா? உபதேவர்களா? அல்லது சித்த புருஷர்களா?" என்று விஷ்ணு தூதர்களைப் பார்த்து கேட்டனர். உயர்த்திய குரலில் "உண்மையில் நீங்கள் எமதர்ம ராஜாவின் தூதுவர்கள் தானா? அப்படியானால் நீங்கள் தர்மத் தத்துவத்தையும், அதர்ம இலட்சணத் தையும் எங்களுக்கு எடுத்துச் சொல்வீர்களாக" என்று கூறினர். மேலும், தண்டிக்கும் முறைகள் யாவை? உண் மையில் தண்டனைக்குரியவர்கள் யார்? என்றெல்லாம் கேள்விகள் பல எழுப்பினர்.

"வேதத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந் ததே தர்மம். அதற்கு எதிரானவைகள் அனைத்தும் அதர் மம் ஆகும். வேதங்கள் அனைத்தும் உண்மையில் தேவ தேவனாகிய நாராயணனே! அவை அனைத்தும் தானாகத் தோன்றியவை. இவ்வுண்மைகளை நாங்கள் எங்கள் பிரபுவான எமதர்மராஜாவின் வாயிலாக அறிந் திருக்கின்றோம். நாராயணன் ஒருவனே எல்லா உலகத் திற்கும் காரணகர்த்தா ஆவார். சூரியன், சந்திரன், ஆகா யம், காற்று, தேவர்கள், சந்தியா காலம், பகல், இரவு, திசைகள், நீர், பூமி இவையனைத்தும் இறைவனாகவே இருந்து உயிர்களுக்குச் சாட்சி பூதங்களாய் அமைந்துள் ளது. இந்த சாட்சி பூதங்களினால் தர்ம விரோத காரியங் கள் என நிர்ணயிக்கப்படும் போது அவ்வகையான குற்றங்கள் தண்டனைக்கு உரியனவாகின்றன. சர்வ சக்தி மானாகிய எமதர்மராஜன் பிரம்மாவிற்கு நிகரானவன். அவன் புறமிருந்தே உயிர்களின் கர்மாக்களை அறிந்து கொள்கிறான். இவ்வாறாகத் தமக்குத் தெரிந்த தர்மத்தை விஷ்ணு தூதர்களுக்கு எமதூதர்கள் எடுத்துக்கூறினர். மேலும் அஜாமிளன் தான் செய்த பாவத்திற்கு பரிகாரம் செய்து கொள்ளவில்லை. அதனால் அவன் தண்ட னைக்கு ஏற்றப்படி அவனை எமபுரிக்கு அழைத்துச் செல் கிறோம் என்றனர். அவ்வாறு செய்வதின் மூலமாக அஜா மிளன் பாவங்களிலிருந்து நீங்கியவனாகிறான் என்று கூறினர்.

எமதூதர்கள் பேசியதைக் கேட்டு விஷ்ணு தூதர்கள் இவ்வாறாகக் கூறினர். "எம தூதர்களே! அஜாமிளனாகிய இவன் தான் செய்த பாவங்களுக்குப் பரிகாரம் செய்து கொண்டவனாகிறான். அதாவது, எவனொருவன் எல்லாராலும் கைவிடப்பட்ட நிலையில், நாராயணனை தஞ்சம் அடைந்து நாராயணன் நாமத்தை உச்சரிக்கின் றானோ அவனுக்கு ஒரு ஜென்மத்தில் உண்டான பாவங்கள் மட்டும் அல்ல, கோடி ஜென்மத்தில் உண்டான பாவங்களுக்கும் பரிகாரமாக இருந்து அவன் பாவங் களைப் போக்குகின்றது. பக்தி சிரத்தையுடன் அந்த நாமத்தை உச்சரிக்கவில்லை என்றாலும், தன்னை அறியா மல் உச்சரித்தாலும் கூட அத்திருநாமம் அவன் பாவங் களைத் தீர்த்து விடும் என்பதை உணர்ந்து கொள்ளுங் கள். அஜாமிளன் தன் மகனுக்கு நாராயணன் நாமத்தைச் சூட்டி, அப்பெயரை விடாமல் உச்சரித்து வந்தான் அல் லாவா? அதனால் அவன் பாவங்களை எல்லாம் அந்த திருநாமம் மறைத்து விட்டது. எனவே, விஷ்ணு நாமத்தை உச்சரிப்பது எல்லா நன்மையையும் தரக்கூடியது ஆகும் என்றனர்.

நாராயணன் நாமத்தை மறைமுகமாகச் சொன்னா லும் எள்ளி நகையாடிச் சொன்னாலும், பாடலாக அவன் நாமத்தை உச்சரித்தாலும் பல நன்மைகளை உண்டாக்கி பாவங்களைப் போக்குகின்றது. தற்செயலாக நடக்கும் சிறு சிறு விபத்துக்களின் போதும் ஹரி நாமத்தை உச்சரித்தால், அதனால் உண்டாகும் துன்பங்களிலிருந்து விடுதலைப் பெறலாம். மேலும் நம் பாவச் சுமைகள் எல்லாம் உலர்ந்த வைக்கோலை நெருப்பு சாம்பலாக்குவது போலக் கெட்டழிந்து விடும். மருந்தின் தன்மையை நன்கு அறிந்து உண்டாலும், அறியாமல் உண்டாலும் எப்படி உடல் நோயை போக்குகிறதோ, அதுபோல ஸ்ரீஹரியின் நாம மகிமை பாவங்களை நீக்கி விடும் என்றனர். இப்படியாக விஷ்ணு தூதர்கள் சொல்லியதைக் கேட்டு எமதூதர்கள் சமாதனம் அடைந்தார்கள். அஜாமிளன் உயிர் எமதூதர் களிடமிருந்து காக்கப்பட்டது. அவர்கள் உடனே அங்கிருந்து எமலோகம் புறப்பட்டு சென்றனர். அஜா மிளன் நாராயணனின் திருநாமத்தின் மகிமையை உணர்ந்து கொண்டான். விஷ்ணு தூதர்களின் திருவடி களில் வீழ்ந்து வணங்கினான்.

பாகவத கதை சாகரம் தொடரும்...

# ஸ்ரீபுரந்தர தாஸர்

திரு. ஆர். கண்ணன், பெங்களூரு
93435 83416

ஸ்ரீ புரந்தர தாஸரின் சரித்திரம் தனிச் சிறப்பு வாய்ந்தது. எம்பெருமானால் தடுத்து ஆட்கொள்ளப்பட்ட மகான் இவர். ஸ்ரீவரதப்ப நாயக்கர் என்னும் வைர–ரத்ன வியாபாரி புரந்தரகத என்னும் ஒரு நகரத்தில் வசித்து வந்தார். அவர் திருமலை ஸ்ரீநிவாசன் மேல் அளவில்லா பக்தி கொண்டவர். அந்த எம்பெருமானின் அருளால் அவருக்கு ஒரு மகன் பொது ஆண்டு 1480–ல் (சிலர் 1484 என்பர்) பிறந்தான். அந்த எம்பெருமானின் திருநாமத்தையே தன் மகனுக்கு "ஸ்ரீநிவாசன்" என்று பெயர் சூட்டி வாழ்ந்து வந்தார். ஸ்ரீநிவாசன் கன்னடம், சமஸ்க்ருதம் முதலிய மொழிகளை நன்கு கற்றுத் தேர்ந்தான். மேலும் சங்கீதக் கலையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தான்.

ஸ்ரீநிவாசன், துரதிரஷ்டவசமாக, தன்னுடைய இருபது வயதிற்குள்ளேயே தன் பெற்றோரை இழந்தான். தன் தகப்பனார் நடத்தி வந்த வியாபாரத்தை கவனத்துடன் செய்து பெரும் பொருள் ஈட்டினான். செல்வம் அவனைத் தேடி வந்தது. அவனை "நவ கோடி நாராயணன்" என்றே மக்கள் புகழ்ந்தனர்.



ஸ்ரீநிவாஸனுக்கோ அதுவரை ஆன்மீகத்தில் ஈடுபாடு இல்லை. அவனுக்கு பணம், செல்வத்தின் மீது அளவில்லாத பற்று. ஆனால் அவன் முற்பிறவியில் செய்த பயனாக, எம்பெருமான் அவனைத் தடுத்து ஆட்கொண்டு ஆன்மீகத்திலும், சங்கீதத்திலும் ஈடுபடும்படி திருவுள்ளம் கொண்டான். அவன் ஒரு சிறந்த சங்கீதப் புலவராகத் திகழ வேண்டும் என்பது அவன் எண்ணம். ஸ்ரீநிவாசனை உலக விஷயத்தினின்றும் திருப்பி ஆன்மீக விஷயத்தில் ஈடுபடுவதற்காக எம்பெருமான் ஒரு திருவிளையாடலையே புரிந்தார்.

எம்பெருமானின் திருவிளையாடலின் வாயிலாகத் தெளிவுற்று, தான் இதுவரை வாழ்ந்து வந்த வாழ்க்கையில் வெறுப்புற்று, தன்னுடைய செல்வத்தையெல்லாம் ஏழைகளுக்கு வாரி வழங்கினான். ஆன்மீகத்தில் ஈடுபடலானான். புரந்தரர் பெருமாள் மீது மிகுந்த பக்தி கொண்டு, அவர் திருநாமங்களையே பாடிக்கொண்டு ஒரு சிறந்த ஹரிதாசராக விளங்கினார். அது முதல் அவருக்கு புரந்தரதாஸர் என்ற பெயர் உண்டாயிற்று.

ஸ்ரீபுரந்தர தாஸர், ஸ்ரீவ்யாஸராஜரை குருவாக அடைந்தார். குரு அவருக்கு "புரந்தர விட்டல" என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார். தாஸர் அது முதல் கையில் தம்புரா, மார்பில் துளசி மணிமாலை, காலில் சதங்கை இவைகளுடன் எம்பெருமானின் நாமசங்கீர்த்தனையை எங்கும் பரப்பி வந்தார். அவர் இயற்றிய கீர்த்தனைகள் ஆயிரக்கணக்கானவை என்றும், அவற்றில் நூற்றுக்கணக்கானவைகளே இப்போது வழக்கத்தில் இருந்து வருவதாக வித்வான்கள் கூறுவர்.

அவருடைய கீர்த்தனைகள் கண்ணபிரானின் திவ்ய சேஷ்டிதங்களையும், எம்பெருமானின் கருணை மற்றும் குணங்களையும் பரக்கப்பேசும். அவருடைய கீர்த்தனைகள் கன்னடம் மற்றும் சமஸ்க்ருதம் முதலிய மொழிகளில் மிகவும் பிரஸித்தம். மிகவும் எளிமையானவை. எளிதில் புரிந்து கொள்ளக் கூடியவை. வேதம், உபநிஷத், ஸ்ரீமத்பகவத் கீதை முதலியவற்றில் சொல்லப்பட்ட விஷயங்கள் அவருடைய கீர்த்தனைகளில் காணலாம்.

மஹாலக்ஷ்மியையும் போற்றிப் பாடிய கீர்த்தனை இப்போதும் தெருவெல்லாம் ஒலிக்கின்றன. ஸ்ரீபுரந்தரதாஸர் ஒரு வாக்கியக்காரர். அதாவது கீர்த்தனைகளை இயற்றுபவர். அதோடு லக்ஷணகாரர் அதாவது அவைகளுக்குத் தானே இசை அமைப்பவர். தன் கீர்த்தனைகளைத் தானே பாடி எங்கும் பரப்பினவர். அவருடைய கீர்த்தனைகள் எங்கும் பரவி ஒலிக்கின்ற தனால், சங்கீத வித்வான்கள் அவரை "சங்கீத பிதாமகன்" என்றே போற்றுகின்றனர்.

அவருடைய கீர்த்தனைகள் பக்திரஸம் பொருந்தி னவை. சில கீர்த்தனைகள் எம்பெருமான் ஸ்ரீமந்நாராய ணனிடம் சரணாகதியை உறுதிப்படுத்தும். "நவகோடி நாராயண" என்று அழைக்கப்பட்ட ஸ்ரீபுரந்தர தாஸர் "நாராயண பக்தர்" ஆனார். தங்க – வைர நகைகளையே அணிந்து வந்த ஸ்ரீநிவாஸனின் கைகளில், ஸ்ரீபுரந்தர தாஸரானவுடன் தம்புரா திகழ்ந்தது. கழுத்திலே தங்க ஆபரணகளுக்குப் பதில் துளசி மாலை துலங்கியது. பணம் பொருள் வேண்டி வந்தவர்களை அலட்சியப் படுத்தியவர், ஆயிரக்கணக்கான பக்தர்கள் சூழ ஹரி நாம சங்கீர்த்தனம் பண்ணி மகிழ்ந்தார். எல்லாம் எம்பெருமானின் அருளன்றோ!

ஸ்ரீபுரந்தர தாஸர் திருமலையப்பனைப் புகழ்ந்து பாடிய ஒரு கீர்த்தனையை இங்கு அநுபவிப்போம்.

*"வெங்கடாச்சல நிலயம் வைகுண்ட புரவாஸம்"* என்னும் கீர்த்தனையில், ஸ்ரீவைகுண்ட புரவாஸனான எம்பெருமான்தான் திருமலையப்பனாகத் திகழ்கிறான். அவன் செந்தாமரைக் கண்ணன். பரம பவித்ரமானவன் (எல்லோரையும் புனிதமாக்கக் கூடியவன்). சங்கு சக்கரங்களை ஏந்தி நிற்கிறான்.

பத்மாவதித் தாயாருக்கு வல்லபன், எண்ணற்ற திருக்கல்யாண குணங்களையும் திருநாமங்களையும் உடையவன். தும்புரு நாரதர் இவர்களால் கானம் செய்யப்படுபவன். மகர குண்டலங்களை காதில் அணிந்திருப்பவன் எல்லோர் மனதையும் கொள்ளை கொள்ளும் மதன கோபாலன். புரந்தர தாஸராகிய, பக்தன் என்னையும் ரக்ஷிப்பவன்" என்கிறார்.

*"ஜகதோத்தாரண அடிசதளே யசோதே"* என்னும் கீர்த்தனையில் யசோதை கண்ணனைத் தன் மகன் என்று மட்டும் அறிவாள் போலும். அவனோ உலகைப் படைத்து, காக்கும் ஜகத் ரக்ஷகன். அவள் என்ன பாக்கி யம் செய்தாளோ! அவனோடு கொஞ்சி விளையாடு கிறாள்.

எம்பெருமான் குணக்கடல், திருக்கல்யாண குணங்கள் நிறைந்தவன். உலகத்தையெல்லாம் உய் விப்பவன். யசோதை இதனை அறிகிறாளில்லை. மகன் என்று மட்டுமே எண்ணி அவனுடன் விளையாடி மகிழ் கிறாள். வேதங்கள் நன்கு தேடியும் அவனை முற்றிலும் அறியவில்லை. அவன் எண்ணற்கு அரியவன். மிக்கப் பெரியவன். சிறுவர்களில் மாணிக்கம் போல் விளங்கு பவன். இவ்வளவு பெருமை வாய்ந்தவனை, மகன் என்று மட்டுமே எண்ணி யசோதை கண்ணனுடன் விளை யாடுகிறாள்.

எம்பெருமான் அணுவைக்காட்டிலும் சிறியவன். பெரிய வஸ்துவைக்காட்டிலும் மிகப் பெரியவன். அதா வது சிறிய வஸ்துவிலிருந்து பெரிய வஸ்துக்கள் எல்லா வற்றிலும் உள்ளும் புறமும் நிறைந்தவன். அவன் காலத் தாலும், தேசத்தாலும், வஸ்துவாலும் அளவிட முடியாத வன். இவ்வுண்மைகளை யசோதை அறிந்தாளில்லை. அவனை மகன் என்று மட்டுமே அறிந்து அவனுடன் விளையாடுகிறாள். எம்பெருமான் புருஷோத்தமன். அவனே பரவாசு தேவன் புரந்தர விட்டலன். அவனை புரந்தர தாஸர் போற்றிப் புகழ்கிறார். அந்தக் கண்ண னுடன் யசோதை விளையாடி மகிழ்கிறாள்.

என்ன அற்புதமான கீர்த்தனை! கண்ணனின் பெருமையைப் பேசி, அவன் யசோதையுடன் விளையா டுவதை விளக்கி அவனுடைய எளிமையை புரந்தர தாஸர் தனக்கே உரிய (பாணியில்) மொழியில் அருளிச் செய்கிறார்.

**ஸப்தகிரி சந்தாதாரர்கள் தயவு செய்து முகவரியை முறைபடுத்துவதன் பொருட்டு 0877-2264543 தொலை பேசியில் தங்கள் முழு முகவரி, அஞ்சல் எண், செல்போன் எண்ணை அலுவலக பணி நாட்களில் (காலை 10:30 மணி முதல் மாலை 5:00 மணிக்குள்) மீண்டும் ஒரு முறை தெரியப்படுத்தவும். மேலும் sapthagiri_helpdesk@tirumala.org க்கு இமெயில் அனுப்புவதன் வாயிலாகவும் தெரிவியுங்கள்.**



பகவத் கீதை - இளைய சமுதாயம்

# தலைமையின் குணங்கள்

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ்- 6304428489

ஒவ்வொரு மனிதனும் ஏதாவது ஒரு காலகட்டத்தில் தலைவனாக இருந்திருப்பான். ஒருவன் தன் வீட்டில் தலைவனாகவோ, இன்னொருவன் தன் பரம்பரைக்குள் தலைவனாகவோ, மற்றொருவன் தன்னைச் சுற்றியுள்ள பகுதிக்கு தலைவனாகவோ, மற்றும் ஒருவன் தன் மாவட்ட அளவில் தலைவனாகவோ, வேறொருவன் மாநிலஅளவில் தலைவனாகவோ, மற்றொருவன் ஒரு நாட்டிற்கோ அல்லது உலகளவிலோ தலைவனாகவோ இருந்திருக்கலாம். ஆனால் தலைவனானவர்கள் அனைவரிடமும் சில குணநலன்கள் சம அளவில் உண்டு. அவர்களில் சில குணநலன்கள் கண்டிப்பாக உண்டு. எவரும் பிறந்தவுடனே தலைவனாவதில்லை. ஆனால் அவனில் தலைவனாவதற்கான குணங்கள் நிச்சயமாக இருக்கும். எனவே தலைவனாகக் கூடியவனிடம் தலைமைப் பண்புகளை வகிப்பதற்கான தீவிரமான லட்சயங்கள் இருக்கும். அந்த தீவிரமான லட்சயத்துடனே அவன் முன்னோக்கிச் சென்று, சிறந்த பாதையில் தன்னுடைய லட்சயத்தை சாதிக்கின்றான்.

பகவத் கீதையில் தலைமையின் பண்பு நலன்கள் குறித்து பனிரெண்டாவது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது. அவற்றில் சிலவற்றை பற்றி இங்கு அறிந்து கொள்வோம். தலைமைக்கான குணங்களில் முதன் முதலில் வெறுப்பு இன்றி இருத்தலாகும். தலைவன் என்பவர் பத்து பேருடன் கலந்து பணி புரிய வேண்டியிருக்கும். எவரிடமும் வெறுப்பின்றி இருந்தால்தான் அவர் அனைவரிடமும் கலந்து பணி புரிய முடியும். அதுமட்டுமின்றி நம்மை வெறுக்காதவர்களிடமே அபிமானமும், கௌரவமும் இருக்கும். இரண்டாவதான முக்கிய குணம் அனைவரிடமும் நட்பு. வெறுப்பின்றி இருப்பது முதன்மையான நற்குணம் என்றால், அனைவரிடமும் கலந்து ஒற்றுமையுடன் இருப்பது தலைவனின் இரண்டாவது குணநலனாகும். அடுத்ததாக நல்லொழுக்கம் எனும் கருணை குணம் கலந்திருப்பது.

இவ்விதமாக தலைவனுக்கு இருக்கக்கூடிய மூன்று முக்கிய குணங்களை மூன்று விதமாக அவர்கள் உபயோகித்துக் கொள்கின்றனர். எதிரியானாலும் தலைவன் என்பவன் அவர்களை வெறுக்க மாட்டான். எதிரியிடமிருந்து கூட ஏதாவது ஒன்றினை கற்றுக் கொள்ள வேண்டிய நல்குணம் இருக்கும் என எண்ணுவதே தலைவனின் கொள்கைகளில் முதன்மையானதாகும். அவர் அனைவரிடமும் நட்புடன் இருப்பார்.

நால்வரின் உதவி இல்லையெனில் எவராலும் முன்னோக்கிச் செல்ல முடியாது. அடுத்ததாக கருணை எனும் கம்பீரமான நல்லொழுக்க குணமாகும். நல்லொழுக்க குணமுடைய தலைவன் எந்நாளும் எதையும் அலட்சியம் செய்ய மாட்டான். மேலும் அவர்களுக்குத் தேவையான அனைத்தினையும் நிறைவேற்றிக் கொண்டு, அவன் உயர்ந்த நிலைக்குச் செல்ல முயற்சிகளை செய்வான். சத்ரபதி சிவாஜி தன்னுடைய 8

ஆம் வயதில் படையெடுப்பை துவங்கி, 50 வயது பூர்த்தியானபோது 400 க்கும் மேற்பட்ட கோட்டைகளை தன் வசம் பெற்றிருந்தார். அவற்றில் அதிகளவு வெற்றியின் வாயிலாகக் கைப்பற்றப்பட்டவையே. மற்றைவை அவரால் நிர்மானிக்கப்பட்டவை.

எனினும் இங்கு சிவாஜி மகாராஜா தன்னை பின்பற்றுபவர்களில் தெளிவானவர்களுக்கும், தைரியமுடன் இருப்பவர்களுக்கும் முழுமையான ஊக்கத்தை அளித்து, புதிய புதிய கோட்டைகளைக் கைப்பற்றுவதற்கு முழுச் சுதந்திரம் அளித்திருந்தார். அவர்கள் அக்கோட்டைகளை கைப்பற்றியதுடன், அக்கோட்டைகளுக்கு அவர்களையே அதிபதியாகவும் நியமித்தார். இது தான் ஒரு சிறந்த தலைவனின் குணமுமாகும். இது சிறியோரிடம் கருணை காட்டுவதற்குச் சமமானதாகும்.

"வெறுப்பின்றி இருப்பவன், அனைத்து உயிர்களிடத்தும் நட்புள்ளவன், கருணையுடையவன், மமதை அற்றவன், அகங்காரமற்றவன், சுகம்துக்கத்தை சமமானதாக எண்ணுபவன் எனக்கு மிகவும் பிரியமானவனாகிறான்" என்று பகவத் கீதையில் ஸ்ரீகிருஷ்ண பகவான் தெரியப் படுத்துகிறார். முதலில் கூறப்பட்ட மூன்று குணங்களோடு மமதை, அகங்காரம் இன்றி இருப்பதும் தலைவனுக்குறிய நற்குணங்களாகக் கூறப்படுகின்றன.

உண்மையில் இந்நற்குணங்கள் இல்லையெனில் அனைவரிடமும் நட்புறவு என்பது சாத்தியமற்றதாகும். மமதையுடன் இருப்பவன் அதாவது கருமி குணம் கொண்டவனால் தர்மத்தை கடைபிடிக்க முடியாது. அவனுடைய எண்ணங்கள் குறுகியதாக இருக்கும். அதே போன்று அகங்காரத்துடன் இருப்பவனிடமிருந்து அனைவரும் விலகியே இருப்பர். சுகம் துக்கத்தை சமமானதாக எண்ணுதல் தலைவனின் மற்றொரு முக்கியமான நற்குணமாகும்.

எந்த ஒரு செயலிலும் வெற்றி தோல்வி உண்டு. அப்போது எதையும் எதிர்கொள்ளும் குணம் தலைவனுக்கு இருத்தல் வேண்டும். உண்மையான தலைவன் என்பவன் தான் பெறும் வெற்றிகளுக்கு தன்னுடன் இருப்பவர்களே காரணம் எனக் கூறுவர். அதேபோன்று தோல்வி ஏற்படின் அதற்கு தானே பொறுப்பு என்றும் ஏற்றுக் கொள்வர். எனவே இளைஞர்கள் முதலிலிருந்தே தலைவனுக்கான நற்குணங்களை தன்னில் ஏற்படுத்திக் கொள்ள முயற்சித்தல் வேண்டும். இன்றைய காலகட்டத்



தில் இவ்வுலகில் எதுவும் சாத்தியமே. எனவே முதலிலிருந்தே தலைமைக்கான நற்குணங்களை கடைப்பிடித்து, தலைமைக்கு முயற்சித்தால் அவை தானகவே நம்மை வந்து சேரும்.

தலைவனுக்கு இருக்கக் கூடிய இந்த சில முக்கிய குணநலன்களை கவனித்தால் அவையாவும் மனதிற்கு சம்மந்தப்பட்டவைகளாகவே இருக்கும். அதாவது தலைவன் செய்ய வேண்டிய முதல் செயல் மனதினை கட்டுப்படுத்துவதேயாகும். எந்த ஒரு தலைவன் மனதினை கட்டுப்படுத்துகிறானோ அவன் நிச்சயமாக இவ்வுலகில் சிறப்பானவனாக விளங்குகிறான். அவன் அனைவரின் மனதினையும் கொள்ளை கொள்கிறான். சாதாரணமாக இவ்வுலகம் தம்மை வழி நடத்த தலைவனை எதிர் நோக்கி உள்ளது. எனவே நீங்கள் தலைவனாக விளங்க வேண்டுமெனில் அதற்கான வீரசாகசங்களை அரங்கேற்றினாலே இவ்வுலகம் உங்கள் தலைமையை போற்றும். அதற்கான நற் குணங்களை பகவத்கீதை மிக விரிவாக தெரியப் படுத்துகின்றது.

பகவத்கீதை தொடரும்...

# கூரத்தாழ்வானின் ஆசார்ய பக்தி

– செல்வன் பி. முரளி பிரசன்ன, சேத்துபட்டு



பெருமாள் கோயில் எனும் திருக்கச்சி மாநகருக்கு வடமேற்கு திசையில் விளங்கும் கூரமாநகரில், கலியுக (4109) ஸௌம்ய வருடத்தில், தை மாதம் ஹஸ்த நட்சத்திரத்தில் "திருமறுமார்பன்" என்று தமிழிலும், வடமொழியில் "ஸ்ரீவத்ஸாங்கமிச்ரர்" என்றும் வழங்கப் பெற்ற திருநாமத்தை உடையவராய் இந்த மஹான் அவதரித்தார்.

ஸ்ரீமந்நாராயணனே பரதத்வம் என்பதை உணர்ந்து பகவானிடத்தே சதா சர்வகாலமும் பக்தியில் ஈடுபட்டவர்களை, ஆழங்கால்பட்டவர்களை "ஆழ்வார்கள்" என்று வைணவ சம்ப்ரதாயத்தார் அழைப்பர். ஆழ்வார்கள் தம் செயலையும் விஞ்சி நிற்பவராய் "திருமறு மார்பன்" விளங்கினபடியால் அவரையும் வைணவ சான்றோர் "கூரத்து ஆழ்வார்" என்றே அழைக்கலாயினர். அப்பெயரே நிலை பெற்றதாயிற்று. எனினும் கூரத்தாழ்வார் என்னும் பெயரும் வெறும் "ஆழ்வான்" என்று ஆனதன் அதிசயத்தை மேலே காண்போம். ஆழ்வானின் ஆசார்ய பக்திக்கு எடுத்துக் காட்டாகத் திகழும் ஒன்று அது.

### ஆழ்வானின் ஆசார்ய பக்தி :

எண்ணில் பல்குணத்த புருஷ குணங்களில் ஒரு சேர அமையப் பெற்றவர் கூரத்தாழ்வான். "ஆழ்வானது ஐச்வர்யமே நம்மை இங்ஙனே மயக்கிற்று? என்று ஒரே ஒரு முறை காஞ்சிப் பேரருளாளன் தேவாதி ராஜன் கேட்டு விட்டார் என்பது அறிந்து உடனடியாகத் தம் ராஜ்ஜியத்தையும் (கூரநகர்) பெருஞ்செல்வத்தையும் ஒரு சேர முற்றும் துறந்து, காஞ்சி வந்து சேர்ந்து இராமாநுஜரையே தம் ஆசார்யனாகப் பற்றிக் கொண்டு, ஆசார்யருடனேயே ஸ்ரீரங்கம், திருக்கோட்டியூர் எனப் பல திவ்ய தேசங்களுக்கும் சென்று, தன் கால பர்யந்தம் சிஷ்யராக, இராமாநுஜரின் வலக்கை போல விளங்கிய மஹான் இவர்.

சோழ அரசன் ஒருவனால் தம் ஆசார்யனான இராமாநுசருக்கு ஏற்படவிருந்த பெரும் அபாயத்தை நீக்கிட எண்ணி, தாமே இராமாநுஜர் என்னும்படியாக வேடமிட்டு, சோழ அரசனின் சபைக்குச் சென்று, வைஷ்ணவ தர்ஸனத்துக்காகத்தன் கண்களையே இழந்து நின்றவர் கூரத்து ஆழ்வான். அதுமட்டுமின்றி சோழ அரசனால் மேலும் உபத்திரங்கள் இராமாநுஜருக்கு ஏற்படாமல் இருக்க, அவரை அங்கிருந்து தப்பித்துச் செல்லுமாறு அறிவுரை கூறி அனுப்பி வைத்தவர், கல்வி, செல்வம், குலம் என்ற முக்குறும்பறுத்த மஹா வள்ளலான கூரத்தாழ்வான்.

நம்மாழ்வாரைப் போன்று, எம்பெருமானுடைய எளிமைக் குணத்தில் தம்மைப் பறி கொடுத்து மோகித்து மூர்ச்சையடைந்து விட்ட கூரத்தாழ்வானை, ஆசார்யனான இராமாநுஜர் ஓடி வந்து, "ஆழ்வான், ஆழ்வான், ஆழ்வான்" என்று வியந்து கொண்டாடி தட்டியெழுப்ப, அன்று முதல் தன்னை எல்லோருமே "ஆழ்வான்" என்று கூப்பிடுவதையே தாம் பெருமையாகக் கருதுவதாகக் கூறி அன்று முதல் "ஆழ்வான்" என்றே அழைக்கப்பட்டவர் நம் கூரத்தாழ்வார்.





# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

ஸ்ரீ. உ.வே. பி.டி. சேஷாத்ரி ஸ்வாமி, சென்னை.
99404 28830

*காவ்யாலாபாம்ச்ச கேசித் கீதாநி ஸகலாநிச ।*
*சப்த₃ மூர்த்திர் த₄ரஸ்யதே விஷ்ணோர் அம்சா*
*மஹாத்மந: ॥*

என்று புராண ரத்னமான ஸ்ரீவிஷ்ணு புராணம் கோஷிக்கிறது. அதாவது "காவியங்களும், கீதங்களும், மற்றுமுண்டான சாஸ்திரங்களும் மூர்த்தங்களாயும், அமூர்த்தங்களாயும் இருக்கிற பதார்த்தங்களும் சொல் வடிவான ஸ்ரீமந்நாராயணனின் திருமேனியே".

உலகத்தின் மூலப்பொருளாக விளங்குவது ஒலியேயாகும். அவ்வொலியானது எழுத்து, சொல், பொருள், வாக்கியம், நூல் என பலவாறாக விரியும். உலகமானது எம்பெருமானிடமிருந்து தோன்றியது.

*தானே உலகெல்லாம் தானே படைத்திடந்து*

–திருவாய்மொழி 10–5–3

என்று குலபதியின் அருள்வாக்கு சேவிக்கத் தக்கது. ஆக ஒலியானது எம்பெருமானிடமிருந்து தோன்றியது. இவ்வொலிகள் சேர்க்கையினால் உண்டானதே மொழியாகும். இந்த ஒலிக்கு இதுவே அடையாளம் என காட்ட பல எழுத்துக்களை கொண்ட பல்வேறு லிபிகள் தோன்றியது. அவ்வகையில் உச்சரிப்பும் எழுத்தும் முழுவதும் ஒன்றாகவே உள்ள மொழி ஸம்ஸ்க்ருத மொழியாகும். பொதுவாக உலக மொழிகள் பலவற்றில் எழுத்திற்கும், உச்சரிப்பிற்கும் பொது விதி இல்லாமல் இருப்பதை காண்கிறோம். பாணினீய சிக்ஷையில்,

*வ்யாகரீ யதா ஹரேத் புத்ரான்*
*தம்ஷ்ட்ராப்யாம் ந ச பீடயேத் ।*
*பீதா பதன பேதாப்யாம்*
*தத்ததி வர்ணான் ப்ரஜாயதே॥*

என்று காட்டப்படுகின்றது. அதாவது ஓர் புலியானது தன் குட்டிகளை கவ்விக்கொண்டு போவது போல் அக்ஷரங்களை உச்சரிக்க வேண்டும் என்று கட்டளையிடுகின்றது. ஓர் மொழி என்பது சொல்லையும், பொருளையும் கொண்டது. பேசுபவனின் இயல்புக்குச் சார்ந்து சொற்களும், பொருட்கள் பலவற்றைத் தருகின்றது.

உதாரணத்திற்கு 1)கோசம், 2) நிகண்டு என்கிற இரு சொல்லை எடுத்துக் கொண்டோமாயின், ஒரு சொல் பற்றிய விளக்கம் கோசம் எனப்படும். ஒரு பொருளை விளக்குகின்ற சொற்கள் பலவற்றின் தொகுப்பு நிகண்டு என்று வழங்கப்படுகின்றது. (எ.கா.) யாஸ்கர் நிகண்டு, அமர கோசம் முதலியன.

நம் பாரத நாடு பல மொழிகளை தன்னிடத்தே கொண்டு திகழ்கின்றது. இத்தேசத்தில் உள்ள மொழிகள் காலத்தினால் பலவிதமான உருமாற்றம் பெற்றுள்ளது. அது போன்று எவ்வித உருமாற்றமும் பெறாமல் அன்று முதல் இன்று வரை நிலைப் பெற்றுள்ள மொழி ஸம்ஸ்க்ருதமாகும்.

ஸம்ஸ்க்ருதம் என்பது இந்தியாவின் முதுமொழிகளில் ஒன்று. இம்மொழியானது ஆசார்யன் – சிஷ்யன் என்கிற குருமுகமாக தொன்று தொட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றது. காலத்தினால் தொன்மையாகவும், அளவில் நீண்ட பரப்பையும் கொண்டு திகழ்கின்றது. இலக்கண வழக்கில் இம்மொழி கடைபிடிக்கப்பட்டதன் காரணத்தினாலேயே இதற்கு "ஸம்ஸ்க்ருதம்" (பண்படுத்தப்பட்ட தூய்மை செய்யப்பட்ட) என்று பெயர்.

ஸம்ஸ்க்ருதத்தின் தொன்மைக்குச் சான்றாக பண்டை காலத்தில் சுமார் எழுபதுக்கும் மேற்பட்ட இலக்கண ஆசிரியர்கள் இருந்ததை, யாஸ்கரின் நிருக்தத்தினால் அறிய முடிகிறது.

நம் தேசத்தின் கருவூலங்களான வேதம், வேதாந்தம், வேதாங்கங்கள், ஸ்ருதிகள், இதிஹாஸ புராணங்கள், காவ்ய நாடகங்கள், தோத்திரங்கள்,

மற்றுமுண்டான சாஸ்திரங்கள் இம்மொழியில் உள்ளது பற்றியே இதன் தொன்மையை அறியலாம்.

திராவிட வேதமான நாலாயிர திவ்ய பிரபந்தங் களை (அருளிச் செயல்களை) பாடியருளிய ஆழ்வார் கள் இம்மொழியினை கொண்டாடி பாடுகின்றனர். அவற்றில் சிலவற்றை காண்போம்.

1) நம்மாழ்வார் – திருவாய்மொழி – 8–9–8 வட மொழி மறை

2) குலசேகராழ்வார் – (1–4) அவ்வடமொழியை

3) திருமங்கையாழ்வார் – (திருநெடுந்தாண்டகம்– 4) செந்திறத்த தமிழ் ஓசை வடசொல்லாகி

4) திருமங்கையாழ்வார் – (பெரிய திருமடல் – 40) மன்னும் வடநெறியே வேண்டினோம்.

என்று போற்றுவதை அறிவோமாக.

மேலும் தெய்வப் புலவரான ஐயன் திருவள்ளுவரின் திருக்குறளில் முதல் குறளான

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

என்பதில் 1) அகரம், 2) ஆதி 3) பகவன் 4) உலகு என்னும் நான்கு சொற்கள் தற்சமங்களும், தற்பவங்க ளுமாய் கலந்திருப்பதை எளிதாக நாம் அறியலாம்.

மேலும் சில பல சொற்கள் பொருள் வேறுபாட்டி னால் வடமொழியிலும், தென்மொழியிலும் வேறுபாடு அற்றிருக்கும்.

(எ.கா) :

1) அண்டர் – வடமொழியில் தேவர்கள் (அண்டக் குலத்துக்கு –திருப்பல்லாண்டு–5)

2) அண்டர் – தென் மொழியில் இடையர்கள் (அண்டர் மிண்டிப் புகுந்து – பெரியாழ்வார் திருமொழி 1–5)

இந்திய பாரத தேசத்தின் கலாசாரத்தினை, பண் பாட்டினை நன்கு அறிய விரும்புவோர், முதலில் அறிய வேண்டிய மொழி ஸம்ஸ்க்ருதம் ஆகும்.

அதனின் பெருமையை அறிந்ததினால் மேல் நாட்டினைச் சேர்ந்தவர்களான 1) சர்வில்லியம் ஜோன்ஸ் 2) கோல்புருக் 3) பாப்கிரீம் 4) மாக்ஸ்முல்லர் 5) புருக்மன் 6) விட்னி என்று பலர் இம்மொழியின் சிறப்பினையும், மாண்பினையும் தங்களின் நூல்களில் காட்டியுள்ளனர்.

இம்மொழியை கற்க ஆசைப்படுபவர்கள் முதலில் நாகரி லிபியையும், மொழி இலக்கணத்தையும் கற்ற பின்னரே சாஸ்திரங்களையும், இலக்கியங்களையும் கற்பது என்பது இதற்கென்றே ஏற்பட்ட பழைய முறையாகும்.

அவ்வகையில் முதலில் எழுத்துக்களை அறிய வேண்டி, இத்தொடரில் எழுத்துக்கள், சிறு சொற்கள், சுபாஷிதங்கள், நீதி வகைகள் என்கிற முறையில் இம்மொழியினை கற்போம். நம் பாரத நாட்டின் உயர்ந்த பொக்கிஷத்தினை எல்லோரும் அடைவோமாக.




1. கருட சேவையை தரிசனம் செய்தால் கிடைக்கும் பலன் என்ன?
2. பெருமாள் பள்ளி கொள்வது எந்த கோலம்?
3. நாராயண நாமத்தின் மகிமை என்ன?
4. ஸ்ரீமத் பகவத்கீதை எத்தனை சுலோகங்கள் கொண்டது?
5. பகவத் கீதையில் உள்ள மூன்று யோகங்கள் யாவை?
6. எந்த மாநிலம் பரசுராம க்ஷேத்ரமாகும்?
7. வீரநரசிம்மப் பெருமாள், நீலமேகப் பெருமாள், மணிக்குன்றப் பெருமாள் தனித்தனியாக கோவில் கொண்டுள்ள ஒரே திவ்ய தேசம் எது?
8. பெருமாள் எத்தனை கோலங்களில் காட்சி அளிக்கக்கூடியவர்? அவை யாவை?
9. அர்ஜுனன் மணந்த ஸ்ரீகிருஷ்ணரின் தங்கை பெயர் என்ன?
10. ராம ஜன்ம பூமியான அயோத்தியில் உள்ள நதியின் பெயர் என்ன?

விடைகளுக்கு 46ம் பக்கம் பார்க்கவும்

தொகுப்பு : பட்டுக்கோட்டை டி.ஆர். மனோகர், தஞ்சாவூர்



# தி.தி.தே. ஆலய தரிசனம் (பாக்கேஜ் டூர்)



## ஆந்திர மாநில சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கழகம்

### 1. திருப்பதி உள்ளூர் ஆலய தரிசனம் (தினமும்)

| டிக்கெட்டின் விலை | பேருந்து புறப்படுமிடம் | முறை | புறப்படும் நேரம் |
|---|---|---|---|
| ஏ.சி. அற்றது–ரூ.100/–<br>ஏ.சி. –ரூ.150/– | ஸ்ரீநிவாசம் & விஷ்ணு நிவாசம் கட்டிடத்தொகுதி, திருப்பதி | 6<br>(ஆறு) | காலை 6 மணி முதல் மதியம் 1 மணி வரை |
| (10 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு கட்டணம் கிடையாது) | | | |

### தரிசிக்கும் ஆலயங்கள்

1. ஸ்ரீ பத்மாவதி தாயார் திருக்கோயில் – திருச்சானூர்
2. ஸ்ரீஅகஸ்தீஸ்வர ஸ்வாமி திருக்கோயில் – தொண்டவாடா
3. ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் – ஸ்ரீநிவாசமங்காபுரம்
4. ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் – திருப்பதி
5. ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி திருக்கோயில் – திருப்பதி

### 2. திருப்பதி அருகிலுள்ள ஆலய தரிசனம் (தினமும்)

| டிக்கெட்டின் விலை | பேருந்து புறப்படுமிடம் | முறை | புறப்படும் நேரம் |
|---|---|---|---|
| ஏ.சி. அற்றது–ரூ.250/–<br>ஏ.சி. –ரூ.350/– | ஸ்ரீநிவாசம் & விஷ்ணு நிவாசம் கட்டிடத்தொகுதி, திருப்பதி | 2<br>(இரண்டு) | காலை 8 மணிக்கு மற்றும் காலை 9 மணிக்கு |
| (10 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு கட்டணம் கிடையாது) | | | |

### தரிசிக்கும் ஆலயங்கள்

1. ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி திருக்கோயில் – கார்வேடி நகரம்
2. ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி திருக்கோயில் – நாகலாபுரம்
3. ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் – நாராயணவனம்
4. ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் – அப்பளாயகுண்ட்டா
5. ஸ்ரீ கரியமாணிக்க ஸ்வாமி திருக்கோயில் – நகரி
6. ஸ்ரீஅன்னபூர்ணி உடனுறை காசி விஸ்வேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் – புக்கை
7. ஸ்ரீபள்ளிகொண்டீஸ்வர ஸ்வாமி திருக்கோயில் – சுருட்டப்பள்ளி

**மேலும் விவரங்களுக்கு**

**0877-2289123, 2289120 / 121, 9848007033**

தொடர்

ஆயுர் வேதம்

# வீண் பொருட்களில் சிறந்த மருத்துவம்




தெலுங்கு மூலம் : டாக்டர். சி. மதுசூதன சர்மா.
: 90007 61390.
தமிழாக்கம் : திருமதி. வி. உஷா
9985002156


இவ்வுலகில் இயற்கையாக நமக்கு கிடைக்கப் பெறும், பயனற்ற பொருள் என்று நினைக்கப் படும், சிலவற்றின் தோல், பட்டை, விதை, நார் போன்ற பொருட்களிலும் மிக்க பலன் கொண்ட மருத்துவ குணங்கள் நிறைந்துள்ளன. அவற்றைப் பற்றி அறிந்து கொள்வோம்.

அவ்வாறு கிடைக்கப்பெறும் இயற்கைப் பொருட்களைப் பற்றி நாம் அறிந்து கொள்ளாமல் அதனை அலட்சியப்படுத்தி பயனைப் பெறாமல் இருக்கிறோம். ஆரோக்கியமான வாழ்வைப் பெறும் வாய்ப்பை இழந்து கொண்டிருக்கிறோம். ஆகையால் மருத்துவ குணங்களை சீராய் அறிந்து கொண்டு பயன் பெறுவோம்.

## வாழை பழத்தோல் :

### தோல் சம்பந்தப்பட்ட உபாதைகள் நீங்க :

சிறு சிறு துண்டுகளாக கத்தரித்த வாழைப் பழத்தோலை தேங்காய் எண்ணெய் உடன் சேர்த்து வாழைத்தோல் கருமையாக மாறும் வரை சூடுபடுத்தி, இறக்கி, நன்கு வடிகட்டி ஓர் சீசாவில் வைத்துக் கொண்டு படர் தாமரை, சொரி, சிரங்கு போன்ற தோல் வியாதிகளுக்கு மற்றும் கால் வெடிப்புகளுக்கு பூசி வந்தால் அவை குறையும்.

### முகப்பரு மற்றும் தடிப்புகளுக்கு :

வாழைப் பழத்தோலின் உள்பக்கம் உள்ள வெள்ளைப் பகுதியை முகப்பரு, தடிப்புகள் உள்ள இடத்தில் தேய்த்துக் கொண்டால் முகப்பரு மற்றும் தடிப்புகள் குறையும். மேலும் வாய்ப்புண் கூட குறையும்.

### இருமலுக்கு :

ஒரு சிட்டிகை வாழையிலை சாம்பலை தகுந்தளவு தேனுடன் கலந்து குழந்தைகளுக்கும், ஒரு கிராம் சாம்பலை தகுந்தளவு தேனுடன் கலந்து பெரியவர்களுக்கும் தந்தால், பல விதமான இருமலை வெகு விரைவாக குறையச் செய்யும்.

## ஆரஞ்சு பழத்தோல் :

### உதடுகளில் ஏற்படும் கருமை நிறம் குறைய:

ஆரஞ்சு பழத்தோல்களை நன்கு காய வைத்து பொடி செய்து கொண்டு, நாள்தோறும் ஒரு முறை போதுமான அளவு பொடியுடன், தேவையானளவு தேன் கலந்து வாயின் உதடுகளில் பூசிக்கொண்டால் கருமை நிறம் குறையும்.



ஓம் ஸமுத்ர தனயாயை நம:

75

# சாஸ்த்திர நீதிகள்



தொகுப்பு : திருநாங்கூர்
உ.வே. ஸௌந்திரராஜபட்டர்,
புதுடில்லி.

தா த்ருத்வம் ப்ரிய வக்த்ருத்வம்
தீரத்வம் உசித ஜ்ஞாதா ।
அப்யாஸேந ந லப்யதே
சத்வார சஹஜா குணா: ॥

**உண்மையான கொடுக்கும் சுபாவமும், இனிமையுடன் பேசி பழகி வருவதும், கடுமையான சொற்களை பேசாததும், கஷ்டம் வரும் காலத்திலே தைரியமாக இருப்பதும், நன்மை, தீமைகளை தெரிந்து அதன்படி நடந்து வருவதும், தன் சுய புத்தியால் ஒருவன் தெரிந்து பழக வேண்டும். இந்த விஷயங்கள் முற்பிறவியின் பயனாலும் பிறந்த குணங்களாகவே இருக்க வேண்டுமாம்!**

**மாங்கொட்டையின் பயன்கள்**

**தலையில் பொடுகுத் தொல்லை தீர :**

வாரத்தில் இரண்டு முறை மாங்கொட்டையின் பொடியில் சிறிதளவு நீர் சேர்த்து தலைக்கு பூசிக் கொண்டு அரை மணி நேரம் கழித்து சிகைக்காயால் தலைக்குளியல் செய்தால் நல்ல பலன் கிட்டும்.

**மூலவியாதிக்கு :**

மாங்கொட்டைகளை துண்டுகளாக செய்து, காய வைத்து பொடி செய்து கொண்டு, நாள்தோறும் காலை மாலை என 2 வேளை 1–2 கிராம் வீதம் 100 மி.லி. மோரு டன் கலந்து குடித்து வந்தால் மூல வியாதி குறையும்.

**இருமல், சுவாசக்கோளாறு, வயிற்றில் எரிச்சல் ஆகியவை குறைய :**

மாங்கொட்டைப் பொடியை 1–2 கிராம் வீதம் 2 வேளை தகுந்தளவு சர்க்கரையை கலந்து உட்கொண் டால் வயிற்றில் எரிச்சல் குறையும். இதனை தேனுடன் கலந்து எடுத்துக்கொண்டால் பல விதமான இருமல்கள் குறையும். அதுமட்டுமின்றி பெண்களுக்கு பெரிய பிரச்சனையான வெள்ளைப்படுதல் ஆகியனவும் குறையும்.

**தேங்காய் நார் - ஓடு :**
**வயிற்றுப்போக்கு குறைய:**

நாள்தோறும் இரண்டு வேளை 200 மி.லி. நீருடன், தேங்காய் நாரை 15 கிராம் அளவு எடுத்துக்கொண்டு, 100 மி.லி. ஆகும் வரை நன்கு கொதிக்க வைத்து, வடிகட்டி உட்கொண்டால் வயிற்றுப் போக்கு குறையும்.

**வயிற்றில் எரிச்சல் குறைய :**

தேங்காய் நாரை நன்கு சுட்டு அந்த சாம்பலை ஜல்லித்து வைத்துக் கொண்டு, காலை மாலை என 2 வேளை ஒரு கிராம் பொடியை 200 மி.லி. மோருடன் கலந்து குடித்து வந்தால் வயிற்றில் எரிச்சல் குறையும்.

**சரும வியாதிகள் குறைய :**

தேங்காய் ஓட்டினை நன்கு காய வைத்து, பின்னர் எரித்து, அந்த சாம்பலை ஜல்லித்து வைத்துக் கொண்டு, நாள்தோறும் ஒரு வேளை அந்த சாம்பலுடன் தேங்காய் எண்ணெய் கலந்து சரும வியாதிகளுக்கு தடவி வந்தால் வெகு விரைவாக குணமாகும்.

**குறிப்பு :**

மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர் வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெறவும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவே தவிர நோய்களுக்கு நிரந்தர தீர்வு அல்ல.

ஆயுர்வேதம் வளரும்...

ஓம் ஜயாயை நம:

## சிறுவர் பகுதி விடைகள்

1. மறுபிறவி இல்லாத ஸ்ரீவைகுண்டம்.
2. சயனத் திருக்கோலம்.
3. நாராயண நாமத்தைச் சொல்பவர்களின் பல்லாயிரம் பாவங்களும் அழிந்து விடும்.
4. 700 ஸ்லோகங்கள் கொண்டது.
5. 1) கர்ம யோகம், 2) ஞானயோகம், 3) பக்தி யோகம்.
6. கேரளா.
7. தஞ்சாவூர்.
8. நான்குத் திருக்கோலங்கள் : 1) சயனத்திருக் கோலம், 2) நின்றத்திருக்கோலம், 3) இருந்த திருக்கோலம், 4) நடந்தத் திருக்கோலம்.
9. சுபத்ரை.
10. சரயு.

தொகுப்பு : பட்டுக்கோட்டை டி.ஆர். மனோகர், தஞ்சாவூர்.

## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# திருமலையில் ஆர்ஜித சேவைகள்

| வ. எண். | சேவைகளின் பெயர் | அனுமதிக்கப் படும் நபர்களின் எண்ணிக்கை | ஆஜராக வேண்டிய நேரம் | சேவை நேரம் | சேவையின் தொகை |
|---|---|---|---|---|---|
| | **தினசரி சேவைகள்** | | | | |
| 1. | சுப்ரபாதம் | ஒருவர் | காலை 2-00 | காலை 3-00 | ரூ. 120/- |
| 2. | தோமாலை சேவை (செவ்வாய், புதன், வியாழன்) | ஒருவர் | காலை 3-00 | காலை 3-30 | ரூ. 220/- |
| 3. | அர்ச்சனை (செவ்வாய், புதன், வியாழன்) | ஒருவர் | காலை 4-00 | காலை 4-30 | ரூ. 220/- |
| | **தினசரி உற்சவங்கள்** | | | | |
| 4. | கல்யாணோத்ஸவம் | இருவர் | காலை 10-00 | நன்பகல் 12-00 | ரூ.1,000/- |
| 6. | டோலோத்ஸவம் (ஊஞ்சல் சேவை) | ஒருவர் | காலை 11-00 | பிற்பகல் 1-00 | ரூ. 200/- |
| 5. | ஆர்ஜித பிரம்மோத்ஸவம் | ஒருவர் | பிற்பகல் 12-30 | பிற்பகல் 2-00 | ரூ. 200/- |
| 7. | வசந்தோத்ஸவம் | ஒருவர் | பிற்பகல் 2-30 | பிற்பகல் 3-00 | ரூ. 300/- |
| 8. | ஸஹஸ்ர தீப அலங்கார சேவை | ஒருவர் | மாலை 5-00 | மாலை 5-30 | ரூ. 200/- |
| | **வாராந்திர சேவைகள்** | | | | |
| 9. | விசேஷபூஜை (திங்கள்) | ஒருவர் | காலை 6-00 | காலை 6-30 | ரூ. 600/- |
| 10. | அஷ்டதளபாத பத்மாராதனம்(செவ்) | ஒருவர் | காலை 5-00 | காலை 5-30 | ரூ.1,250/- |
| 11. | ஸஹஸ்ரகலசாபிஷேகம் (புதன்) | ஒருவர் | காலை 5-00 | காலை 5-30 | ரூ. 850/- |
| 12. | திருப்பாவாடை சேவை (வியாழன்) | ஒருவர் | காலை 5-00 | காலை 5-30 | ரூ. 850/- |
| 13. | ஆடை அலங்கார சேவை (வெள்ளி) | இருவர் (தம்பதியர்) | காலை 3-00 | காலை 4-00 | ரூ.12,250/- |
| அ. | பூராபிஷேகம் (வெள்ளி) | ஒருவர் | காலை 3-00 | காலை 4-00 | ரூ. 750/- |
| 14. | நிஜபாத தரிசனம் (வெள்ளி) | ஒருவர் | காலை 4-30 | காலை 5-30 | ரூ. 200/- |
| | **வருடாந்திர சேவைகள்/உற்சவங்கள்** | | | | |
| 15. | தெப்போத்ஸவம் (பிப்ரவரி / மார்ச்) | ஒருவர் | மாலை 6-00 | இரவு 7-00 | ரூ. 500/- |
| 16. | வஸந்தோத்ஸவம் (மார்ச்/ஏப்ரல்) | ஒருவர் | பிற்பகல் 1-00 | பிற்பகல் 2-00 | ரூ. 300/- |
| 17. | பத்மாவதி பரிணயம் (மே) | ஒருவர் | மாலை 4-00 | மாலை 4-30 | ரூ.1,000/- |
| 18. | அபிதேயக அபிஷேகம் (ஜூன்) | ஒருவர் | காலை 8-00 | காலை 8-00 | ரூ. 400/- |
| 19. | புஷ்ப பல்லக்கு (ஜூலை) | ஒருவர் | மாலை 6-30 | இரவு 7-30 | ரூ. 200/- |
| 20. | பவித்ரோத்ஸவம் (ஆகஸ்டு) | ஒருவர் | காலை 8-00 | காலை 9-00 | ரூ.2,500/- |
| 21. | புஷ்பயாகம் (நவம்பர்) | ஒருவர் | காலை 8-00 | காலை 9-00 | ரூ. 700/- |
| 22. | கோயில் ஆழ்வார் திருமஞ்சனம் (வருடத்திற்கு நான்கு முறை) | ஒருவர் | காலை 10-00 | காலை 11-00 | ரூ. 300/- |

**இணைய தள பதிவு :**

மேல்காணும் சேவைகளை இணைய தளத்தின் மூலமாக பதிவு செய்து கொள்ள முடியும். மேலும் தகவல்களுக்கு தி.தி.தே. இணையதளம் www.tirumala.org/www.ttdsevaonline.com மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.

**தொடர்புக்கு**

Call Center : 0877-2233333/2277777,
Toll Free No.:1800 425 4141,
1800 425 333333,
Whatsapp No.:9399399399
eMail:helpdesk@tirumala.org



# 2020
# ஜனவரி மாத ராசி பலன்

திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர், 9949922677

| | | | |
|---|---|---|---|
| சந்திரன் | (யுரேனஸ்) | | ராகு |
| நெப்ட்யூன் | ஜனவரி - 2020<br>8 – சுக்ரன் – கும்பம்<br>13 – புதன் – மகரம்<br>14 – சூரியன் – மகரம்<br>11 – யுரேனஸ் – வ.நி.<br>30 – புதன் – கும்பம் | | |
| சுக்ரன் | | | |
| குரு<br>புதன் சனி<br>கேது சூரியன்<br>ப்ளூட்டோ | செவ்வாய் | | |

**மேஷம்**
ராசிநாயகன் செவ்வாய் எட்டாமிடத்தில் உலவிடினும் அது அவருக்கு சுய வீடானதால் ஆராய்ச்சி யாளர்கள் வெற்றி ஈட்டுவர். உடல் நலனில் கவனம் தேவை. இரண்டிற்குரிய சுக்ரன் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்க உள்ளார். குரு ஒன்பதில் சூரியனுடன் இணைவதால் பூர்வீகச் சொத்துக்களில் தடை அகலும்.

**ரிஷபம்**
சுக்ரன் இம்மாதத்தில் தொழில் வீடாகிய பத்தாமிடத்தில் சஞ்சரிப்பார். தொழிலில் மேன்மையும், வளர்ச்சியும், புகழும் உண்டாகும். அலுவலகப் பணியாளர்களின் கடின மற்றும் உண்மையான உழைப்பிற்கு உரிய அங்கீகாரம் கிடைக்கும். புதன் மாதப்பிற்பாதியில் ஒன்பதில் சஞ்சரிப்பார்.

**மிதுனம்**
ராசி நாயகன் புதன் ஜனவரி 12 வரை ஏழாமிடத்தில் சஞ்சரிப்பார். வாழ்க்கைத் துணைவரின் உடல் நலனில் அக்கறைச் செலுத்த வேண்டும். ஜனவரி 13 முதல் மாத இறுதி வரை எட்டாம் வீட்டில் உலவிடு வார். இக்காலத்தில் மாணவர்களுக்கு வெகுவாகக் கவனச் சிதறல்கள் ஏற்படும். எச்சரிக்கைத் தேவை.

**கடகம்**
கடனைத் திருப்பிச் செலுத்துவீர்கள். மாத இறுதி வரை சுக்ரன் எட்டாமிடத்தில் சஞ்சரிப்பதால் ராசி நாதன் ஒன்பதில் உலவ இம்மாதம் ஆரம்பமாகிறது. ஏழில் சுக்ரன் உள்ளதால் குடும்பத்தில் சுப காரியம் நிகழும். கலைஞர்களுக்கும் பெண்களுக்கும் செழிப்பான சூழ்நிலை நிலவி வரும்.

**சிம்மம்**
ராசி நாதன் குருவுடன் ஐந்தில் உலுவுகிறார். முதலிரண்டு வாரம் வரை மிகவும் சிறந்த யோகமான காலமாகும். அதிர்ஷ்டக்காற்று வீசும் நேரம். எதிர்ப்புகளைக் கடந்து தொழிலில் வெற்றி பெறுவீர்கள். அரசு சம்பந்தமான காரியங்கள் எளிதில் நிறைவேறும். தொலைதூரத் தொடர்பால் நலம் உண்டாகும்.

**கன்னி**
குரு நான்கிலும், சுக்ரன் ஐந்திலும் உலவிட இம்மாதம் ஆரம்பமாகிறது. நான்காமிடத்தில் கேது மற்றும் விரயாதிபதி சூரியனும் அமர்ந்துள்ளனர். நிலம், மனை, வீடு ஆகியன வாங்குவது விற்பது போன்ற விஷயங்களில் சட்ட நிபுணர்களின் ஆலோசனைகளின் படி செயல்பட வேண்டியது அவசியம்.

**துலாம்**
மூன்றாம் இடத்தில் கூட்டுக்கிரகச் சேர்க்கை ஏற்பட்டுள்ளது. திட்டமிட்டபடி செயல்பட இயலாது போகலாம். முதல் வாரத்திற்குப் பின் சுக்ரன் நான்காமிடத்திற்குப் பெயர்ச்சியாகிறார். தாய் வழி சொந்தங்களால் அனுகூலம் ஏற்படும். குழந்தையில்லாதவர்களுக்கு அப்பாக்கியம் உண்டாகும்.

**விருச்சிகம்**
யோகக்காரக் கிரகங்களான சூரியனும், குருவும் 2ல் உலவிட இம்மாதம் தொடங்குகிறது. ராசி நாயகன் ராசியில் சஞ்சரிக்கிறார். எடுத்த காரியங்களில் வெற்றி காண்பீர்கள். திடீர் அதிஷ்ட வாய்ப்புகளும் சிலருக்கு உண்டு. உத்தியோகத்தில் பதவி உயர்வு இடமாற்றம் ஊதிய உயர்வு உண்டாகும்.

**தனுசு**
ராசியில் குருவும், சூரியனும் இருப்பினும் சனியும் கேதுவும் உள்ளது சிலாக்கியமில்லை. புது முயற்சிகளில் ஈடுபடுமுன் பெரியோர்கள் வல்லுநர்களின் ஆலோசனைகளைப் பெறவும். இரண்டாவது வாரம் முதல் சுக்கரன் தனஸ்தானத்தில் உலவிடுவதால் பணப்பற்றாக்குறை ஏற்படாது.

**மகரம்**
ராசி நாதன் சனி விரய வீட்டுச் சஞ்சாரம் சிறப்பாகாது. எனினும் யோகக்காரகன் சுக்ரன் ராசியில் சஞ்சரிக்கிறார் பின்னர் இரண்டாம் வீட்டிற்குச் செல்கிறார். இம்மாதம் பணத்தட்டுப்பாடு ஏற்படாது. தோற்றப்பொலிவு கூடும். புத்திசாலித்தனம் பளிச்சிடும். புதிய ஆடை, அணிகள் சேரும்.

**கும்பம்**
லாபஸ்தானத்தில் கூட்டுக் கிரகயோகம் ஏற்பட்டுள்ளது. துணிச்சலான காரியங்களில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். அரசு மூலம் எதிர்ப்பார்த்திருந்த உதவி இப்பொழுது கிடைக்கும். எதிரிகள் அடங்கிப் போவார்கள். மாணவர்கள் போட்டி பரிட்சைகள் மற்றும் விளையாட்டுகளில் வெற்றி காண்பார்கள்.

**மீனம்**
புதிய தொழில் தொடங்க புதிய நண்பர்களின் அறிமுகம் கிட்டும். நீதிமன்ற வழக்கில் எதிர்ப்பாராத திருப்பம் ஏற்படும். நான்கில் ராகு உலவுவதால் நிலம், மனை, வீடு, வாகனம் வாங்குவது, விற்பதில் கவனம் தேவை. மாணவர்கள் கல்வியில் ஊக்கம் குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி :
(பெரிய எழுத்துக்களில்) ________________

________________

________________

________________

மாவட்டம் &பின்கோடு எண் __________ ☐☐☐☐☐☐

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ. 60/- ☐ ரூ. 500/-

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை

(எம்.ஒ.கூபன் (எண்) : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை

(டி.டி. எண்.) : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

**உங்களுக்காக**

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.60/- ஆயுள்சந்தா ரூ.500/-டி.டி.ஐ பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம். திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூபனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விபரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.
- சமஸ்க்ருதம் மொழி ஸப்தகிரி பத்திரிக்கைக்கு ஆயுள் சந்தா இல்லை. வருடச்சந்தா மட்டுமே உண்டு.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.

ஓம் தேவ்யை நம:



# திருப்பதியில் கீதா ஜெயந்தி உற்சவம்

மிகவும் புனிதமான கார்த்திகை மாதத்தில், மோக்ஷ ஏகாதசி நாளில் திருமலை திருப்பதி தேவஸ்தானம், இந்து தர்ம பிரச்சார பரிஷத் மற்றும் இஸ்கான் அமைப்பு இணைந்து டிசம்பர் 7ஆம் தேதியன்று திருப்பதி எஸ்.வி.உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் மிக அற்புதமாகவும், மிக வைபவமாகவும் கீதா ஜெயந்தி உத்ஸவத்தை நடத்தியது. இந்த அற்புதமான நிகழ்ச்சிக்கு கடந்த மூன்று மாதங்களாக ஆர்வமுடன் பணிகள் நடைபெற்றன. அந்த பணியின் பலனே ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகள் உயர்நிலைப் பள்ளி வளாகத்திற்கு கூட்டம் கூட்டமாக வந்திருந்து, பரம உன்னதமான கீதா ஜெயந்தி உத்ஸவத்தில் கலந்து கொண்டது. கீதா ஜெயந்தி உத்ஸவத்தை இவ்வளவு பெரிய அளவில் திருமலை திருப்பதி தேவஸ்தானம் நடத்துவது இதுவே முதல் முறை. இவ்வளவு அற்புதமான நிகழ்ச்சிக்குத் தேவையான ஆலோச னைகளை அளித்து, இறுதி வரை இருந்து நடத்தி வெற்றி பெறச் செய்தவர் இணை செயலாட்சித்தலைவர் திரு. பி.பசந்த்குமார் ஐ.ஏ.எஸ்., அவர்கள். அவரது வழிகாட்டலின்படி இந்து தர்ம பிரச்சார பரிஷத் செயலாளர் பேராசிரியர் கே. இராஜகோபாலன் அவர்கள் நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார்.

பகவத் கீதை வாழ்வின் பாதை. பகவத்கீதை எதிர் காலத்தை திட்டமிடுவதற்கான திவ்யமான நூலாகும். பகவத்கீதை அனைத்து மனித குலத்திற்கும் வழிகாட்டக் கூடிய குலமற்ற, மதமற்ற, தேசமற்ற, வட்டாரமற்ற நூலாகும். திருமலை திருப்பதி தேவஸ்தான கல்விக் கூடங்கள் மற்றும் இதர கல்விக் கூடங்களிலிருந்தும் 10 ஆயிரம் மாணவ மாணவியரோடு கீதா ஜெயந்தி உத்ஸவம் நடத்த வேண்டும் என திருமலை திருப்பதி தேவஸ்தானம் எண்ணியது. அனைத்து ஏற்பாடுகளும் டிசம்பர் 6ஆம் தேதியன்று நிறைவுற்றது. ஆனால் 7ஆம் தேதி அதிகாலை முதலே தூறல் ஆரம்பமானது. அனைத்து இடையூறுகளையும் ஸ்ரீகிருஷ்ண பகவானிடத்தில் சமர்ப்பித்து அதிகாரிகள் முன்னோக்கிச் சென்றனர். “வெப்பத்தை அளிப்பவனும் நானே, மழையை தடுத்து நிறுத்துபவனும் நானே, பொழியச் செய்பவனும் நானே” என்று ஸ்ரீகிருஷ்ண பகவான் பகவத் கீதையில் ஒன்பதாவது அத்தியாயத்தில் பத்தொன்பதாவது சுலோகத்தில் கூறியுள்ளதை நினைவுபடுத்திக் கொண்டு, மழையை நிறுத்தும்படி பிரார்த்தித்து அனைவரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



மழைத்துளியையும் பொருட்படுத்தாமல் ஆயிரக்கணக்கான பிள்ளைகளும் உயர் நிலைப்பள்ளி வளாகத்திற்கு வந்தடைந்தனர். இவர்களனைவரும் உற்சாகத்துடன் கீதா ஜெயந்தி உத்ஸவத்திற்கு திரண்டு வந்தது கண்களுக்கு விருந்தாகவே அமைந்தது. வளாகத்தை மிக அழகாக அலங்கரித்திருந் தனர். மாணவ மாணவியரும் தங்கள் பள்ளிக் கென ஒதுக்கப்பட்ட இடங்களில் ஆஜரா



கினர். கீதாஜெயந்தி நிகழ்ச்சி சுமார் 10.30 மணியளவில் துவங்கியது. அதற்குள் ஆயிரக்கணக்கில் மாணவ மாணவியர் தங்களுக்கான இடங்களில் அமர்ந்தனர்.

மேடையில் கலைஞர்கள் அன்னமய்யாவின் கீர்த்தனைகளால் அனைவர் மனதிலும் பக்தியை உண்டாக்கினர். நிகழ்ச்சியை பேராசிரியர் கே.இராஜகோபலன் அவர்கள் தலைமை தாங்கி நடத்தினார். இந்நிகழ்ச்சியில் இஸ்கான் பிரதிநிதியாக டாக்.வைஷ்ணவாங்கிரி சேவக்தாஸ், லீலாபாராயணதாஸ் கலந்து கொண்டனர். ஸ்ரீமதி சாய்பிரசன்னா – விசாகப்பட்டிணம், திருவேங்கடவன் பல்கலைக்கழக துணைவேந்தர், தி.தி.தே. கல்வி அலுவலர், பாரதீய வித்யா பவன் பிரதிநிதி, இராமகிருஷ்ணா மடம் பிரதிநிதி, விசாகதரங்கிணி பிரதிநிதி, சின்மயா மிஷன் பிரதிநிதி முதலானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். கீதையை பற்றிய செய்திகளை விவரிப்பதற்காக ஸ்ரீஸ்ரீஸ்ரீவித்யாசங்கர பாரதி தீர்த்த ஸ்வாமிகள் வந்திருந்தார். முக்கிய விருந்தினராக தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பா ரெட்டி அவர்களும், சிறப்பு விருந்தினராக சந்தரகிரி சட்டசபை உறுப்பினர் திரு. செவிரெட்டி பாஸ்கர் ரெட்டி அவர்களும் வந்திருந்தனர். திரு. அனில் குமார் சிங்ஹால் ஐ.ஏ.எஸ். செயலாட்சித்தலைவர் தி.தி.தே., திரு.ஏ.வி. தர்மா ரெட்டி கூடுதல் செயலாட்சித் தலைவர், தி.தி.தே. அவர்களும் கௌரவ விருந்தினர்களாக அழைக்கப்பட்டனர்.

இந்நிகழ்ச்சியின் முதல் பகுதியாக பிரம்ம குமாரிஸ் பிரதிநிதிகளின் மூலமாக ஓம்கார தியானம் செய்யப்பட்டது. பிறகு ஸ்ரீவேங்கடேஸ்வரா நடன கல்லூரி பிரதிநிதிகளின் மூலமாக பிரார்த்தனை நடைபெற்றது. அதன் பிறகு மேடையில் வீற்றிருந்தவர்களால் குத்துவிளக்கு ஏற்றப்பட்டது. பிறகு பேராசிரியர் கே. இராஜகோபாலன் அவர்கள் வரவேற்பு உரை மூலம் மேடையில் இருந்தவர்களை அறிமுகப்படுத்தி வைக்க, அதன் பிறகு எஸ்.வி. உயர் வேதத்யாயன சிறப்பு அதிகாரி டாக். ஆகெள்ள விபீஷண சர்மா அவர்கள் கீதா பாராயண சிறப்பினை விவரித்தார். கீதையில் உள்ள முக்கிய அம்சங்களையும் தெரிவித்தார். அடுத்ததாக கீதா ஜெயந்தி விழாவின் முக்கியகட்டம் ஆரம்பமாயிற்று. அதாவது ஆயிரக்கணக்கான மாணவர்களோடு பகவத்கீதையின் 15வது அத்தியாயம் பாராயணம்



ஒரு மனதாக செய்தனர். ஸ்ரீவேங்கடேஸ்வர வேத பல்கலைக்கழக மாணவர்கள் ராகத் தோடு கீதா சுலோகத்தை பாராயணம் செய்ய, ஆயிரக்கணக்கான மாணாக்கர்களும் அதே ராகத்துடன் கீதா பாராயணம் செய்தனர். சுமார் பத்து நிமிடங்கள் அவ்வளாகம் முழுவ தும் கீதா பாராயணத்தால் நிரம்பியிருந்தது. அனைவரின் இதயமும் பராயணத்தில் ஒன்றி இருந்தது. இவ்விதமாக கீதா பாராயணம் முடிந்தவுடன் பதினேழாவது அத்தியாயத் தின் சிறப்பினை திருமதி. சாய் பிரசன்னா அவர்கள் சிறப்பாக விவரித்தார். பகவானை













அறிந்து கொள்வது அனைவரிடமும் வெளிப்படையாக இருக்கக் கூடிய கலை என்றும் தெரியப்படுத்தினார். கீதையை பற்றி மாணாக்கர்களுக்கு விவரிப்பதற்காக வந்திருந்த புஷ்பகிரி பீடாதிபதி ஸ்ரீஸ்ரீஸ்ரீவித்யாசங்கர பாரதி தீர்த்த ஸ்வாமிகள் பதினேழாவது அத்தியாயத்தின் சிறப்பினை அனைவருக்கும் புரியும்படி விவரித்தார்.

முக்கிய விருந்தினரான திரு. ஒய்.வி. சுப்பா ரெட்டி அவர்கள் உரையாற்றும் போது இந்து தர்ம பிரச்சாரத்தில் திருமலை திருப்பதி தேவஸ்தானம் முழு கவனம் செலுத்தி வருகிறது என்றும், இந்து தர்ம பிரச்சாரத்தில் நாங்கள் மேலும் சிறந்த முறையில் சிறப்பாக செயல்படுவோம் என்றும், அதற்கு இந்த கீதா ஜெயந்தி உத்ஸவமே எடுத்துக்காட்டு என்றும் கூறி னார். சிறப்பு விருந்தினராக வந்திருந்த திரு. செவிரெட்டி பாஸ்கர் ரெட்டி அவர்கள் உரையாற்றும் போது பகவத்கீதை அனைவருக் கும் வாழ்க்கை முறையினை பற்றி தெரியப்படுத்துகிறது என்று கூறினார். நானும் இதே பள்ளி வளாகத்தில் ஒரு மாணவனாக அமர்ந்திருக்கிறேன் என்று தன்னுடைய பழைய நினைவுகளை குறித்தும் நினைவு கூர்ந்தார்.

இணைச்செயலாட்சித்தலைவர் திரு. பி.பசந்த் குமார் அவர்கள் கீதா ஜெயந்தி உத்ஸவம் சிறப்பாக நடைபெறுவது தமக்கு மகிழ்ச்சியளிப்பதாகக் கூறினார். பிறகு இஸ்கான் பிரதிநிதி டாக்.வைஷ்ணவாங்கிரி சேவக்தாஸ் அவர்கள் உரையாற்றும் போது வாழ்க்கையில் வெற்றி பெற பகவத்கீதையே வழி என்றும், அதன் வாயிலாகவே அனைவருக்கும் செல்வம், வெற்றி, அசாதாரண சக்தி, நீதி கிடைக்கும் என்றும், வெற்றி வேண்டாமென்று எண்ணுபவர்களுக்கும் வெற்றி அளிக்கக்கூடியது கீதையே என்றும் கூறினார். இஸ்கான் அமைப்பினர் பத்தாயிரம் பேருக்கும் கீதா ஜெயந்தி உத்ஸவ அட்டையை வழங்கினர். அதில் கீதை வெற்றி உரை லேமினேட் செய்து அளிக்கப்பட்டது.

மாணவர்களனைவரும் இந்த கீதா ஜெயந்தி உத்ஸவ அட்டையை தாம் படிக்கும் இடத்தில் சுவற்றில் ஒட்டி வைத்து, அதில் கூறியுள்ள சுலோகத்தை தினமும் மூன்று முறை உச்சரித்தல் வேண்டுமென டாக். வைஷ்ணவாங்கிரி சேவக்தாஸ் அவர்கள் தன்னுடைய உரையில் தெரிவித்தார். மாணாக்கர்களும் கீதா ஜெயந்தி அட்டையுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டு தங்களுடைய உற்சாகத்தைத் தெரியப்படுத்தினர். இராமகிருஷ்ணா மடம் பிரதிநிதி திரு. அனுபமானந்தா ஸ்வாமிகள் உரையாற்றும் போது கீதையில் கூறியுள்ளபடி அனைவரும் தைரியமுடன் நின்று அனைத்தினையும் சாதித்தல் வேண்டும் என்றார். பாரதீய வித்யா பவன் பிரதிநிதி திரு. சத்யநாராயண ராஜு, விகாச தரங்கிணி பிரதிநிதி டாக். நாகேந்திரசாய் அவர்களும் கீதையை



குறித்து உரையாற்றினர். இறுதியாக திரு. ஆதித்ய ராம் அவர்கள் சுயமாக கீதையை குறித்து இயற்றிய இசைப்பாடலுடன் கீதா ஜெயந்தி நிகழ்ச்சி நிறை வுற்றது. இறுதியாக திரு. பி.பசந்த் குமார் அவர்கள் இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக பங்கு பெற்றவர்களுக்கு ஸ்வாமி பிரசாதமாக சால் வையை அணிவித்து, லட்டு பிரசாதங்களை வழங்கி னார். அதன் பிறகு நிகழ்ச்சியை வெற்றியுடன் நடத் திய பேராசிரியர் கே. இராஜகோபலன் அவர்களும் கௌரவிக்கப்பட்டார். இஸ்கான் அமைப்பினரும் சிறப்பு விருந்தினர்களுக்கு பகவத் கீதை வினாவிடை காலண்டரை வழங்கினர்.

கீதா ஜெயந்தி நிகழ்ச்சிக்கு வந்திருந்த மாணாக் கர்களுக்கு திருமலை திருப்பதி தேவஸ்தானத்தார் குடிநீர், பிஸ்கெட் பாக்கெட், 15வது அத்தியாயத் திலுள்ள சுலோகங்கள் அச்சிடப்பட்ட காகிதம், இஸ் கான் அமைப் பினர் அளித்த கீதா ஜெயந்தி லாமினேசன் அட்டையையும் வழங்கினர். முதலில் சிறிது தூறல் ஆரம் பித்தாலும், கீதா பாராயணம் வேளையில் வானிலையில் மாற்றம் ஏற்பட்டு மழை நின்றது. ஆகாயத்தில் மேகக் கூட்டம் இருந்ததால் மாணாக்கர்களுக்கு வெயில் கூட பட வில்லை. இவை யாவும் ஸ்ரீநிவாச பத்மாவதியின் அருளே என்று பாவித்து அனைவரும் கீதா ஜெயந்தி கொண்டாட் டத்தில் மகிழ்ந்தனர்.

மதியம் 12 மணி வரை இந்த கீதா ஜெயந்தி நிகழ்ச் சியை ஸ்ரீவேங்கடேஸ்வரா பக்தி சேனலில் நேரடி ஒளி பரப்புச் செய்தனர். இவ்வளவு பெரிய நிகழ்ச்சியை எவ் விதத் தடங்கலுமின்றி நடைபெற சிறப்பாக பாதுகாப்பு வசதிகளை அளித்திட்ட காவலர்களுக்கும், இதர பாது காப்பு அமைப்பினருக்கும், நிகழ்ச்சியை நிர்வகித்தவர் களுக்கும் நன்றியை தெரிவித்தனர். அச்சமயத்தில் அனை வரின் இதயத்திலும் பகவத்கீதை நிரம்பியிருந்தது. அது மட்டுமின்றி டாக். வைஷ்ணவாங்கிரி சேவக்தாஸ் மாணாக் கர்களுக்கு இறுதியாகக் கூறிய வார்த்தைகளை நீங்களும் அறிந்து கொள்ளுங்கள். பகவத்கீதை உதவியுடன் எதிர் காலத்தை மாற்றியமைப்போம்.

“கல்விக்கெல்லாம் அரசன் பகவத்கீதை
வெற்றியை அளிப்பது பகவத்கீதை
விதியை மாற்றியமைப்பது பகவத்கீதை
வெற்றி வேண்டாமென்றாலும் வெற்றியை
தருவது பகவத்கீதை”

எனவே பகவத்கீதையை ஒரு கையில் வைத்துக் கொண்டு, மற்றொரு கையில் வெற்றிப் பதக்கங்களைப் பெறுவோம்.

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ்- 6304428489



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# பக்தர்கள் சேவையில்...



## தாயார் பிரம்மோத்ஸவ கொடியேற்றத்தில்...

நவம்பர் 23, 2019 சனிக்கிழமை அன்று திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு நடைபெற்ற கார்த்திகை பிரம்மோத் ஸவ துவஜாரோஹணம் நிகழ்ச்சியில் தி.தி.தே. பொறுப் பாண்மைக் குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்களும், தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு. அனில் குமார் சிங்ஹால் ஐ.ஏ.எஸ். அவர்களும் கலந்து கொண்டனர்.

## தாயாருக்கு ஆந்திர மாநில அரசு சார்பில் பட்டுவஸ்த்திரம்...





டிசம்பர் 01, 2019 அன்று திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பிரம்மோத்ஸவத்தின் இறுதியாக, பஞ்சமி தீர்த்தம் நிகழ்ச்சியை முன் னிட்டு ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு ஆ.மா. அரசு சார்பில் மாண்புமிகு துணை முதல்வர் திரு. நாராயண ஸ்வாமி பட்டு வஸ்த்திரங்களை சமர்ப்பித்தார். இந்நிகழ்ச்சியில் தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத் தலைவர் திரு.ஒய்.வி. சுப்பா ரெட்டி தம்பதியினரும் பங்கு கொண்டு ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு கண்டாபரணம் மற்றும் பட்டு வஸ்த்திரங்களை சமர்ப்பித்தனர்.



## ஸ்ரீரங்கநாத ஸ்வாமிக்கு தி.தி.தே.சார்பில் பட்டு வஸ்த்திரம்...

டிசம்பர் 8, 2019 அன்று தமிழ் நாட்டில் புகழ் பெற்ற வைணவ திருத்தலமான ஸ்ரீரங்கத்தில் உள்ள ஸ்ரீரங்கநாத ஸ்வாமி ஆலயத்தில் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்களையும், தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு. அனில்குமார் சிங்ஹால் ஐ.ஏ.எஸ். அவர்களையும் ஸ்ரீரங்கநாத ஸ்வாமி ஆலய தலைவர், அர்ச்சகர்கள் சாம்பிரதாய முறைப்படி வரவேற்றனர். பிறகு அவர்கள் பட்டு வஸ்த்திரங்களை தலை மீது சுமந்து கொண்டு வீதி வலமாகச் சென்று ஸ்வாமிக்கு சமர்ப்பித்தனர். தரிசனத்திற்குப் பிறகு ஆலய அதிகாரிகள் ஸ்ரீரங்கநாத ஸ்வாமியின் தீர்த்தப் பிரசாதங்களை அவர்களுக்கு வழங்கினர்.

*Edited and Published on behalf of T.T.Devasthanams by **Dr. K. Radha Ramana**, M.A., M.Phil., Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by **Sri. R.V. Vijayakumar,** B.A., B.Ed., Dy. E.O. (Publications & Press), T.T.D. Press, Tirupati - 517 507.*

## தாயார் பஞ்சமி தீர்த்தம், சக்கர ஸ்நான திருக்காட்சி



23-11-2019 முதல் 01-12-2019 வரை
நடைபெற்ற திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார்
வருடாந்திர பிரம்மோத்ஸவ திருக்காட்சிகள்





தி.தி.தே. பழம் மற்றும் மலர் கண்காட்சிச் சாலையை துவக்கி வைக்கும் தி.தி.தே.
பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள், உடன்
தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. அனில்குமார் சிங்ஹால், ஐ.ஏ.எஸ்., அவர்கள்



தாயார் சேவையில்...



தி.தி.தே. சார்பில் தாயாருக்கு சீர்வரிசை
சமர்ப்பிக்க ஊர்வலமாகச் சென்ற பக்தர்கள் குழாம்



கலை அரங்கேற்ற காட்சிகள்

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams
printing on 25-12-2019. Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742, Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020

